# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஆனி 29, 2018. இதழ் - 19


## வீதி விபத்துக்கள் ஒரு தொடர்கதை...



ஒட்டுனர்களுக்கு பயணிகள் குறித்த பொறுப்புடமை அவசியம்

(பக்கம் -04 )



## தலைநகரில் தோன்றிய விஹாரைகளின் பின்னணியில் மறைந்திருக்கும் அரசியல்

இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்னர், கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களுடன் மேலும் சில சிறிய இராச்சியங்களையும் கொண்டிருந்தது.

(பக்கம் -08 )



## சவுதியில் ஆண் அனுமதியின்றி பெண்களால் செய்ய முடியாத சில விடயங்கள்

(பக்கம் -16 )



## தொற்றா நோய்கள் மனிதர்கள் உருவாக்கிக் கொண்டதே!

(பக்கம் -21 )



# ‘கிழக்கு மக்களின் கோரிக்கையை த.தே. கூட்டமைப்பு பரிசீலிக்க வேண்டும்’ - வியாழேந்திரனுக்கு ஆதரவாக சித்தார்த்தன் கருத்து

## கிழக்கு மக்கள் அமைப்புக்களும் இதனையே வலியுறுத்துவதாகவும் கூறுகிறார்

கிழக்கின் மக்கள் மற்றும் பொது அமைப்புக்களால் வலியுறுத்தப்படும் “தமிழ் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிடல்” போன்ற கோரிக்கைகளை தமிழ் தேசியக்கூட்டமைப்பு கருத்தில் எடுத்து ஆராய்ய வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் அமைப்பின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

‘ஒவ்வொரு மாவட்டம் மற்றும் மாகாணங்களில் வாழும் மக்களுக்கு அங்கங்குள்ள நிலைமைகளின் அடிப்படையில் யதார்த்தங்கள் வேறுபடலாம்.

அனைத்து தமிழர்களுக்குமான ஒரு கட்சி என்ற வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கான தீர்வை வென்றெடுக்கும் முயற்சிகளுடன் சேர்த்து, அந்தந்த பிராந்திய மக்களின் பிரத்தியேக பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்’ என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

‘கிழக்கின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வியாழேந்திரன், அந்த மாவட்ட மக்கள் மற்றும் அமைப்புக்கள் வலியுறுத்தும் “தமிழ் கட்சிகள் ஒரே பட்டியலில் போட்டியிட வேண்டும்” என்ற விடயத்தை அழுத்திக் கூறிவருகின்றார். அவர் மாத்திரமல்லாமல் கிழக்கின் பெரும்பாலான மக்களும், பல அமைப்புக்களும் இந்த விடயத்தை வலியுறுத்தி வருகின்றன. ஆகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மக்களின் அந்த கோரிக்கையை சாதகமாக பரிசீலிக்க வேண்டும்’ என்றும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

‘காணி அபகரிப்பு மற்றும் நிலப்பறிப்பு போன்ற விடயங்களால் கிழக்கு மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வரும் நிலையில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்தி, உறுதி செய்வதற்கான அந்த மாகாண தமிழ் மக்களின் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படவும் வேண்டும்’ என்றும் அவர் கூறினார்.

‘கிழக்கில் மாத்திரமல்லாமல், வடக்கிலும் உள்ளூராட்சி சபையில் ஆட்சியை அமைக்க பேரினவாதக் கட்சிகளின் ஆதரவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற முடியுமானால், தமிழ் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒரே அணியாக தேர்தலில் போட்டியிடுவதும் நியாயமானதே’ என்றும் சித்தார்த்தன் வலியுறுத்தினார்.

“ஒரே அணியில் தமிழ் கட்சிகள் போட்டியிடல்” என்ற விவகாரம் தொடர்பில் அண்மைக்காலமாக வியாழேந்திரன் எம்பிக்கும், தமிழ் தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையில் சில வாதப் பிரதிவாதங்கள் இங்கு ஓரளவு வெளிப்படையாகவே இடம்பெற்று வருகின்றன. அந்த நிலையிலேயே வியாழேந்திரனுக்கு ஆதரவாக சித்தார்த்தன் அவர்களின் இந்தக் கருத்து வந்திருக்கின்றது.

கிழக்கு தமிழர் ஒன்றியம் போன்ற அமைப்புக்கள் உட்பட கிழக்கு மாகாணத்தின் சில முக்கிய அமைப்புக்களால், கிழக்கில் தமிழ் கட்சிகள் ஒரே அணியில் வரும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை

தொடர்ச்சி... (பக்கம் -23 )







# நீரில் மூழ்கியவரை காணவில்லை



இப்பாகமுவ குளத்தில் குளிக்க சென்ற ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

குளத்தில் நீராடச் சென்ற குழு ஒன்றுடன் சென்ற மாவத்தகம, இங்குருவத்தையை சேர்ந்த ஒருவரே, நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாத்திரை சென்ற குழுவைச் சேர்ந்த குறித்த நபர், குளத்தில் நீராட சென்ற போதே இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளார்.

பிரதேசவாசிகளின் உதவியுடன் காணாமல் போனவரை தேடும் பணிகள் நடப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றார்.

# மும்பையில் விமான விபத்து 5 பேர் பலி

மும்பையில் உள்ள கட்கோபர் பகுதியில் தனியார் விமானம் ஒன்று கட்டட வேலை நடந்து கொண்டிருந்த கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இது தொடர்பாக ஊடகங்களிடம் பேசிய உத்தரபிரதேச மாநில கூடுதல் டிஜிபி ஆனந்த் குமார், ”விபத்துக்குள்ளானது உத்தரபிரதேச விமானம் அல்ல என்று விமான போக்குவரத்துத்துறை இயக்குநர் கூறியுள்ளார். ஒரு தனி நபருக்கு உபி அரசு விமானத்தை விற்றுள்ளது. இன்னும் முழுமையான தகவல்கள் வெளிவரவில்லை” என்றார். சம்பவம் குறித்து பேசிய மும்பை நகர தலைமை தீயணைப்பு அதிகாரி பிரபத் ரஹன்கட்லே, 12 நபர்கள் பயணிக்கக்கூடிய டைப் சி-90 ரக தனியார் விமானம், கட்டுமானத்தில் இருந்த கட்டடம் மீது மோதியதாக கூறினார். அதில் 4 பயணிகள் இருந்ததாக சந்தேகப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். அதில் ஒருவர் விமானி மற்றும் 3 நபர்களில், இரண்டு பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரபத் தெரிவித்தார்.

# தேங்கிய தபால்களை விரைவாக விநியோகிக்கத் திட்டம்

தபால் ஊழியர்கள் கடந்த சில தினங்களாக மேற்கொண்ட வேலைநிறுத்தம் காரணமாக தேங்கிக் கிடக்கும் தபால்கள் மற்றும் பொதிகள் இரண்டு நாட்களுக்குள் விநியோகிக்கப்படவுள்ளதாக அரச தகவல் திணைக்கள அறிக்கை கூறுகின்றது.

இதற்கான விசேட வேலைத்திட்டம் நாளை மேற்கொள்ளப்படும்.

இது குறித்து தபால் ஊழியர் சங்கத்தின் முன்னணி ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டாரநாயக்க தெரிவிக்கையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் குவிந்திருக்கும் தபால்களையும் பொதிகளையும் விநியோகிக்க விசேட வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தபால் திணைக்களத்திற்காக பிரத்தியேக சேவைப் பிரமாணத்தை உருவாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளுடன் தபால் ஊழியர்கள் கடந்த 14 நாட்களாக கடமைகளைப் பகிஷ்கரித்தார்கள்.

இந்த வேலைநிறுத்தம் நேற்று நள்ளிரவு முடிவுக்கு வந்தது. இருந்த போதிலும், தமது பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வு கிடைக்கும் வரை சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தைத் தொடரப் போவதாக பண்டாரநாயக்க அறிவித்துள்ளார்.

# தெற்காசியாவில் சமாதானத்தில் இலங்கை இரண்டாவது இடம்



இவ்வாண்டுக்குரிய உலக சமாதான சுட்டெண் பட்டியலில் இலங்கை 67 ஆவது இடத்தை நோக்கி முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டிற்குரிய பட்டியலில் இருந்ததை விடவும் ஐந்து ஸ்தானங்களால் இலங்கை முன்னேறி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொருளாதாரத்திற்கும், சமாதானத்திற்குமான நிறுவனம் என்ற அமைப்பு உலகில் உள்ள 163 நாடுகள் தொடர்பான தகவல்களை ஆராய்ந்து சமாதானச் சுட்டென் பட்டியலை வெளியிடுவது வழக்கம்.

இம்முறை தெற்காசிய பிராந்திய நாடுகள் மத்தியில் இலங்கை இரண்டாவது இடத்தை பிடித்திருப்பது சிறப்பம்சமாகும்.

சமாதானப் பட்டியலின் அடிப்படையில் பிராந்தியத்தில் பூட்டான் முதலிடத்தில் உள்ளது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகள் இலங்கையை விட கீழான நிலையில் உள்ளன.

# ‘மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு 44 கோடி ரூபா ஒதுக்கீடு’



2018 ஆம் வருடத்திற்கான மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்கென தேசிய கொள்கை திட்டமிடல் பொருளாதார விவகார அமைச்சின் அங்கீகாரத்தில் 4 ஆயிரத்தி 378 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்நிதியில் 1648 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்யும் மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழுக் கூட்டம் இணைப்புக்குழுவின் இணைத்தலைவர்களான பிரதி அமைச்சர்களான எம்.எஸ்.எஸ். அமிர்அலி, அலிசாகிர் மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தலைமையில் மாவட்ட செயலக கூட்ட மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், எஸ். வியாழேந்திரன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவான்,

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# கல்மடு ஆற்றிற்குக் குறுக்கே சிறிய பாலம் அமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல்...



மட்டக்களப்பு சந்தன மடு ஆற்றின் பிரதான வீதியில் உள்ள வேரம், கல்மடு ஆற்றிற்குக் குறுக்கே பாலம் அமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் மு.முரளிதரன் தலைமையில் மேற்படி பிரதேசத்தில் இடம்பெற்றது.

மேற்படி பாலம் அமைப்பது தொடர்பில் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பிரதேச சபை உறுப்பினர் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் ஆகியோருடன் தொடர்பு கொண்டமைக்கமைவாக இன்றைய தினம் இப்பிரதேசத்திற்கான களவிஜயம் மற்றும் கலந்துரையாடல் என்பன இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது மக்களினால் சந்தனமடு ஆற்றிற்குச் செல்லும் பிரதான வீதியில் மூன்று சிறிய பாலங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. ஆனால் இந்தக் கல்மடு வேரம் பிரதேசத்தில் கல்மடு ஆற்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட வேண்டிய

தொடர்ச்சி... (பக்கம் -14 )

# 69 அடி விஸ்வரூப ஆஞ்சநேயர் ஆலய கும்பாபிசேகம்



மட்டக்களப்பு நுழைவாயில் அமைக்கப்பட்ட பிள்ளையாரடி அருள்மிகு ஸ்ரீ விஸ்வருப ஆஞ்சநேயர் திருக்கோவில் பஞ்சகுண்ட அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கும்பாபிசேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா விஞ்ஞாபன நிகழ்வுகள் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி வியாழன் காலை சுபவேளையில் பிரதிஷ்ட பிரதம குரு சபரிமலை குருசாமி சிவாகம கிரியாபூஷனம் சிவாச்சாரியார் திலகம் சிவஞான பாஸ்கரன் குருக்கள் தலைமையில் கும்பாபிசேகம் நடைபெற்றது.
கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு நகரில் ஸ்ரீ ராமபிரானின் பக்தர் ஆஞ்சநேயருக்கு தனிக்கோயில் இல்லை என்ற குறையை நிவர்த்திக்கும் வகையில் விஸ்வரூப வடிவில் 69 அடி சிலையுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ் ஆலயம் இலங்கையில் மிக உயரமான ஆஞ்சநேய சிலையையுடைய கோயில் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இவ் ஆலயத்தின் மூல மூர்த்தி இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கல் சிலை 10 அடி உயரத்தில் வலப்பக்கம் விநாயகரும், இடப்பக்கம் சீதா பிராட்டியும், இலக்குமணனும் அமையப்பெற்றுள்ளது.





# மானிப்பாயில் பெற்றோல் குண்டு தாக்குதல்

யாழ்ப்பாணம், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக வீடொன்றின் மீது வியாழன் காலை பெற்றோல் குண்டு தாக்குதல் மற்றும் வாள்வெட்டு தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாள்வெட்டுக் கும்பலால் அந்த வீட்டின் மீது நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் சம்பவம் இது என கூறப்படுகின்றது.

சுமார் 10 பேர் கொண்ட குழு ஒன்று அந்த வீட்டின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தி, வீட்டில் இருந்த மோட்டர் சைக்கிளிற்கு தீ வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டின் குடும்பத் தலைவரையும் வாளால் வெட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்தியாவுக்கு எதிரான மிரட்டல் குறித்து மன்னிப்புச் சபை கவலை

காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவிற்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை வெளியிட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கட்டாயமாக காணாமல்போனவர்களிற்காக குரல்கொடுப்பவரான சந்தியா எக்னலிகொட சமூக ஊடகங்களில் மரண அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் எதிர்கொண்டுள்ளார் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இந்த அச்சுறுத்தல்கள் கடும்கவலையளிக்கின்றன என தெரிவித்துள்ள மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி இயக்குநர் தினுசிகா திசநாயக்க அவருக்கு ஆபத்தை ஏற்படுத்த முயல்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வீதி விபத்துக்களில் உயிரிழப்போர் அதிகரிப்பு



கடந்த 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் முதல் அரையாண்டில் வீதி விபத்துக்களில் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் போக்குவரத்து பிரிவு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் 1330 பேர் உயிரிழந்ததாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் டப்ளியூ.டீ.ஏ. தனஞ்சய கூறினார்.

எவ்வாறாயினும் இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான முதல் அரையாண்டுப் பகுதியில் 1439 பேர் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை வீதி விபத்துக்களில் அகப்படுவோரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விஷேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# பாடசாலை மாணவி கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்





யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் 6 வயது பாடசாலை மாணவி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் அரசியல் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.


மாணவி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் நீதியை வலியுறுத்தியும் மாணவர்களும் பொது மக்களும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பல்கலைக்கழக மாணவர்களும் ஒரு போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

ஆயினும் இந்தப் போராட்டத்தில் அரசியல்வாதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லையென பலத்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் சுழிபுரம் சந்தியில் இன்று காலை நடைபெற்ற வீதி மறியல் போராட்டத்தில் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் மாகாண சபை உறுப்பிர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடவுச்சீட்டு தட்டுப்பாடு இரு மாதங்களில் தீரும்



அனைத்து நாடுகளுக்குமாக பயன்படுத்தக்கூடிய கடவுச்சீட்டுக்கு நிலைவிவரும் தட்டுப்பாடு இரண்டு மாதங்களில் நீக்கப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது உள்நாட்டு அலுவல்கள் மற்றும் வடமேல் மாகாண அமைச்சர் எஸ்பி நாவின்ன அனைத்து நாடுகளுக்கும் பயன்படுத்தப்படும் 10 இலட்சம் கடவுச்சீட்டை புதிதாக பெற்றுக்கொள்ளும் கோரிக்கைக்காக அனுமதிக்கான பரிந்துரையை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இதற்கு அமைச்சரவை அதிகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைவாக அனைத்து நாடுகளுக்கும் பயன்படுத்தப்படும் புதிய கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கான பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த கடவுச்சீட்டுக்கள் கிடைக்கும் வரையில் மத்தியகிழக்கு நாடுகளுக்கு பயன்படுத்தப்படும் கடவுச்சீட்டுக்கள் அனைத்து நாடுகளுக்கான கடவுச்சீட்டுக்களாக பயன்படுத்தப்பட்டுவருவதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்தார்.

# மைக்கல் ஜாக்சனின் தந்தை மரணம்



இசை கலைஞரும், பிரபல பாப் உலக சூப்பர் ஸ்டாருமான மைக்கேல் ஜாக்சனின் தந்தை ஜோ ஜாக்சன் காலமானார். அவருக்கு வயது 89.

புற்று நேயால் அவதிப்பட்டு வந்த ஜோ ஜாக்சன் புதன்கிழமை மரணமடைந்ததாக அவரது குடும்பத்தார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.


இது குறித்து ஜோ ஜாக்சனின் பேரனும், மைகேல் ஜாக்சனின் மகனுமாகிய பிரின்ஸ் மைக்கேல் ஜாக்சன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார், அதில், ”ராஜாவுக்கு இரங்கல்கள். இந்த மனிதர் மனவலிமை மற்றும் அர்ப்பணிப்புக்கு எடுத்துகாட்டாக வாழ்ந்தார்.. ஐ லவ் யூ” என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜோ ஜாக்சனின் மகள் லா டோயா, ”நான் உங்கள் மீது அன்பு வைத்திருப்பேன். நீங்கள் இந்த உலகில் பிரபலமான குடும்பமாக நம்மை உருவாக்குனீர்கள். நான் உங்களுடன் இருந்த தருணங்களை என்றும் மறக்க மாட்டேன்” என்று கூறியுள்ளார்.

மைக்கேல் ஜாக்சன் மறைவு ஜூன் 25 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது. இந்த நிலையில் மூன்று நாள் கழித்து அவரது தந்தையான ஜோ ஜாக்சனும் அதே மாதத்தில் மரணமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜோ ஜாக்சனின் மறைவுக்கு இசை உலகினரும் தங்கள் இரங்கலை தெரிவித்து வருகின்றனர்

# சவுதி :’அநாகரீகமாக’ உடை அணிந்ததாக பெண் தொகுப்பாளரிடம் விசாரணை



சவுதி அரேபியாவில் பெண் தொகுப்பாளர் ஒருவர் ’அநாகரீகமாக’ ஆடை அணிந்தது குறித்து அந்நாட்டு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சவுதியில் பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கான தடை குறித்து அவர் செய்தி வழங்கி கொண்டிருக்கும்போது, ’அநாகரீகமான’ ஆடை அணிந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஷிர்ரீன் அல்-ரி.ஃபாய் செய்தி வழங்கிக் கொண்டிருக்கும்போது, அவரது ஹிஜாப் காற்றில் பறக்க, அவர் உள்ளே அணிந்திருக்கும் ஆடை வெளியில் தெரிந்தது. அந்த காணொளி இணையத்தில் வேகமாக பரவியதையடுத்து விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில் தான் எந்த தவறும் செய்யவில்லை என அல் ஆன் தொலைக்காட்சியில் பணிபுரியம் ஷிர்ரீன் விளக்கம் அளித்துள்ளார்.

# ‘கிழக்கு மக்களின் கோரிக்கையை த.தே.கூட்டமைப்பு பரிசீலிக்க வேண்டும்’ –

தொடர்ச்சி...

முன்வைக்கப்பட்டு வருகின்றது. கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி சிவநாதன், மற்றும் செயலாளர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன் ஆகியோர், இந்த விடயம் குறித்து பல தமிழ் கட்சிகளின் தலைமைகளுடன் பேசியும் வருகின்றனர்.

இருந்த போதிலும் இதனால் பெரும் சாதகம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று கூறி தமிழ் தேசியக் கூட்டமைப்பு இது குறித்து எந்தவிதமான சாதகமான சமிக்ஞையையும் காண்பிக்கவில்லை. இந்த நிலையிலேயே அந்தக் கட்சியில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சிகளில் ஒன்றாக புளொட் அமைப்பின் தலைவர் இது குறித்து பேசியுள்ளார்.

# வீதி விபத்துக்கள் ஒரு தொடர்கதை...

## ஓட்டுனர்களுக்கு பயணிகள் குறித்த பொறுப்புடமை அவசியம்






சில நாட்களுக்கு முன்னதாக மட்டக்களப்பு திருகோணமலை வீதியில் கிரானுக்கு அருகே ஒரு வானும் பஸ்ஸும் மோதியதில் வெளிநாட்டில் இருந்து தமது குடும்ப நிகழ்வு ஒன்றை இங்கே கொண்டாட வந்த குடும்பம், ஒரு உயிரைப் பலிகொடுக்க, மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அது மாத்திரமன்றி வானை ஓட்டி வந்த ஓட்டுநரும் பலியாகியுள்ளார்.

புலம்பெயர்ந்து வாழும் அந்தக் குடும்பத்துக்கு இனி மட்டக்களப்பு என்பது மனவேதனை தரும் ஒரு நினைவாகவே வாழ்நாளுக்கு இருக்கும்.

இது ஒரு விபத்துத்தான். இங்கு போக்குவரத்து விபத்து நடப்பது புதிதும் அல்ல. ஆனால், அப்படியான ஒவ்விருவிபத்தும் பெரும் பாதிப்பை, மன உளைச்சலை ஏற்படுத்திவிட்டுத்தான் போகின்றன.

இப்படியான விபத்துக்களைப் பற்றி எழுதுவதும் இது முதல் தடவையல்ல. ஆனாலும் இந்த விபத்துக்கள் தொடர்கின்றன. அதில் பலர் பாதிக்கப்படுகின்றனர். எந்தவிதமான மாற்றமும் இல்லை. அழிவு மாத்திரந்தான் முடிவாகின்றது.

இங்குள்ள விபத்துக்களுக்கு இரு காரணங்களை பொதுவாகச் சொல்லலாம். அதில், போக்குவரத்து ஏற்பாடுகள் சரியில்லை என்பது ஒன்று. அடுத்தது பொறுப்பற்ற சாரதிகள் இரண்டாவது காரணம்.

போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தவரை, இலங்கையில் குறிப்பாக கிழக்குக்கு வரும் பெரும்பாலான பாதைகள் இரண்டு எதிரெதிர் ஒற்றத்தடங்களை மாத்திரம் கொண்டவை. அதுவும் எதிரெதிர் திசையில் வரும் வாகனங்களை வெறும் கோடுகள் மாத்திரந்தான் பிரிக்கின்றன. அந்தக் கோடுகளுக்குள் வாகனங்கள் ஒன்றை ஒன்று முந்த முடியாது, அப்படி முந்துவதாயின் கோட்டை கடந்து எதிர்த்திசையில் வரும் தடத்தில் ஓடித்தான் முந்த வேண்டும்.

பல நூறு கிலோமீட்டர்களுக்கு இப்படியான வீதி இருப்பதும், அதில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் ஓடுவதும் உகந்ததல்ல. முதலில் இந்தத் தடங்கள் இரட்டைத் தடங்கள் ஆக்கப்பட வேண்டும். இரு வழிப்பாதைகளும் ஒன்றில் இருந்து ஒன்று பிறிதாக்கப்பட்டு கட்டுகள் மூலம் பிரிக்கப்பட வேண்டும். பல விபத்துக்கள் வாகனங்கள் ஒற்றைத்தடங்களில் ஒன்றை ஒன்று முந்த முயலும் போதே நடக்கின்றன. அதுமாத்திரமல்ல, இந்த மாதிரியான ஒற்றைத்தட வீதிகள் நீண்ட தூரம் ஓடும் சாரதிகளுக்கு பெரும் அசதியையும் கொடுக்கின்றன. அதுவும் விபத்துக்கு காரணமாகின்றது.

இலங்கையில் உள்ள வாகன நெரிசல்களுக்கு உண்மையில் இங்கு பல தடங்களைக் கொண்ட வீதிகள் அமைக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் மிகவும் தாமதமாக செயற்படுகின்றது என்று கூடக் கூறலாம். அடுத்தது வீதியின் தரமும் சீர்செய்யப்பட வேண்டும்.

கிழக்குக் கடற்கரை வழியாக செல்லும் பாதை சில வருடங்களுக்கு முன்னர்தான் போடப்பட்டது. ஆனால், அது குண்டும் குழியுமாக இருக்கின்றது. இந்தப் பாதையில்தான், திருகோணமலைக்கு ஏனைய மாவட்டங்களில் இருந்து அரசாங்க அதிகாரிகள் தினமும் பயணிக்கிறார்கள். ஆனால், அது ஏன் இன்னமும் அரசாங்கத்தின் கண்களில் படவில்லை என்று தெரியவில்லை.

என்ன சொன்னாலும், ராஜபக்ஷ அவர்களின் ஆட்சியில் வீதிகள், நெடுஞ்சாலைகள் போடப்பட்ட வேகத்துக்கு, அதனை இந்த அரசாங்கத்தால் தொடர முடியவில்லை. அவ்வளவு ஏன், கொழும்பு மாநகர சபை, இலங்கையின் தலைநகரின் மாநகர சபை. அதன் உள்ளே வருகின்ற வீதிகளின் நிலை படுபரிதாபம். பாவம் கொழும்பு வாசிகள். கொழும்பு மாநகர வீதிகளை இலங்கையின் ஒட்டுமொத்த வீதிகளுக்கு ஒரு பானைச் சோறு பதமாக காண்பிக்க முடியும். அதுதான் எமது போக்குவரத்து வீதிக்கட்டுமானத்தின் நிலை.

**சீவகன் பூபாலரட்ணம்**

அதேவேளை, ஓட்டுனர்கள், பாதசாரிகளின் பொறுப்புணர்வும் இங்கு வீதி விபத்துக்களுக்கு மிகவும் மோசமான காரணமாகின்றது. இலங்கையில் ஒரு வாகனத்தை ஓட்டி வரும் போது, எமக்கு முன்பாக அல்லது எதிராக பயணிக்கும் ஒரு நபரோ அல்லது வாகனமோ எந்த வேளையில் எதனைச் செய்வார் என்று அனுமானிக்க முடிவதில்லை. பல தடங்கள் இருக்கும் வீதியில் வாகன ஓட்டுனர்களுக்கு வாகனங்களை, ஒரு தடத்தில் ஓட்டும் இங்கிதம் தெரிவதில்லை. எந்தவிதமான போக்குவரத்து சமிக்கையையும் காண்பிக்காமல், வாகனங்கள் எந்தத் திசையிலும் எந்தத் தருணத்திலும் திரும்பி வீதிவிபத்துக்கு காரணமாகிவிடலாம். அந்தளவுக்கு ஊகித்தறிய முடியாத படுமோசமான ஓட்டுனர்களாகவே இலங்கை ஓட்டுனர்கள் இருக்கிறார்கள். வேகம் எந்த நேரத்திலும் கட்டுப்பாட்டை இழந்தே இருக்கின்றது. முன்னாலோ அல்லது சமாந்தரமாகவோ பயணிக்கும் ஏனைய வாகனங்களைப் பற்றிய எந்தவிதமான கவலையும் இன்றி வாகன ஓட்டுனர்கள் பயணிக்கிறார்கள்.

பெரும் பேருந்துகள் மிகவும் அச்சத்தை ஏற்படுத்தும் வேகத்தில் ஓடுகின்றன. சில அரசாங்க பஸ்கள் கூட அசுர வேகத்தில் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் ஓட்டப்படுகின்றன. அருகில் வரவே பயப்படும் நிலை. அதுமாத்திரமின்றி, குறித்த போக்குவரத்து தடத்துக்கான அனுமதி இன்றி பஸ்கள் திருட்டுத்தனமாக ஓட்டப்படுவதாகவும் குற்றச்சாட்டு உண்டு. மக்கள் போக்குவரத்துக்கான உரிய அனுமதியின்றி பல வண்டிகள் ஓடுவதால், போக்குவரத்து நெரிசலும் ஏற்படுவதாக குற்றச்சாட்டும் உண்டு.

மக்களும் பயணிகளும் உயிரைப் கையில் பிடித்துக்கொண்டே பயணிக்க வேண்டிய நிலை. ஓட்டுனர்கள் ஒன்றை மனதில் நினைக்க வேண்டும். நீங்கள் எந்த விதமான சாகசமும் செய்யலாம். உங்களை வீரராக காட்டிக்கொள்ளலாம். ஆனால், உங்கள் வண்டியிலோ அல்லது பாதையிலோ பயணிக்கும் பயணிகளுக்கு ஆபத்தை, அச்சத்தை ஏற்படுத்த உங்களுக்கு அதிகாரமில்லை. அது ஓர் குற்றச் செயல். இதற்காக நீங்கள் கடுமையாக தண்டிக்கப்பட நேரிடலாம். இது ஒரு பொறுப்புடமையுடன் சம்பந்தப்பட்ட விடயம்.

ஐரோப்பிய நாடுகளில் வீதியில் ஓட்டுனர்கள் அனைவரும், ஒருவருக்கு ஒருவர் உதவி, ஒரு குழுவாகச் செயற்பட வேண்டும், போக்குவரத்துச் சட்டத்தை மதிக்க வேண்டும் என்பது கொள்கையாக இருக்குமாம். ஆனால், தெற்காசிய நாடுகளிலோ, நீங்கள் ஏனையவர்களுக்கு எது நடந்தாலும் பரவாயில்லை, உங்கள் வாகனத்தை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் எழுதாத விதியாம் என்று வேடிக்கையாகக் கூறுவார்கள். இது ஒரு கசப்பான உண்மைதான் போலும்.

அரசாங்கம் இந்த விடயங்களில் இரக்கமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரங்கம்
செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு

அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

| மட்டக்களப்பு | கொழும்பு |
| --- | --- |
| ARANGAM 071 399 9091 070 300 9001 | ARANGAM arangamads@gmail.com 070 345 6800 071 399 9091 |
| EAST LINK AGENCY POST OFFICE 077 180 1400 196,TRINCO ROAD,BATTICALOA | |
| SHALOM DIGITAL STUDIO 077 632 1079 63,ST ANTONIS LANE,BATTICALOA | SIVA 077 503 8997 077 721 7341 |
| DINA ADVERTISING 077 712 0809 183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA | |
| ST.ANTONY 077 470 1373 MAIN STREET, VALAICHCHENAI | J. PONNUTHURAI 077 187 7999 |
| TERRY 077 618 5 209 | S.K. RAMESH 077 360 0161 65,MANNING PLACE WELLAWATTA |

UK +44 776 935 409 +44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK



# இரட்டைக் குடியுரிமை என்றால் என்ன? சில ஊடகங்களுக்கும் அதுபற்றிய தெளிவு இல்லை



இரட்டைக் குடியுரிமை என்றால் என்ன? அது எப்படி எடுக்கப்படுகிறது? அதனை எப்படிக் கைவிடலாம்? கைவிடுவதென்றால் எந்த நாட்டுக் குடியுரிமையைக் கைவிடலாம்? என்பது பற்றியெல்லாம் எந்தவிதத் தெளிவும் இல்லாமல் சில ஊடகங்களில் செய்திகள் என்ற பெயரில் தகவல்கள் வெளிவருகின்றன.

அப்படிச் செய்ய முடியும், இப்படிச் செய்யமுடியாது, அவரால் கைவிடவே முடியாதாம், இவரால் இரண்டு மாதங்களில் கைவிட முடியுமாம் என்றெல்லாம் நக்கலாகவும், நகைச் சுவையாகவும்கூடச் சில செய்திகளைப் பார்க்கிறோம். அதனால், இரட்டைக் குடியுரிமை பற்றிய சில விடயங்களையும், இலங்கை அரசியலில் அதன் தார்ப்பரியங்களையும் பற்றிச் சில தகவல்களை இச் சிறு கட்டுரையில் தரவிரும்புகின்றேன்.

இந்த இரட்டைக் குடியுரிமை வாய்ப்பு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய இராஜபக்ஷ அவர்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக வந்ததற்குப் பின்னர், மீண்டும் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரட்டைக் குடியுரிமையை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

வேறு நாடுகளில் குடியுரிமையினை பெற்றிருக்கும் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் அன்றிலிருந்து இதுவரை இரட்டைக் குடியுரிமையினைப் பெற்றிருக்கிறார்கள். 2010 ஆம் ஆண்டுக்கு முன்னரும் அதனைப் பெற்றவர்களும் உள்ளார்கள்.

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, இன்றுவரை அமுலில் இருக்கும் இலங்கை அரசியல் அமைப்பிற்கு இவ்வருட ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தலே 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் முக்கிய நோக்கமாக இருந்த போதிலும், மேலும் சில விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அரசியல் அமைப்பின் 91 ஆவது பிரிவுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தமும், சிறப்பாக இரட்டைக் குடியிரிமையுள்ளோர் பற்றிய விடயமும் ஒன்றாகும்.

இலங்கைப் பிரசை ஒருவர் வேறு ஒரு நாட்டில் குடியுரிமை பெறுகின்றபோது அவரது இலங்கைக் குடியுரிமை இயல்பாகவே இரத்தாகிவிடும் என்பது சட்டத்தின் ஏற்பாடாகும். ஆனால், அவ்வாறு வேறு நாடு ஒன்றில் குடியுரிமை பெற்றுக் கொண்டவர், இலங்கைக் குடியுரிமையினையும் தக்கவைத்துக் கொள்வதற்கான ஏற்பாடே இரட்டைக் குடியுரிமையினைப் பெறுவதாகும்.

பிற நாடு ஒன்றின் குடியுரிமையினைப் பெற்றுக்கொண்ட பின்னர் அல்லது அவ்வாறொன்றினைப் பெறுவதற்கு முன்னராயின் அதற்கான வாய்ப்பு இருப்பதை நிரூபிப்பதன் மூலம் இலங்கையில் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். இரட்டைக் குடியுரிமையினை பெற்றுக்கொண்ட ஒருவர் இலங்கையைப் பொறுத்தவரை மற்றைய பிரசைகளைப்போல வழமையான இலங்கைப் பிரசையாகத்தான் சட்டத்தினால் கணிக்கப்படுகின்றார். இலங்கைப் பிரசை ஒருவருக்கு உள்ள எல்லாவிதமான உரிமைகளும் அவருக்கு உண்டு.. 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை இதுதான் நிலைமையாக இருந்தது.

ஆனால், 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம், அரசியல் அமைப்பின் 91 ஆவது உறுப்புரையில் சேர்க்கப்பட்ட ஒரு வரி இரட்டைக் குடியுரிமை உள்ளவரது உரிமை ஒன்றினைப் பறித்துவிட்டது. அரசியல் அமைப்பின் 91 ஆவது பிரிவு, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையீனங்களைக் குறிப்பிடுகின்றது. அதில். முதலாம் பந்தியில் 13 ஆவது விடயமாக ”வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவும் உள்ள இலங்கைப் பிரசை ஒருவர்” ( "a citizen of Sri Lanka who is also a citizen of any other country too") என்கின்ற வரி 19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது.

அதாவது இலங்கைப் பிரசை ஒருவர் வேறு ஏதாவது நாட்டின் பிரசையாகவும் இருந்தால் அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவோ அல்லது பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிப்புக்களில் கலந்துகொள்ளவோ முடியாது. எனவே இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருப்போர் இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல்களில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவர்களாவர்.

**சட்டத்தரணி (பாடும்மீன்)**
**சு.ஸ்ரீகந்தராசா**

இலங்கைப் பிரசை அல்லாதவர்கள் எவரும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட முடியாது என்று அவ்வாறு தெரிவுசெய்யப்படுவதற்கு ஒருவர் இலங்கப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்று அரசியலமைப்பின் 89 ஆவது உறுப்புரை கூறுகின்றது. 19 ஆவது திருத்தச் சட்டமோ அத்தகைய ஒருவர் இலங்கை பிரசையாக மட்டுமே இருத்தல் வேண்டும் என்று கூறுகின்றது.

சரி, பாராளுமன்ற உறுப்பினராகத்தானே வரமுடியாது, மாகாணசபை உறுப்பினராக வரலாம்தானே என்று சிலர் நினைக்கலாம். மாகாணசபைகள் சட்டம் அதற்கும் ஓர் ஆப்பு வைத்திருக்கிறது. அதாவது, ”அரசியல் அமைப்பின் 91(1) ஆவது உறுதியுரையின் கீழ்த் தகைமையற்றவர்கள் மாகாணசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படவோ அல்லது சபை அமர்வுகளில் உறுப்பினராக அமரவோ வாக்களிக்கவோ முடியாது” என்று 1987 ஆம் ஆண்டின் மாகாணசபைகள் சட்டம் கூறுகின்றது. எனவே 19 ஆவது திருத்தத்தின் காரணமாக இரட்டைப் பிரசாவுரிமையுள்ளவர்கள் மாகாணசபைகளுக்கும் தெரிவுசெய்யப்பட முடியாதவர்களாகின்றார்கள்.

சட்டம் இப்படியிருக்கையில், 2015 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இரட்டைக் குடியுரிமை உள்ள சிலரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வந்தன. இது எவ்வாறு சாத்தியமாக முடியும் என்பதைச் சற்று கருத்தில் எடுத்துக் கொண்டால் வினோதமான விடயங்கள் பல நமக்குத் தோன்றுகின்றன. அவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1) 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும்போது ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக இருந்த ஒருவர் இரட்டைப் குடியுரிமையினைக் கொண்டிருந்து, அவர், மற்றைய நாட்டின் குடியுரிமையினை இரத்துப் பண்ணுவதில் கவனம் செலுத்தாமலோ அல்லது இரத்துப்பண்ணுவதற்கு விண்ணப்பித்தும் தேர்தல் திகதிவரை சட்டரீதியான இரத்துப்பண்ணல் நடவடிக்கை பூர்த்தியடையாமலோ இருந்திருக்கலாம்.

## இரட்டைக்குடியுரிமையை இலகுவில் ரத்துச் செய்ய முடியுமா?

2) வெளிநாடொன்றின் குடியுரிமையுள்ள ஒருவர், அதன்காரணமாக இலங்கைக் குடியுரிமையை இழந்தவராக இருந்து, இப்போது தேர்தலில் போட்டியிடுவதற்காக இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்து, அந்த விண்ணப்பத்தின் பேரிலான நடவடிக்கை இன்னமும் முடிவுறாதிருந்திருக்கலாம். அதாவது இரட்டைக் குடியுரிமை அவருக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. ஏனென்றால், மகிந்த இராசபக்ச அவர்களின் ஆட்சிக்காலத்தில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரட்டைப் பிரசா உரிமை வழங்கல், மைத்திரிபால சிறிசேன அவர்கள் சனாதிபதியாக வந்ததற்குப் பின்னர், கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதிதான் மீண்டும் நடைமுறைக்கு வந்தது. சில மாதங்களிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால், இரட்டைப் பிரசா உரிமையினைப் பெறுவதற்கு அவகாசம் இல்லாத நிலைமை பலருக்கு இருந்தது. அது வழங்கப்படாத நிலையில் அவர் தனது வெளிநாட்டுக் குடியுரிமையினை இரத்துப் பண்ணியிருக்க வாய்ப்பில்லை. இரத்துப் பண்ணும் விண்ணப்பத்தை அவர் செய்திருந்தாலும், அவர் தேர்தல் நடைபெறும்போது இலங்கைப் பிரசையாகிவிடவில்லை. அதனால் அவர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட முடியாது.

3) ஏதோ ஒரு வழியாக மிக விரைவாக எவரேனும் ஒருவர் இரட்டைக்குடியுரிமையினைப் பெற்றிருந்தால் அல்லது ஏற்கனவே இரட்டைக் குடியுரிமை உள்ளவராக இருந்திருந்தால் அவருக்குத் தனது வெளிநாட்டுக் குடியுரிமையினைச் சட்டரீதியாக இரத்துப்பண்ணுவதற்கான அவகாசம் இருந்திருக்கவில்லை. ஏனெனில் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கும் பாராளுமன்றக் கலைப்பிற்கும் இடைப்பட்ட காலம் சில மாதங்களே ஆகும்

மேற்கத்திய நாடுகளில், சாதாரணமாகக் குடியுரிமையினை இரத்துப் பண்ணுவதாயின் ஆகக் குறைந்தது இரண்டு மாதங்கள் தேவைப்படும். மற்றுமொரு நாட்டில் குடியுரிமையினைப் பெற்றமையினை அல்லது பெறவிருப்பதை நிரூபித்தாலன்றி அத்தகைய நாடுகள் தங்கள் நாட்டில் ஒருவருக்குள்ள குடியுரிமையினை இரத்துப்பண்ணும் விண்னப்பத்தினை அங்கீகரிக்க மாட்டா. தங்கள் நாட்டுக்குடியுரிமையை இழப்பதன்மூலம் எவரும் நாடற்றவராக ஆகிவிடக்கூடாது என்ற நிலைப்பாடே அதற்கான காரணமாகும்.

4) இப்பொழுது மாகாண சபை உறுப்பினர்களாக இருப்பவர்களில் எவராவது இரட்டைக் குடியுரிமையுள்ளவராக இருக்கலாம். கடந்த வருடம் கலைக்கப்பட்ட மாகாணசபைகளில் உறுப்பினர்களாக இருந்தவர்களில்கூட அத்தகையோர் இருந்திருக்கலாம். ஏனெனில் கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது இரட்டைக் குடியுரிமையுள்ளோர் தேர்தலில் தெரிவுசெய்யப்பட முடியாது என்ற நிலை இருந்ததில்லை. அத்தகையவர்களும் புதிய சட்டத்திருத்தத்தின்படி தமது பதவிகளை இழக்கவேண்டிவரலாம்.

5) 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மிகக் குறுகிய காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் வந்துவிட்டதால் வேட்பாளர்களின் இரட்டைக் குடியுரிமைத் தகைமையீனத்தினை பரிசீலித்துப் பார்க்கும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

6) தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டமையை செல்லுபடியற்றதாக்கும்படி,

19 ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் யாராவது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தாலன்றி, அவ்வாறு சட்டமுரணாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் கண்டுகொள்ளப்பட மாட்டார்களோ என்ற சந்தேக நிலையும் உள்ளது. ஆனால் இது அரசியல் அமைப்புக்கு முரணான விடயம் என்பதால் இதில் அரசு நிச்சயம் கவனம் செலுத்தியே

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# நுண்கடனுக்கு பெண் முகமா ?

# நுண்கடன் பிரச்சினையில் இருந்து மீள வழி என்ன?

நுண்கடன் பிரச்சனையால் பல பெண்கள் தற்கொலை செய்யும் செய்தி போருக்கு பின் அன்றாடம் காதில் வந்து விழுகிறது. இதில் பல குடும்பத்து பிள்ளைகளின் வாழ்வு சீரழிந்து போவது நாம் அறிந்ததே.

இந்த நுண்கடன் வியாபாரம் உலகத்தின் தெற்காசியப் பகுதிகளான இலங்கை, இந்தியா, நேபாளம், வங்கதேசம் போன்ற அபிவிருத்தி அடையாத நாடுகளில் தான் கொடிகட்டிப் பறக்கிறது. கூடவே மரண வீடுகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கின்றன. இந்த நுண்கடன் பயனாளிகளில் 80மூ ஆனவர்கள் பெண்கள் என கடனை



ரத்துச் செய்யக் கோரும் செயல்பாடுகள், பிரச்சாரங்கள் செய்யும் இயக்கம் கூறுகிறது.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் நுண் கடன் முதலாளிகளில் உறைவிடமாக உள்ளன. போரால் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் இல்லாமல் தவிப்பது பெண்கள் என்பது நாம் அறிந்த உண்மை. ஆகவே நுண்கடன் முதலைகள் எங்கள் பெண்களின் ரத்தத்தையும் உயிரையும் உறுஞ்சுவது கண்கூடு. இலங்கையில் மட்டுமல்ல இது மேட்குறிப்பிட்ட மற்றைய நாடுகளிலும் நடக்கின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் இது பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து காணப்படுவதை அங்காங்கே நடக்கும் போராட்டங்களும் மத்திய வங்கியின் ஆளுனருடனான சந்திப்பும் எடுத்துக்காட்டுகிறது . ஆகவே அரசு எவ்வகையான தலையீடுகளைச் செய்யவேண்டும் என்று நோக்குவதும், அரசின் வெவ்வேறு திட்டங்களினூடாக எவ்வகையான கடனுதவிகள் கிடைக்கப்பெறுகின்றன என்று ஆராய்வது அவசியம்.

பலரின் கேள்வியும் ஆதங்கமும் குழப்பமும் என்ன செய்து நுண்கடன் கலாச்சாரத்தை ஒழிப்பது?, நுண்கடன் பெற்றவர்களை எவ்வாறு காப்பாற்றுவது?, மற்றயோர் நுண்கடன் வசதி இல்லாவிட்டால் நாங்கள் எங்கே போய் கடன் வாங்கி வாழ்வாதாரத்தை கட்டி எழுப்புவது என்று கேட்கின்றனர். ஆமாம் மாற்று தீர்வு முக்கியமானது.

முதலாவதாக இந்த பிரச்சனையை தீர்த்து வைப்பதும் தலையீடு செய்வது அரசின் தலையாய கடமை என்பதை மக்கள் புரிதல் அவசியம்.

ஆகவே அரசு தலையிட்டு;

இவ்வாறு கடன் கொடுக்கும் நிறுவனங்களை அரசு கண்காணிக்கவேண்டும், சரியான சநபரடயவழைெ கொண்டுவரப்படவேண்டும் கடனைச் செலுத்துக்கின்ற காலத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போட்டு, அதற்கான வட்டியையும் ரத்துச்செய்து, மீளச் செலுத்தும் வசதியினை ஏற்படுத்திக்கொடுத்தல். இவ்வாறு மற்றைய நாடுகளில் நடந்துள்ளது.
கடன்களை உரிய நேரத்தில் திருப்பி செலுத்த முடியாமல் வட்டிக்கு வட்டியையும் கொடுத்து, எடுத்த கடன் தொகைகளுக்கு மேலாக வட்டியைக் கட்டிக்கொண்டு, அவதிப்படும் மக்களின் கடன்களை உடனடியாக ரத்துச் செய்து, அவர்களை இக்கடன்சுமையில் இருந்து விடுவித்தல். இதுவும் பல ஆபிரிக்க நாடுகளில் நடந்துள்ளது ( மக்கள் ஒன்றாக ஒருங்கிணைந்து இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்த போது கடனுதவி செய்யும் நிறுவனங்கள் செவிசாய்த்து உள்ளன.)
நுண்நிதிக் கடன் நிறுவனங்களின் அதிகூடிய வட்டி வீதத்தினை உடனடியாகக் குறைத்து 10வீதம் தொடக்கம் 15வீதம் வரையிலான ஆண்டு வட்டிக்கு கடன்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

சமூக மட்டத்தில் இயங்கும் நுண்நிதி அமைப்புக்களின் (மாதர் அபிவிருத்திச் சங்கம், சுய உதவிக்குழுக்கள் மற்றும் பெண்கள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்கள்) நுண்நிதி செயற்பாடுகளுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் குறைந்த வட்டி வீதத்தில் சமூகங்களுக்குள்ளேயே கடன் பெறும் வசதியினை ஊக்கப்படுத்தல்.

அதே வேளையில் நாம் ஒன்றை ஞாபகப்படுத்தல் அவசியம், அரசின் பெண்களுக்கான பல திட்டங்களிலும் மற்றைய திட்டங்களிலும் அதி குறைந்த வட்டிக்கு கடனை பெற்றுக்கொள்ளும் வசதி உள்ளது. இதை மக்கள் அறிந்துகொள்ளல் அவசியம், சமுர்த்தி திட்டத்தில், திவி நகும திட்டத்தில் மற்றும் அண்மையில் 25 ஆம் திகதி கொழும்பில் நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் அறிமுகப்படுத்தபட்ட ஏ2025 என்ற " எண்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா தொழில் முயற்சி சொர்க்கபுரி கடன் திட்டம் " போன்றவை, இவ்வாறான திட்டங்கள் அந்தந்த பிரதேசத்தில் மிக இலகுவாக கடன்களை அதி குறைந்த வட்டியில்

**எஸ்.ரி. நளினி**

பெற்றுகொள்ளக்கூடிய திட்டங்களாகும், இருந்த போதும் இந்தத் திட்டங்கள் பற்றிய தகவல்கள் மக்களை அடைவது குறைவாக உள்ளது. இந்தத் திட்டங்களை பற்றிய விபரங்கள் மக்களுக்கு இலகுவாக சென்று அடைவதில்லை. இது பற்றிய விபரங்களும் மக்களுக்கு சென்றடையாமல் இருப்பதும் அரசின் குறைபாடாக உள்ளது. மற்றும் இந்த திட்டங்கள் பற்றி யாரும் கிராமத்துக்கு கிராமம் அவ்வப்போது சென்று எடுத்துரைப்பதும் இல்லை, இந்தக் குறைபாடு நுண்கடன் நிறுவனங்களுக்கு சாதகமாகப் போய் விடுகிறது.

மற்றும் நுண் கடன் நெருக்கடியால் தற்கொலை செய்து கொண்டகொண்டவர்களில் பலர் சமுர்த்தி கடன் வசதிகளை பெற்ற பயனாளிகள் என்ற குற்றசாட்டும் நிலவுகிறது. இதை பற்றி ஆராய்தல் அவசியம்.

பெண்களுக்கு ஆசை அதிகம், துணைவனுக்கு தெரியாமல் கடன் வாங்குகின்றனர், ஆடம்பர செலவுக்கு கடன் எடுகின்றனர் போன்ற பெண்களை குற்றம் சாட்டும் ஒரு நிலையும் சமூகத்தில் காணப்படுவது கவலையான விடயம்.

போரின்போதும் பங்களிப்பு செய்ததும் போரின் பின்னும் போரின் விளைவை தலைமேல் சுமப்பதும் பெண்கள் என்பதை சமூகம் மறக்கலாமா? அதுமட்டுமா வட மாகாணத்தில் எண்பது வீதமான( 80மூ) குடும்பங்களில் ஆண்கள் இல்லை என 2013 க்கான சனத்தொகை மதிப்பீடு சொல்கிறது. வடக்கு கிழக்கில் துணைவனை இழந்தவர்கள் 89000 ஆக காணப்படுகிறது. பிரதானமாக வருவாயை குடும்பத்துக்கு கொண்டு வந்து அந்த குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்த ஆண் இல்லாதவிடத்து, அந்தக் குடும்பங்கள் படும் பாடு சொல்லில் அடங்காதவை. குடும்பத்தையும் பிள்ளைகளையும் பார்த்துகொண்டு வருவாயை தேட வேண்டிய முழுப்பொறுப்பும் பெண்களில் வலிந்து திணிக்கப்பட்டுள்ளனர் என்பதை நாம் மறக்கலாகாது.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது அரசும் ஆட்சியாளர்களும் , குறிப்பாக சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்று கூவும் அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் இந்த பெண்களின் அவலநிலையைப் போக்க ஆக்கபூர்வமான தலையீடுகளையும் திட்டங்களையும் வினைத்திறனுடன் செயயவேண்டும். பெண்களை கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் வாழவைப்பதன் மூலம் மட்டுமே தான் நாட்டின் உண்மையான அபிவிருத்தியும் நல்லிணக்கமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அன்றேல் பல தசாப்தங்கள் ஆனாலும் இலங்கையில் சமாதானமும் நல்லிணக்கமும் வரும் என்பது கனவாகவே மட்டும் இருக்கும்.

# கடுகுக்கதை

## படிப்பறிவும் பகுத்தறிவும்

படித்த பேச்சாளர் ஒருவர் தன் பிரசங்கத்தின் இடையில் "அன்னப்பட்சியைப் பாருங்கள் அது பாலையும், நீரையும் கலந்து வைத்தால் நீரை வேறுபடுத்தி, பாலை மட்டும் அருந்துகிறது. இவ்வன்னப்பட்சியைப் போல் நாமும் நல்லதை மட்டுமே பிரித்தெடுக்கத் தெரிய வேண்டும்' என்று தனது



உரைக்கு அன்னத்தை எடுத்துக்காட்டாக எடுத்துக் காட்டி வெளுத்துக் கட்டிப் பேசினார். அவர் பேச்சாளர் பேரம்பலம்.

கருத்தரங்கு முடிந்து கூட்டம் கலைந்தது. மீனவன் ஒருவன் பேச்சாளரை அணுகி, 'ஐயா! தாங்கள் பேசும் போது அன்னப்பட்சியைப் பெரிதாகப் பேசினீர்கள்.



என்னோடு இரவில் வந்தால் அன்னப்பட்சி எவ்வளவு முட்டாள் தனமானது என்பதை தங்களுக்கு நேரடியாகவே காட்டுகிறேன்' என்று அழைப்பு விடுத்தான்.

சரி எங்கு வர வேண்டும். கேட்டு வைத்தார் பேச்சாளர் பேரம்பலம். இன்று இரவு நம் பெரிய குளத்தடிக்கு வாருங்கள். இடத்தைச் சொன்னான் மீனவன். இரவில் அமைதியான குளத்தடியில் பேச்சாளரும், மீனவனும் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

வானத்து நட்சத்திரங்களின் விம்பங்கள் குளத்து நீரில் விழுந்து குளத்தை அழகு படுத்திக்கொண்டிருந்தன. சற்று நேரத்தில் அக்குளத்தில் வசிக்கும் அன்னம் பவனி வரத் தொடங்கியது. ஒவ்வொரு நட்சத்திர விம்பங்களையும் குளத்திலிருக்கும் பூக்களென நினைத்து தன் அலகினால் கொத்துவதும் பின் நீர்நிலை கலங்கியதும் வேறொன்றை கொத்துவதுமாக அன்னம் அலைந்து கொண்டிருந்தது.

மீனவன் பேசத்தொடங்கினான். 'பார்த்தீர்களா? அன்னப்பட்சியை அது பூக்களென நினைத்து விம்பங்களை கொத்துகிறது. விடிந்த பின் பூக்கள் மலர்ந்திருக்கும். ஆனால் அன்னப்பட்சி அவைகளைக் கொத்தாது இரவில் தான் கொத்தி ஏமாந்த நட்சத்திர விம்பங்களென நினைத்து அவைகளை விட்டு விடும்.

இப்போது சொல்லுங்கள் பாலையும் நீரையும் பகுத்துண்ணும் இப் பறவை, தாரகை எது தாமரை எது என அடையாளப்படுத்த முடியாமல் இருக்கிறதே? அப்படியானால் இது ஒரு திறமையுள்ள பறவையா? இதைப்போல் நாங்களும் வாழ வேண்டுமா?" கேட்டு வைத்தான் மீனவன்.

வாயடைத்துப் போனார் பேச்சாளர் பேரம்பலம்.

**'கற்ற அறிவு பேச்சுக்கு உதவும் கண்ட அறிவு பகுத்தறிய உதவும்'**

**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**



அது 1972 ன் சித்திரை மாதம் . பள்ளி விடுமுறையையொட்டி அப்பாவின் ஊருக்குப் போயிருந்தேன் . அப்பாவின் ஊருக்கு வடக்குப் புறமாக 6 கிலோ மீட்டர் தூரத்திலிருந்த நெற்குப்பை விசாலாட்சி மகளிர் கல்லூரியின் பொன் விழா கொண்டாட்டங்கள் நடந்து கொண்டிருந்த காலமது . அப்பாவுக்கும் ஓர் அழைப்பிதழ் வந்திருந்தது .
''நான் போவதாக இல்லை . நீ போகிறாயா? '' என்று கேட்டார். அவர் கேட்டிராவிட்டாலுங் கூட நான் போவதாகத்தான் இருந்தேன். அழைப்பிதழில் இருந்த பேச்சாளர்கள் பட்டியல் அத்தகையது.



பக்கத்திலிருந்த கடையில் வாடகை

# கல்லெல்லாம் மாணிக்கக் கல்லல்ல

சைக்கிளை எடுத்துக் கொண்டு, மறுநாள் காலையில் கிளம்பிவிட்டேன்.
கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பிரமுகர்கள் உட்கார்ந்திருந்தனர். அதில் முக்கால்வாசிப் பேர்கள் தொந்தி என்ற ' பாரத்தை வருத்தப் பட்டு சுமப்பவர்கள்'. பார்வையாளர்களுக்கென ஒரு நீளமான பந்தல் . கீற்றோலை கொண்டு வேய்ந்திருந்தார்கள் . தரையில் உட்கார்வதற்கென ஜமுக்காளங்கள் விரிக்கப்பட்டிருந்தன .

மேடைக்கு மிக சமீபமாகத் தரையில் நான் உட்கார்ந்து கொண்டேன். சரக் சரக்கென்ற ஓசையுடன் பல வர்ணங்களில் பாவாடைகளும் தாவணிகளும்,ன் காஞ்சிபுரம்



பட்டுச் சேலைகளும், மல்லிகை, கனகாம்பரம், ரோஜாப் பூக்கள் நிறைந்த கூந்தல்களை ஆட்டியபடி கடந்து கொண்டிருந்தன. பூக்களும், சந்தனமும் பிணைந்த வாசனை காற்றெங்கும் பரவிக் கொண்டிருந்தது .

'இதோ வருகிறார், வந்து கொண்டிருக்கிறார், இன்னும் சொற்ப நேரத்தில் வந்து சேர்ந்து விடுவார்' என்ற பல அறிவிப்புகளுக்குப் பின் வந்து சேர்ந்தவர் கண்ணதாசன். 10மணிக்கு வர வேண்டிய அவர் வந்து சேரும் போது நேரம் 11.30.

பார்வையாளர்களுக்கு நடுவே வகிடெடுத்தது போன்ற ஒரு குறுகிய வழியால் கண்ணதாசன் மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்பழுக்கற்ற வெள்ளை வேஷ்டி . அவர் அணிந்திருந்த சந்தன நிற அரைக்கை சட்டை, அவருடைய மேனியின் நிறத்தை மேலும் மஞ்சளாக்கிக் காட்டியது. ஏறு நெற்றி. சின்னக் கண்கள். புன்னகை சிரிப்பாக விரியும் போது அநேகமான குட்டிப் பற்கள் தெரிந்தன .

மேடை நெருங்கியதும் பாதணிகளைக் கழற்றி வைத்து விட்டு, அதனைத் தொட்டு வணங்கி விட்டு மேடையேறி இருக்கையில் உட்கார்ந்தார். பிரமுகர்கள் எல்லாரும் எழுந்து அவர் முன்னே வந்து கைகூப்பி வணக்கம் தெரிவித்தனர். ஒரு கணத்தில் சூழல் அப்படியே மாறிப் போனது போலிருந்தது.

சம்பிரதாயமான சில உரைகளுக்குப் பின்னர் கண்ணதாசனை உரையாற்ற அழைத்தார்கள். சலசலப்புகள் ஓய்ந்து சபை அமைதியில் ஆழ்ந்தது. கண்ணதாசன் பேச ஆரம்பித்தார். ' பத்து மணிக்கு வர வேண்டிய நான் பதினொன்றரைக்கு வந்திருக்கிறேன். அனைவரும் என்னை மன்னிக்க வேண்டும். ஆனாலும் நான் அண்மையில் எழுதிய சினிமாப் பாடலொன்றை நினைவில் கொள்ள வேண்டும். 'நீ வருவாய் எனக் காத்திருந்தேன்; வரும் வழி தோறும் பார்த்திருந்தேன். காத்துக் கிடப்பதில் இன்பம் உண்டு ....காக்க வைப்பதில் சுகமுண்டு ...' என எழுதிய நானே உரிய நேரத்துக்கு வந்து விட்டால் சரியாக இருக்காதல்லவா? அதுதான் சற்றுப் பிந்தி வந்தேன்' என்ற போது சபை தன் இறுக்கம் தளர்ந்து ஆர்ப்பரிக்கத் தொடங்கியது. (1972 ல் வெளியான 'ராஜா' படத்தில் இடம்பெற்ற பாடல் இது.)

சபை ஆரவாரம் ஓயும் வரை புன்னகையுடன் காத்திருந்து விட்டு மறுபடியும் அவர் தொடர்ந்தார்.
''...மறைந்து போன என் அம்மாவின் பெயரால் ஒரு கல்லூரி கட்ட வேண்டுமென்று அடிக்கடி நான் நினைத்ததுண்டு, ஆனால் இந்த வழியாக அவ்வப்போது பயணம் செய்கையில் இந்தக் கல்லூரியின் பெயர்ப் பலகை கண்களில் படும். சரி .நமக்குப் பதிலாக நம் அம்மாவின் பெயரில் வேறு யாரோ கல்லூரியைக் கட்டிவிட்டார்கள் என்று திருப்திப்பட்டுக் கொள்வேன்' என்று சொன்ன போது சபையெங்கும் மீண்டும் சிரிப்பொலி பரவத் தொடங்கியது. (கண்ணதாசனின் தாயார் பெயரும் விசாலாட்சி என்பது குறிப்பிடத்தக்கது .)

பேசத் தொடங்கிய
சில நிமிடங்களுக்குள்ளேயே சபையைத் தன் வளையத்துக்குள் கொண்டு வந்து விட்ட அவருடைய ஆற்றல் என்னை வியக்க வைத்தது. தங்கு தடையற்ற பேச்சு. தெளிவான உச்சரிப்பு. நகைச்சுவை, திரையிசைப் பாடல்களிலிருந்து பழந்தமிழ் இலக்கியத்துக்குத் தாவுதல், தேவையான இடங்களில் பாடிக்காட்டுவது என ஓர் அருமையான அனுபவத்துக்குள் சபை சென்று கொண்டிருந்தது.

அன்று அவர் இரண்டு பாடல்களைப் பாடிக் காட்டி, அங்கே நிகழ்ந்திருக்கும்'சொல் விளையாட்டுகள்' பற்றி விபரித்தார். 'அத்திக்காய் காய் ...ஆலங்காய் வெண்ணிலவே ' என்ற பலே பாண்டியா பாடல் ஒன்று. மற்றையது வீர அபிமன்யு படத்தில் இடம்பெற்ற 'பார்த்தேன் சிரித்தேன் ..பக்கம் வரத் துடித்தேன் ...உனைத் தேன் என நான் நினைத்தேன்.... அந்த மலைத் தேன் இதுவென மலைத்தேன்....' இப்படியாக அவருடைய உரை சுமார் ஒன்றரை மணி நேரம் இடம்பெற்றது.

60களின் கறுப்பு-வெள்ளைத் தமிழ்த் திரைப்படக் காலத்திலிருந்து கவிஞர் கண்ணதாசனின் பெயரோடு எனக்குப் பரிச்சயம். அந்தக் காலத்தில் நான் பார்த்த அநேகமான படங்களின் பாடலாசிரியராகக் கண்ணதாசனே இருந்தார். '

இவற்றில் பெரும்பாலானவை சரித்திர பாணிப் படங்கள். தமிழ்த் திரையுலகம் சமூகப் படங்களை நோக்கி நகர்ந்த போது திரைக்கதை –வசனகர்த்தா என்ற ரீதியில் கண்ணதாசன் பின்தங்கிப் போனார். மாறாக திரைப்படப் பாடலாசிரியர் என்ற ரீதியில் அவர் பயணம் ஏறுநிலையில் இருந்தது.

இன்றைய திரைப்படப் பாடல்களைக் கேட்கும் போது கண்ணதாசனின் அருமையும், பெருமையும் சட்டென்று தோன்றுவதைத் தவிர்க்க முடிவதில்லை. திரைப்படக் காட்சிகளை கிரஹித்து பாடகர்கள் –இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், திரைப்பட இயக்குனர்கள் இணைந்து இயங்கிய ஒரு காலமது. குறிப்பிட்ட திரைப்படக் காட்சிகென்று பாடல் எழுதும் கடப்பாடுகள் இன்றைய கவிஞர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. படத்தின் இடைவேளையைத் தவிர எந்த இடத்திலும் பாடல்களைப் பொருத்திக் கொள்ளும் ஒரு பாணி இப்போது வந்து விட்டது. இந்தப் பாடல்களின் வார்த்தைகளையும், அர்த்தத்தையும் உய்த்தறியவும் கூட நாம் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. இன்றைய ஒரு பாடலை ஒலி வடிவில் முதன்முதலாகக் கேட்கும் போது நமக்குள் எழும் முன்னுணர்வு ஒன்றாகவும் பின்னர் அதைக் காட்சியுடன் இணைத்துப் பார்க்கும் போது கிடைக்கின்ற அனுபவம் வேறொன்றாகவும் இருப்பது எவ்வளவு பெரிய ஏமாற்றம். ஆனால் காட்சிகளின் சூழ்நிலையையும், கதாபாத்திரங்களின் உணர்வுகளையும் மிகவும் எளிமையாகவும் அநாயசமாகவும் வரிகளுக்குள் கொணர்ந்தவர்களில் கண்ணதாசன் முக்கியமானவர் .

பள்ளிப் படிப்பற்ற கவிஞர் கண்ணதாசன் பின்னாட்களில் கண்டடைந்த அனுபவங்களும், அறிவும் வியப்பைத் தரக் கூடியது. பழந் தமிழ் இலக்கியத்தில் அவருக்கிருந்த அறிவு அவருடைய திரைப்படப் பாடல்களிலே பிரதிபலித்திருக்கின்றன; வெகுஜனத்தைச் சென்றடைந்திருக்கின்றன. இன்று எழுதப் பட்டுக் கொண்டிருக்கும் அசட்டுத் தனமான

**உமா வரதராஜன்**

பல கவிதைகளை விட கண்ணதாசன் எழுதிய திரை இசைப் பாடல்களின் வரிகள் மேலானவை; இலக்கிய சுவை மிக்கவை.

கவிஞர் கண்ணதாசன் மறைந்து 38 வருடங்கள் ஆகிவிட்டன. தமிழ்த் திரையுலகின் சுவாரஸ்யமான ஆளுமைகளில் அவரும் ஒருவர். கலை-இலக்கியத்துக்கு அப்பால் அரசியலிலும் ஈடுபட்டவர். அவருடைய சமகாலத்தவரான கலைஞர் மு.க வின் தந்திர நகர்வுகள், புகழ் ஆகியவை கண்ணதாசன் மீது மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தன. தி.மு.க. விலிருந்து தமிழ் தேசியக் கட்சி, அதன் பின்னர் காங்கிரஸ் என அவர் தாவிக் கொண்டேயிருந்தார். எம். ஜி .ஆரின் புகழும், வளர்ச்சியும் கூட அவரை எரிச்சலூட்டியிருக்கக் கூடும். எம்.ஜி.ஆரின் அந்தரங்க விவகாரங்களைக் கிளறிக் கட்டுரைகள் எழுதும் அளவுக்கு தன்னை தானே தரம் தாழ்த்திக் கொண்டதுண்டு. அதே எம்.ஜி .ஆருடன் பின்னாட்களில் சமரசம் செய்து கொண்டு அரசவைக் கவிஞர் பதவியை ஏற்றுக் கொண்ட வரலாறையும் நாம் அறிவோம்.

'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு
இசைக் கோல மயில் என் துணையிருப்பு
'எனத் தொடங்கி
'காவியத் தாயின் இளைய மகன்
காதல் பெண்களின் பெருந்தலைவன் '
எனத் தொடரும் போது அவர் சமூகத்தின் முன் தன்னை எவனாகக் காட்டிக் கொள்ள முயன்றார் என்பதை ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடியும். அதே வேளை
'நவீன ஆழ்வார்' போல் தன்னைக் காட்டிக் கொள்வதிலும் அவருக்குப் பெரு விருப்பம்.

அவருடைய 'அர்த்தமுள்ள இந்து மதம்' நூலும், சமயப் பிரசங்கங்களும் பலராலும் விரும்பப்பட்டவை. அவருடைய படைப்புகள் பல (கவிதைகள்,சிறுகதைகள், தொடர்கதைகள் ) வெகுஜனப் பத்திரிகைகள் பலவற்றில் வெளியாகியுள்ளன. இவற்றையெல்லாம் விட என்னை ஈர்த்தவை அவருடைய 'வனவாசம் ' ,மனவாசம் போன்ற சுயசரிதைப் பாணி நூல்களே.

அனுபவங்களை சுத்திகரிக்காமல் வெளிப்படுத்தும் நேர்மையினாலும், தமிழ்நாட்டின் குறிப்பிட்ட காலகட்ட அரசியல் சீரழிவைப் பிரதிபலித்தவை என்ற வகையிலும் இன்றளவும் அவை என்னைப் பொறுத்த வரையில் முக்கிய நூல்கள்.

# நடந்தாய் வாழி களனி கங்கை ...... அங்கம் 07

## தலைநகரில் தோன்றிய விஹாரைகளின் பின்னணியில் மறைந்திருக்கும் அரசியல்

ரஸஞானி

இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்னர், கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களுடன் மேலும் சில சிறிய இராச்சியங்களையும் கொண்டிருந்தது.

கோட்டை இராச்சியம் அமைந்திருந்த பிரதேசம்தான் இலங்கையின் தலைநகரமாக விளங்கும் கொழும்பு. களனி கங்கையை ஒரு புறத்தில் எல்லையாகவும், இந்துமகா சமுத்திரத்தின் காலிமுகத்தை (Gall Face) மறு எல்லையாகவும் கொண்டிருக்கும் கொழும்பின் பெயர் வந்த கதைகளும் பலவுண்டு.

இலங்கைக்கு வெளியிலிருந்து முதலில் கடல்மார்க்கமாக படையெடுத்துவந்த போர்த்துக்கேயரால் 1505 இல் கொழும்பு


கங்காராமை விஹாரை

எனப்பெயர் சூட்டப்பட்டதாகவும், முன்னர் இருந்த கொலன்தொட்ட என்ற பெயரிலிருந்து இந்தப்பெயர் எடுக்கப்பட்டதாகவும், பழைய சிங்கள இலக்கண நூலான சிடசங்கரவ கொழம்ப என்பதற்கு, துறைமுகம் அல்லது கோட்டை என்று பொருள் சொல்லியிருப்பதனால், அதிலிருந்து மருவி, கொழும்பு எனப்பெயர் வந்திருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு ஒவ்வொரு ஊருக்கும் காரணப்பெயர்களை ஆராயப்புகுந்தால் அது, நதி மூலம் ரிஷி மூலம் தேடும் செயலுக்கு ஒப்பானதாகும்.

களனிகங்கை தீரத்தில் பேலியாகொடை என்னுமிடத்தில் அமைந்திருக்கிறது. பூபாலவிநாயகர் ஆலயம். அதன் வரலாறு தெரியவில்லை. எனினும் அதன் அறங்காவலர்கள் திருவிளங்கநகரத்தார் சமூகத்தினர்தான் என்பது தெரிகிறது. இச்சமூகத்தினருக்கு, கொழும்பிலும் நீர்கொழும்பிலும் குருநாகலிலும் மாத்தளையிலும் கோயில்கள் இருக்கின்றன. வணிக வைசியர்களான அவர்கள் நல்லெண்ணை வியாபாரம் தொடக்கம் பல வர்த்தகங்களில் ஈடுபட்டவர்கள். அவர்களின் முன்னோர்கள் செக்குகள் வைத்து நல்லெண்ணை உற்பத்தி செய்தவர்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் அதனை ஒரு பௌத்த நாடாகவே மாற்றிக்கொண்டு வரும் செயல்களிலேயே மாறி மாறி பதவிக்கு வந்திருக்கும் ஐ.தே. கட்சி, மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன ஈடுபட்டுவந்துள்ளன.

புத்தர் பெருமான் இலங்கைக்கு இரண்டு தடவைதான் வந்திருக்கிறார். அவர் வடக்கில் நயினா தீவுக்கும் தெற்கே களனிக்கும் வருகை தந்தார். மத்தியில் சிவனொளி பாதமலைக்கும் வந்திருக்கிறார் என்றும் அவரது புனித பாதம் அங்கு பதிந்திருக்கிறது எனவும் ஐதீகக்கதைகள் தொடருகின்றன.

இலங்கை எங்கும் புத்தர் சிலைகள் தோன்றிய கதைகளின் பின்னணியில் அரசியல்தான் இருந்திருக்கிறது. பேலியாகொடையில் களனி பாலத்தை நெருங்கும் இடத்தில் ஒரு முச்சந்தி வருகிறது. வத்தளையிலிருந்து கொழும்பு நோக்கி வரும்போது அச்சந்தியிலிருந்து இடதுபுறம் கண்டி நோக்கிச்செல்லும் வீதி வருகிறது. அவ்விடத்தில்தான் பூபாலவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. அதனைக்கடந்துதான் களனி தொகுதிக்கும் களனி பல்கலைக்கழகத்திற்கும் செல்வோம்.

குறிப்பிட்ட முச்சந்தியில் அமைந்துள்ள பெரிய புத்தர் சிலை அவ்விடத்தில் தோன்றிய திகதியை கொழும்பு மாநகர சபையின் பதிவேடுகளில் காணமுடியும்.

அந்த களனி பாலத்தைக்கடந்து கொழும்புக்குள் சென்றால் அடுத்தடுத்து புத்தர்களை பார்க்கலாம். கொழும்பு வீதி, புறக்கோட்டை ஐந்துலாம்பு சந்தியை அண்மிப்பதற்கு முன்னர் இடையில் வரும் புத்தர் சிலைகளையும் சில சிறிய பெரிய விஹாரைகளையும் தரிசிக்கலாம்.


ஆட்டுப்பட்டித்தெரு
டச்சுத்தேவாலயம்

முன்னர் பாபர் வீதி என அழைக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலய வீதியிலும் ஒரு நாற்சந்தி வருகிறது. அதன் அருகிலிருக்கும் ஆட்டுப்பட்டித்தெருவில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட தேவாலயம். அருகில் ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியர் கோயில். அதற்குச்சமீபமாக கொச்சிக்கடையில் அந்தோனியார் கோயிலும் அதற்கு அருகிலேயே பொன்னம்பலவாணேசர் கோயிலும் அமைந்துள்ளன. கொழும்பு மத்திய தொகுதியாக முன்னர் விளங்கிய இந்தப்பிரதேசத்தில் மூவின மக்களும் செறிந்து வாழ்ந்தமையால், பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டிடங்கள் அமைந்திருக்கின்றன.


கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம்

நாடாளுமன்ற விகிதாசாரப்பிரதிநிதித்துவ தேர்தல் முறையை ஜே.ஆர். ஜெயவர்தனாவின் அரசு 1978 இற்குப்பின்னர் நடைமுறைப்படுத்தியதையடுத்து கொழும்பு மத்தி மூன்று அங்கத்தவர் தொகுதி என்ற பெயரை இழந்துவிட்டது.

கொழும்பு தெற்கும் முன்னர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாகத்தான் இருந்தது. இலங்கையை முற்று முழுவதுமாக ஒரு பௌத்த தேசமாக மாற்றுவதற்கு பதவிக்குவரும் ஆட்சியாளர்களுக்கு ஆதாரமாக இருப்பவரே கௌதம புத்தர்தான். அதனால் அவர் அரசமரங்கள் இருக்கும் இடங்களில் மட்டுமல்ல, கங்கைக்கரைகளிலும் கடலோரங்களிலும் குளக்கரைகளிலும் வீதியோரங்களிலும் தோன்றுவார்! தோன்றிக்கொண்டே இருப்பார்!! வெளிநாடுகளிலிருந்து கடல் மார்க்கமாக வரும் கப்பல்களுக்கும், வான் மார்க்கமாக வரும் ஆகாய விமானங்களுக்கும் இலங்கையின் கரையும் தரையும் தென்படும்போது அது ஒரு பௌத்ததேசமாகவே காட்சி தரவேண்டும் என்பதிலும் பதவிக்குவரும் ஆட்சியாளர்கள் அக்கறையோடு இருந்திருக்கிறார்கள்.

வெளிநாட்டவர்கள் வீதிகளில் பயணித்தாலும் நதிகளில் ஏரிகளில் படகு சவாரி செய்தாலும் அவர்களின் கண்களுக்கு விருந்தாக இருக்கவேண்டியவர் புத்தர் பெருமான்தான் என்பதிலும் ஆட்சியாளர்கள் அக்கறை காண்பிக்கிறார்கள்.

தலைநகரில் புத்தர் எங்கெங்கு சிலையாக தோன்றியிருக்கிறாரோ அவர் அங்கு முதல் முதலில் எழுந்தருளிய திகதிகளை மாநகர சபையின் பதிவேடுகளில் எளிதாக கண்டுபிடித்துவிடமுடியும்.

கடல் மார்க்கமாக கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் மாலுமிகளுக்கு முதலில் கண்ணில் ( ரெலஸ்கோப்பின் ஊடாக) தென்படுவது கொச்சிக்கடை அந்தோனியார் கோயில் கோபுரம்தான். இந்த நிலை நீடித்தால் பௌத்த தேசிய ஆட்சியாளர்களுக்கு உவப்பானது அல்லவே!

என்ன செய்தார்கள்...?

கொழும்பு கோட்டையில் கடற்கரையோரமாக உயரத்தில் அமைக்கப்பட்டது ஒரு பௌத்தவிஹாரை.

கொழும்பு -7 நோக்கி செல்லும் பாதையில் கங்காராமை என்ற விஹாரை அமைந்துள்ள இடத்திற்கு முன்பிருந்த பெயர் முனுசாமி பார்க். கடல் நீர் தேங்கியிருந்த அந்த சிறிய தீவில் இரண்டொரு தென்னை மரங்கள் இருந்தன. முனுசாமி என்பவருக்குச் சொந்தமான அந்த சின்னஞ்சிறிய தீவை 1976 காலப்பகுதிக்கு முன்னர் பார்த்திருப்பவர்களுக்கு அதன் தோற்றம் நினைவில் தங்கியிருக்கலாம்.

1977 இல் ஐ.தே. கட்சி அமோக வெற்றியீட்டியதையடுத்து அந்த முனுசாமியின் தீவுத் தோட்டம் சுவீகரிக்கப்பட்டது. படிப்படியாக அந்தத்தீவு பௌத்த விஹாரையாகி, இன்று கங்காராமை என்ற பெயரைப் பெற்றுவிட்டது.

சமீபத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி கண்டதையடுத்து, அந்த இரவே அவர் சென்று வழிபட்டதும் இந்த கங்காராமை என்ற முன்னாள் முனுசாமி தீவுத்தோட்டம்தான்!

கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் 1828 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது என்று வரலாறு சொல்கிறது.

அந்தோனியாரின் தேவாலய கோபுரத்தை விட உயரமாக கோட்டையில் அமைக்கப்பட்ட பௌத்த விஹாரையின் காலத்தையும் எளிதாக பதிவேடுகளிலிருந்து காணமுடியும்.

தர்மபோதனை செய்தவர்தான் கௌதம புத்தர். இலங்கையில் அவரைப் பின்பற்றி மதம் பரப்பி அன்புமார்க்கத்தை போதிக்கவேண்டிய காவியுடுத்த துறவிகள், தற்காலத்தில் அரசியல் போதிக்கவும், தேர்தல்களில் போட்டியிடவும், பதவிக்கு வரும் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் தங்கள் பிரதிநிதி குற்றம் செய்து சிறை சென்றால் அவரை விடுவிக்கச்சொல்லி ஆர்ப்பாட்டம் செய்யவும் முன்வந்துள்ளனர்.

விஹாரைகளில் இருக்கவேண்டியவர்கள் சிறைகளில் இருக்கிறார்கள்.

இந்தக்காட்சிகளை காணச்சகியாமல்தானோ புத்தபகவான் இலங்கை எங்கும் மௌனமாக தவம் இருக்கிறார். அவர் நீராடிய களனி கங்கையும் அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

(தொடரும்)





# பட்டறிவு

# "நோமோபோபியா" நாசத்திலிருந்து நம்மைக் காத்தல்

என்.சரவணன்



நோமோபோபியா இன்று உலகத்தின் மாபெரும் ஆட்கொல்லியாக உருவெடுத்துவருகிறது. (Nomophobia -"no-mobile-phone phobia").

அதென்ன நோமோபோபியா? உங்கள் கைத்தொலைபேசியில் அலைவரிசை சரியாகக் கிடைக்காமல் போனாலோ, பேட்டரி தீர்ந்து விட்டாலோ, செல்பேசியைக் காணவில்லை என்றாலோ, மிகவும் அதிகமாகப் பதட்டப்படுகிறீர்களா? அடிக்கடி அதனை பார்த்துவிட வேண்டும் என்கிற உணர்வு மேலிட்டவரா நீங்கள், அப்படியென்றால் உங்களுக்கு "நோமோபோபியா" இருக்கிறது என்பது உறுதி. அனாவசியமாக பயப்படுவது ""நோ மொபைல் போன் போபியா"" என்று வரை விலக்கணப்படுத்தியிருக்கிறார்கள்.

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்குமே ஒவ்வொரு மாதிரியான பயம் இருக்கும். ஆனால் சின்ன சின்ன விஷயங்களுக்கு எல்லாம் பயப்படுவதையே போபியா (Phobia) என்று அழைப்பர். போபியா என்பது இயற்கைக்கு மாறான பயம் ஆகும். போபியா உள்ளவர்கள் சாதாரணமாக பயப்படுபவர்களைக் காட்டிலும், அதிக ஆரோக்கிய பிரச்சனைகளை சந்திப்பார்கள். ஒரு வகையில் போபியாவை ஒரு மனநோய் என்றும் கூறலாம். பலவகை போபியாக்களை மருத்துவ உலகம் அடையாளம் கண்டு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.

தொடர்பாடலுக்கு பயன்படுத்தத் தொடங்கி, இன்று தேடலுக்கும், ஆய்வதற்கும், பொழுதுபோக்குக்கும், இன்னும் பல தேவைகளை கண்டடைவதற்கும் செல்பேசியைப் பயன்படுத்தி வருகிறோம். இதன் நீட்சி இன்று அதில் தங்கியிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டோம். பலர் அதற்கு அடிமையாகவே ஆகிவிட்டனர். இதன் விளைவு, நமது வாழ்க்கை உறவுகள் அருகில் இருக்காமல் கூட இருக்கலாம், ஆனால் செல்பேசி அருகில் இல்லையென்றால் பித்து பிடித்தவர்கள் போல ஆகிவிடுகிறார்கள். நாளுக்கு நாள் இந்தப் பித்து அதிகரித்து ஒரு வித மன நோய்க்கு ஆளாகிவிடுகிறார்கள். அதனை அடையாளங்கண்டு அதற்கு இட்டிருக்கிற பெயர் தான் நோமோபோபியா.

நோமோபோபியாவை நம்பியே இன்று பெரும் வர்த்தகங்கள் உலகில் தோன்றியுள்ளன. காசு பண்ணுவதற்காகவே பெரும் முதலீடு செய்யும் ஒரு தொழிலாக இந்த செல்போனுக்கு அடிமையாக்கும் வர்த்தகம் உலகமெங்கும் கோலோச்சத் தொடங்கியிருக்கிறது.

காலையில் எழுந்ததும் வாட்ஸ்அப்பில் வணக்கம் சொல்வதையும், இரவில் கண்கள் சொருகும்வரை செல்போனை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதையும், அடிக்கடி சரி பார்ப்பதையும், படுக்கைக்கு அருகிலேயே செல்போனை வைத்திருப்பதையும் பலரும் வழக்கமாக்கி வருகின்றனர். இதில் சிறியவர், பெரியவர் என்ற பேதம் இல்லை. ஸ்மார்ட்போன்களை அதிகமாகப் பயன்படுத்துவதால் ஏராளமான பிரச்சினைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. குற்றங்கள் அதிகரிக்கின்றன. உறவுகள் கூட வேறு வடிவங்களைப் பெற்று வருகின்றன.

முகநூலில் அடுத்த "லைக்" வந்து விட்டதா? வாட்ஸப்பில் புதிய தகவல் என்ன? ட்விட்டரில் போடப்பட்டிருக்கிற பின்னூட்டமென்ன? என்று பதட்டத்துடன் காத்திருப்பதும், வராத செய்தியை வந்திருப்பதாக கற்பனை செய்துகொண்டு திறந்து திறந்து பார்ப்பதும் ஒரு மன நோயாகவே கொள்ளப்படுகிறது. அரிக்காமலேயே அரிப்பதுபோலத் தோன்றுவதால், சொறிந்து கொள்வதுதான், இந்த தொழிநுட்ப யுகத்தில், புதிய நோய் அறிகுறியாக உருமாறியிருக்கிறது.

மதுபோதை பாவனையை நிறுத்த பல மருத்துவ நிலையங்களும், ஆலோசனை மையங்களும் இருப்பதைக் கண்டிருக்கிறோம். அதுபோலவே மேற்குல நாடுகளில் நோமோபோபியாவை ஒருவித நோயாக அடையாளம் கண்டு அதற்கு வைத்தியம் பார்க்கும் முறைமைகளும் மருத்துவ ஆலோசனை (Smartphone Addiction Therapy) வழங்கும் நிலையங்களும் (smartphone addiction treatment centers) கூட தோன்ற ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினரும், சிறுவர்களும் கூட இதன் பாதிப்புக்கு ஆளாகி வருவது பற்றி உலகமே பேசத் தொடங்கியிருக்கிறது.

குழந்தைகள் அழுதால் கூட தாலாட்டுப் பாடி அழுகையை நிறுத்தும் வழி மாறி, இப்போது செல்போனை கொடுத்து சமாதானப்படுத்தும் உலகத்தை காண்கிறோம்.

பிள்ளைகளுக்கு எந்த வயதில் செல்போன்களை வழங்கவேண்டும், ஒரு நாளைக்கு எந்தளவு நேரம் பயன்படுத்த அனுமதி வழங்கலாம், அதன் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகள், அதிகாரங்கள் என்பன பற்றியெல்லாம் இப்போது நிறைய பேசப்படுகின்றன.

முன்னர் எல்லாம் பஸ்களுக்கு காத்திருக்கும் நேரங்களில், அல்லது பயணங்களின் போதும் சூழலில் நிகழ்பவற்றை ஊன்றி கவனித்தோம். சக மனிதர்களின் முகங்களை வாசித்தோம். அவர்களை அறிய முற்பட்டோம். அவர்களின் தோற்றத்தை, உடைகளை, அவர்களின் உணர்வுகளை கவனித்தோம். சக பயணியுடன் கதைத்தோம். இப்போது அருகில் என்ன நிகழ்கிறது என்பதை சற்றும் பொருட்படுத்தாது தலையைக் குனிந்து செல்போனின் மூழ்கியிருக்கிறோம். மனித உறவுகள் அற்றுப் போய் இயந்திரங்களுடன் தொடர்பாடுவதோடு தம்மைக் மட்டுபடுத்திக் கொள்ளும் உலகம் உருவாகி வருகிறது. வெளி உலகத்துடன் மாத்திரமல்ல தமது வீடுகளில் சொந்த உறவுகளுடனும் தான். சற்று நேரம் செல்போன் இல்லேயேல் பதட்டம், தவிப்பு, அமைதியின்மை, மன உளைச்சல், ஆத்திரம் - மூத்திரம் எல்லாமே வந்து தொலைகிறது.

கணக்குகளை எல்லாம் நாம் கற்ற வாய்ப்பாடுகள் மற்றும் சூத்திரங்களுக்கு ஊடாக கணித்துச் சொல்லும் வழக்கம் கால்குலேட்டரின் ஆக்கிரமிப்புடன் எப்படி சுருங்கியதோ, அது போல கூகிளின் ஏகபோகம் ஆக்கிரமித்தவுடன் 'எல்லாம் நெட்டில் பார்த்துக்கலாம்' என்கிற மனோபாவம் வளர்ந்துள்ளது. மூளையில் எதையும் தக்கவைத்துக் கொள்ளவோ, சேமிக்கவோ சிரமப்படத் தேவையில்லை என்கிற மனோபாவமும் வளர்ந்துவிட்டுள்ளது. இது ஏற்படுத்தும் உளப் பிரச்சினைக்கு அப்பால் கண் அழற்சி, கண் சோர்வு, கண் மங்குதல், கண் நோவுடன் சேர்த்து தலை வலியும் ஏற்படுவதாக அடையாளம் காட்டப்படுகிறது. கூடவே கழுத்து குனிவின் காரணமாக ஏற்படும் வருத்தத்தை "எழுத்துக்கழுத்து" (text neck) என்று அழைக்கத் தொடங்கியிருக்கிறது மருத்துவ உலகம். இதை விட மணிக்கட்டு மற்றும் தோள்பட்டையில் வலி, எலும்பு மூட்டு நோ, இரத்த ஓட்டச் சிக்கல் (bloodstream), இருதய மற்றும் மூச்சுத் துவாரங்கள் கூட பாதிப்புக்கு உள்ளாகுவதாக அடையாளம் கண்டுள்ளனர். நோமோபோபியாவின் விளைவாக ஆண்களுக்கு விந்துற்பத்தி, விந்து வீரியம் கூட பலவீனப்படுகிறது என்கின்றனர்.

நோமோபோபியா பற்றி இன்று ஏராளமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. வெளிவந்து கொண்டிருக்கின்றன. முடிந்தவர்கள் அதனை தேடிப்பாருங்கள், எத்தனை பெரிய ஆபத்துக்குள் தள்ளப்பட்டிக்கிறோம் என்பதை நம்மால் அறிய முடியும். உலகம் முழுவதும் ஸ்மார்ட்போன் பயன்படுத்துபவர்களில் 53% வீதத்தினர் நோமோபோபியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கிலாந்தில் மாத்திரம் 66வீதத்தினர் என்கிறது ஒரு கணக்கெடுப்பு. பாதிக்கப்பட்டிருப்போரில் அதிகமானோர் இளம் பெண்கள்.

நோமோபோபியா என்கிற இந்த உயிர்க்கொல்லியிலிருந்து உலகைக் காக்கும் புதிய சிந்தனையின் அவசியம் அதி அவசியமாக – அவசரமாக உணரப்படும் இந்த சூழலை விளங்கி புதிய உத்திகளுடன் நம்மையும் நம்மை சூழ உள்ளவர்களையும் காப்போம்.

### இலங்கையின் சனத்தொகையில்.

1. 32% இணைய பயனர்கள்.
2. 6 மில்லியன் சமூக ஊடக பயனர்கள் செயலில் உள்ளனர்.
3. 27.38 மில்லியன் கைத்தொலைபேசி இணைப்புக்கள் உள்ளன.
4. 20% கைத்தொலைபேசி இணைய பயனர்கள்.
5. இணைய பயனர்களில் 96% முகநூல் பாவனையாளர்கள் (2018 பெப்ரவரி)
6. 6 மில்லியனுக்கும் மேற்பட்ட சமூக ஊடக பயனர்கள், 29% சமூக ஊடக செயலில் பயனர்களாக உள்ளனர்.
7. மொபைல்கள் மூலம் சமூக ஊடகங்கள் பயன்படுத்தும் 5.5மில்லியன் மக்களில், 26% தினசரி செயலில் ஈடுபடுகின்றன.
8. 6 மில்லியன் சமூக ஊடக பயனர்களில், 92% கைத்தொலைபேசிகளையே பயன்படுத்துகின்றனர்.
9. முகநூல் பயனர்களில் 68% ஆண்கள்

10 முகநூல் பயனர்களில் 32% பெண்கள்

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 08

அமரர் எம்.கனகரட்ணம் அவர்கள் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு ஆற்றிய தன்னலமற்ற சேவையினையும் அவரது மறைவுக்கு பின்னர் அவரது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கப் பொருத்தமானவர் அவரது இடத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பெற்ற அவரது தங்கை திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் தான் என்பதையும் நன்கு தெரிந்திருந்தும் கூட தமிழர் விடுதலைக் கூட்டணி அவரது நியமனத்தை எதிர்த்து அந்நியமனம் ஐக்கிய தேசியக் கட்சிக்குரியதல்ல, அது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே உரியது எனக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. கனகரட்ணம் அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளராக நின்றே பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக வென்றார் என்பதால் அவரது மரணம் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்குத் தமிழர் விடுதலை கூட்டணியைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்பெற வேண்டும் என்பதில் தார்மீக நியாயம் இருக்கிறது. அதனை மறுதலிப்பதற்கில்லை. ஆனால் திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பெற்றிருப்பதால் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் அடையக்கூடிய சமூக பொருளாதார நன்மைகளை கருத்தில் கொள்ளாது தங்கள் கட்சிக்கென்று ஒரு பாராளுமன்ற ஆசனத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணி குறியாக இருந்தது. இது அக்கட்சியின் மக்கள் நலன் சாராத – கட்சி அரசியல் நலனை மட்டுமே சார்ந்த சுயநல அரசியல் குணாம்சத்தின் வெளிப்பாடேயாகும். நீதிமன்ற வழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி தோல்வியுற்றது. திருமதி.ரங்கநாயகி பத்மநாதனின் நியமனம் தொடர்ந்தது. திருமதி. ரங்கநாயகி பத்மநாதனும் தமையனார் அமரர் கனகரட்ணத்தின் பாதையிலேயே பயணித்தார்.

அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்கள் பிரதேசங்களை "அறுக்கை" செய்வதற்கும், அரசாங்கங்கள் அவ்வப்போது அறிமுகம் செய்யும் உள்ளூராட்சி மற்றும்



நிருவாகச் சீர்திருத்தங்களின் நன்மைகளைப் பாரபட்சமின்றி பெற்றுக் கொள்வதற்கும் அத்துடன் அரசினால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பெறும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அனர்த்த நிவாரணங்கள், பிரதேச மட்டத்திலான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றால் விளையக்கூடிய பலாபலன்களைப் பாரபட்சமின்றிப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கென்று தனியான தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகுகளும் உள்ளூராட்சி அலகுகளும் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களும் ஆகிய மூன்று அடிப்படைக் கட்டுமானங்களும் அவசியமானவை என உணரப்பட்டதால் பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, காரைதீவு, சம்மாந்துறை, கல்முனை ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு மேற்கூறப்பெற்ற மூன்று கட்டுமானங்களினதும் தேவைப்பாடு எழுந்தது.

ஏனெனில் முஸ்லிம் பெரும்பான்மைத் தேர்தல் தொகுதிகளின் கீழும், முஸ்லிம் பெரும்பான்மை நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அலகுகளின் கீழும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் வாழ்ந்த 1947 இலிருந்து 1977 வரையிலான முப்பது வருட காலத்தில், தங்கள் வயற்காணிகளையும் வசிப்பிடங்களையும் வணக்கத் தலங்களையும் பொருளாதார அமைவிடங்களையும் முஸ்லிம்களிடம் பறிகொடுத்திருந்தார்கள். இதற்குக் காரணம் தமிழ் தமிழரசுக்கட்சியின் தந்திரோபாயமற்ற அரசியல் அல்லது யாழ்மேலாதிக்கப் பாராளுமன்றப் பதவி அரசியல் அம்பாறை மாவட்டத் தமிழர்களை அரசியல் செல்வாக்கு அற்றவர்களாக – அரசியல் அனாதைகளாக ஆக்கிவிட்டிருந்தது. இந்தக்கட்டத்திலே தான் 1977 இல் கனகரட்ணம் அவர்களும் அவரது மறைவுக்குப் பின்னர் 1981 இல் அவரது தங்கையான திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவர்களும் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் பாதுகாவலர்களாக மேற்கிளம்பினார்.

திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவர்களின் சேவைக்காலம் (1981-1989)

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு தனியான தமிழ் பெரும்பான்மை நிருவாக அலகுகளையும் உள்ளூராட்சி சபைகளையும் ஏற்படுத்த அவரது தமையனார் அமரர் கனகரட்ணம் எடுத்த முயற்சிகளை விடாது தொடர்ந்தவர். இத்தகைய செயற்பாடுகளை இப் பிரதேச முஸ்லிம் அரசில்வாதிகள் எதிர்த்த போது வளைந்து கொடுக்காது நிமிர்ந்து நின்று தனது நியாயமான கோரிக்கைகள் சிலவற்றையாவது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வென்றெடுத்தார். அவரது பதவிக் காலத்தில் தான் ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு 28.01.1988 இல் ஏற்படுத்தப்பட்டது. அதே போல் காரைதீவுக்கு என தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவும் 28.01.1988 இல் ஏற்படுத்தப்பெற்றது மட்டுமல்ல பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை, ஆகிய பிரதேசங்களில் தனியான தமிழ்ப் பெரும்பான்மை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஏற்படுத்தும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தின் முயற்சிகளுக்குப் பக்கபலமாக நின்று உதவிகள் புரிந்தார்.

1947-1977 காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் இழப்புக்கள்.

1947 இல் இருந்து 1977 வரை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்களுக்கென்று ஓர் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அற்றிருந்த காரணத்தினாலும் முஸ்லிம் பெரும்பான்மை தேர்தல் தொகுதிகளின் கீழும், முஸ்லிம் பெரும்பான்மை நிருவாக மற்றும் உள்ளூராட்சி அலகுகளின் கீழும் வாழ்ந்த காரணத்தாலும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்கள் வாழ்விடங்களையும், வயற்காணிகளையும், வணக்கஸ்தலங்களையுயும் படிப்படியாக இழந்தமைதான் கடந்த கால அனுபவங்களாகும். பல தமிழ் கிராமங்கள், தமிழ் பாடசாலைகள் முஸ்லிம் மயப்படுத்தப் பெற்றன. அவ்வப்போது திட்டமிட்டு ஏற்படுத்தப்பெற்ற தமிழ் முஸ்லிம் இனக்கலவரங்களும் முஸ்லிம்களுக்கிருந்த அரசியல் செல்வாக்கும், பொருளாதாரமும், தமிழ் கட்சியின் பாரா முகமும் தமிழர்களுக்கு விரோதமான பாராபட்சமான செயற்பாடுகளை முன்நெடுப்பதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குத் துணைபோயின. 1977 க்கு பின்னரும் கூட இப்பாராபட்சங்கள் முற்றாக நீங்கிவிடவில்லை. இன்றும் கூட இப்பாராபட்சங்கள் தொடரத்தான் செய்கின்றன. தமிழரசுக் கட்சியும் அன்றுபோல் இன்றும் பாராமுகமாகத்தான் இருக்கிறது.

முஸ்லிம் பாடசாலைகளாக்கப்பெற்ற தமிழ்ப் பாடசாலைகள்

- அக்கரைப்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை
- அக்கரைப்பற்று பிளாக்கி எம்.எம் பாடசாலை
- பாலமுனை றோமன் கத்தோலிக்க பாடசாலை
- மீனோடைக்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
- நிந்தவூர் 3ம் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
- சாய்ந்தமருது எம்.எம் பாடசாலை
- வீரமுனை எம்.எம் பாடசாலை
- 6ம் கொலனி அ.த.க பாடசாலை

பறிபோன வணக்கஸ்தலங்கள்

- நிந்தவூர் - காளிகோயில், பிள்ளையார் கோயில், கந்தசாமிகோயில்
- மழுனோடைக் கட்டு பிள்ளையார் கோவில்
- சாய்ந்தமருது வினாயகர் ஆலயம், விஸ்ணு ஆலயம், ஐயனார் கோயில்
- அக்கரைப்பற்று காளிகோயில்

முஸ்லிம் மயப்படுத்தப்பெற்ற தமிழ்க் கிராமங்கள்

- பெரிய நீலாவணையில் ஒரு பகுதி (தற்போது அக்பர் கிராமம்)
- கல்முனை 1ம் குறிச்சியில் ஒரு பகுதி (தற்போது இஸ்லாமாபாத்)
- பாண்டிருப்பில் ஒரு பகுதி
- சாய்ந்தமருது தமிழ்க் குறிச்சி (கரவாகு)
- நிந்தவூர் தமிழ் குறிச்சி
- சம்மாந்துறை தமிழ்க் குறிச்சி
- காரைதீவில் ஒரு பகுதி (மாளிகைக் காடு)
- பொத்துவில் நகர்ப்பகுதி மற்றும் பாக்கியவத்தை
- அட்டப்பள்ளம், திராய்க்கேணி போன்ற கிராமங்கள் பறிபோய்க் கொண்டிருந்தன.

இத்தகையதோர் பின்புலத்தில் தான் தங்கள் சமூக, பொருளாதார, அரசியல் இருப்பை எதிர்காலத்தில் பேணிப் பாதுகாப்பதற்காகத் தங்களுக்கென்று தனியான தமிழ்ப் பெரும்பான்மை நிருவாக அலகுகளையும், உள்ளூராட்சி அலகுகளையும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் ஏற்கனவே கோரத்தலைப்பட்டிருந்தார்கள்.

1967 இல் கல்முனையில் நிகழ்ந்த தமிழ் - முஸ்லிம் இனக்கலவரத்தின் பின்னர் காலஞ்சென்ற தோ.அந்தோணிப்பிள்ளை தலைமையிலான "கல்முனை முன்னேற்றச் சங்கம்" அப்போதைய ஸ்தலஸ்தாபன அமைச்சர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த அமரர் மு.திருச்செல்வம் அவர்களிடம் கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியைப் பிரிக்கும் எல்லையாகக் கொண்டு அப்போதைய கல்முனைப் பட்டினசபையை இரண்டாகப் பிரித்துத் தென்பகுதியை முஸ்லிம் பெரும்பான்மை அலகாகவும் வட பகுதியைத் தமிழ்ப் பெரும்பான்மை அலகாகவும் உருவாக்குமாறு கோரிக்கை விடுக்ககிலிருந்து இது ஆரம்பமாகிற்று. அப்போது ஐ.தே.க உடன் இணைந்து தமிழரசுக்கட்சி ஆட்சியமைந்திருந்த காலம். தமிழரசுக்கட்சியின் சார்பில் அமரர் மு.திருச்செல்வம் ஸ்தலஸ்தாபன அமைச்சராக அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தார். அவரே உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சர். ஒரு வர்த்தகமானி அறிவித்தல் மூலம் அவர் நிறைவேற்றிக் கொடுத்திருக்கக் கூடிய இந்த நியாயமான கோரிக்கையை அவர் தட்டிக்களித்தார். அன்று அதனை அவர் நிறைவேற்றிக் கொடுத்திருந்தால் இன்று கல்முனைப் பிரதேச தமிழர்களுக்கு ஏற்பட்ட அவல நிலை வந்திருக்காது. முஸ்லிம் அரசியல்வாதிகள் முகம் கோணாமல் தமிழரசுக் கட்சி பார்த்துக்கொண்டதே தவிர அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மீது ஆத்மாத்தமான அக்கறை கொண்டிருக்கவில்லை. இன்னும் அதுதான் தொடர் கதை. தமிழரசுக் கட்சியின் மனப்போக்கில் மாற்றம் இல்லை.

--தொடரும்--

## தமிழ் நாட்டில் குடியேறும் வட இந்தியரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

தமிழகம், கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களில் ஹிந்தி, வங்காளம், ஓரியா மொழி பேசுவோர் கடந்த 10 ஆண்டுகளில் அதிக அளவில் குடியேறியுள்ளனர். அதேசமயம் தமிழகம், கேரளாவைச் சேர்ந்தவர்கள் வட இந்தியாவிற்கு சென்று குடியேறுவது கணிசமாக குறைந்துள்ளது.

அரசு வேலை, தொழில், வர்த்தகம் போன்ற காரணங்களுக்காக தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் வட இந்தியாவில் குடியேறுவது வழக்கம். குறிப்பாக பெரு நகரங்களான டெல்லி, மும்பை, அகமதாபாத்தில் தமிழர்களும், கேரள மக்களும் அதிகமாக குடியேறி வந்தனர். இதுமட்டுமின்றி டெல்லியைச் சுற்றியுள்ள நொய்டா, குர்கான் போன்ற நகரங்களிலும் அதிகமானோர் குடியேறி வந்தனர்.

தொடர்ச்சி... (பக்கம் -17 )



# கிழக்கின் முதுசொம் "மூனாக்கானா"



வங்கக்கடலும், வாவியும் அதில் இசைபாடும் மீனும், தித்திக்கும் தேனும் மட்டக்களப்பு தேசத்தின் சொத்துக்கள். இந்த மட்டக்களப்பு, அதன் உணர்வை வெளிப்படுத்தும் திறன் "நாட்டுக்கூத்து". ஒவ்வொரு கடைக் கோடியிலும் ஆடி மகிழும் இக்கலையின் பிரதான இயங்குதளமாக மட்டக்களப்பு இருப்பதனால்தானோ என்னவோ "நாட்டுக்கூத்து" என்ற சொல்லுக்கு முன்பாக மட்டக்களப்பு என்ற அடைமொழியை நமது கண்கள் தேடுகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு இடத்தில் மாத்திரம் நாட்டுக்கூத்து ஆட, மட்டக்களப்பு நகருக்கு தென்திசையில் அமைந்துள்ள ஒரு பழம் சைவக்கிராமம் ஒன்றில் மாத்திரம், ஆறு இடங்களில் கூத்தாடும் களரிகள் கட்டப்படுகின்றன. இற்றைக்கு 90 வருடங்களுக்கு முன்பு, தனது ஐந்தாவது வயதில் ஒரு சிறுவன் அந்த கிராமத்தின் எங்கெல்லாம் கூத்து ஆடப்படுகின்றதோ, அங்கெல்லாம் பிரசன்னமாகின்றான். விடிய விடிய தீப்பந்தத்தின் வெளிச்சங்களில் களரி அமைத்து ஆடிய ஒவ்வெரு கூத்தையும் பார்க்கின்றான், ஆழமாக ரசிக்கின்றான், மகிழ்கின்றான். பாடசாலை நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் கூத்தும், அதை அடுக்குப் பார்த்தலும் என்று அவனது பொழுதுகள் கரைகின்றன. அவன் வளர, அவனது உறவினர் "அண்ணாவியார் நல்லார்" அவர்களோடு அவன் பார்க்கும் கூத்துக்கள் வெளியூர் வரை விரிகின்றன. முருகப்பன் - தங்கம்மா தம்பதிகளுக்கு ஆரையம்பதியில் "குரவர்" குடி மரபில் 1924.01.22 அன்று பிறந்த இவனுக்கு பெற்றோர் இட்டபெயர் கணபதிப்பிள்ளை. பின்னாளில் தந்தையினதும் தனதுமான பெயர்களில் முதல் எழுத்துக்களை கொண்டு மூனாக்கான என அறியப்பட்ட இவர்; தனது ஆரம்ப கல்வியை ஆரையம்பதி இராமகிருஷ்ணா வித்தியாலயத்தில் கற்கின்றார். தனது மண்ணில் கவின் கலாமன்றத்தின் பொறுப்பை ஏற்று முதன்முதலில் "இரு லேகா" என்ற நாடகத்தில் மூலம் நெறியாளராகி மெல்ல மெல்ல கவிதைகளையும் எழுதத் தொடங்குகின்றார்.

இந்த அனுபவமும் சின்னவயதில் இருந்து நாட்டுக்கூத்தை ஆழ ரசித்ததாலும் தனது ஆசிரியர் பயிற்சியை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் தொடர்ந்த போது ஓர் புரட்சிகர மாற்றம் ஒன்றை செய்வதற்கு அடிப்படையாகின.

பொதுவாக மட்டக்களப்பு கிராங்களில் பாமர மக்களால் ஆடப்பட்டு வந்த நாட்டுக்கூத்து முதன் முதலில் நகருக்குள் அதுவும் கல்விசாலை ஒன்றினுள் நுழைகின்றது. மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மாணவ ஆசிரியர்கள் முதன் முதலின் கூத்தர்களாகின்றனர். கலரி அமைத்து விடியவிடிய இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச கதைகளை மட்டுமே கண்ட நாட்டுக்கூத்துக்கலை முதன் முதலில் சமூகக்கதை ஒன்றை தனதாக்கின்றது. விடிய விடிய பல மணித்தியாலங்கள் ஆடப்படும் கூத்து ஒன்றரை மணித்தியாலமாக முதன்



முதலில் சுருங்குகின்றது. மக்களின் ரசனை மாற்றங்களை உள்வாங்கி நாட்டுக்கூத்தை சமூக சிந்தைனையை வெளிப்படுத்தி, அதில் நகைச்சுவை கலந்து கல்விச் சமூகம் ஒன்றினை நாட்டுக்கூத்தை ஆடவைத்து அண்ணாவியாராக பரிணமிக்கின்றார். இந்த "மூனாக்கானா".

அன்று இவரால் நெறிப்படுத்தப்பட்ட கூத்தின் பெயர் "லட்சுமி கல்யாணம்' ஒரு சமூகக் கதையை கூத்தின் மரபு வடிவத்திலும், பாட்டு, ஆட்டம், தாளக்கட்டு என்பவற்றிலும் எவ்வித மாற்றமும் செய்யாமல் நெறிப்படுத்தினார். இந்தக் கூத்து பின்பு நூறு தடவைகளுக்கு மேல் பல்வேறு ஊர்களில், பல்வேறு தரப்பினரால் ஆடப்பட்டது. இதனைத் தொடரந்து அவர் பரிசாரி மகன், சூறாவளி, அலங்காரரூபன் என தொடர்ந்து தயாரித்து மேடையேற்றி வந்தார்.

கண்டி, மலையகம் மற்றும் மட்டக்களப்பு என தான் கற்பித்த பாடசாலைகளில் எல்லாம் நாடகம், வில்லுப்பாட்டு கிராமிய நடனம் என இவர் நெறிப்படுத்திவை எண்ணிலடங்கா. தவிர 1948 களில் தினகரனில் "காலாகோலம்" "புழுகுப்புராணம்" என இரு தொடர் கவிதைகளை எழுதியதன் மூலம் கிழக்கின் நவீன கவித்துவ ஆளுமைகளில் முதன்மையானவராகின்றார். அதுமட்டுமல்லாமல், மட்டக்களப்பில் 16 க்கும் மேற்பட்ட பாடசலைகளுக்கு பாடசாலை கீதங்களை இயற்றிய இவர், இன்னமும் தனது கவித்துவை படைப்புக்களை தொடருகின்றார். 1950 களில் இருந்தே ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை தேசிய பத்திரிகையில் எழுதி ஆய்வாளராக பரிணமித்திருப்பது இவரது இன்னுமொரு முகமாகின்றது. "சம்பந்தி", "குடுகுடுப்பைகாரன்", "வானவில்" போன்ற சிறுகதைகளினுடாக சிறுகதை தடங்களையும் தொட்டுச்செல்கின்றார். மேலாக முக்கூட்டு கலைநாட்டமும், சோதிடமும் இவரது பொழுது போக்கு என இவரது பன்முகத்தன்மை பரந்து கொண்டே செல்கின்றது.

இலக்கிய நெஞ்சம், கவிதை நெஞ்சம் என வெளிவந்த இரு நூல்களுடன் நாடக நெஞ்சம், வில்லுப்பாட்டு நெஞ்சம், கிராமிய நெஞ்சம் என வெளிவர இருக்கும் நூல்களும் இவரது இலக்கிய ஆளுமையின் ஆவணமாகின்றன.

இலக்கிய கலை சேவைக்கு தேசிய மட்டத்தில் வழங்கப்படும் பெரும்பாலான விருதுகள் இவருக்கும் சொந்தமானதால் அவ்விருதுகள் பெருமையமைகின்றன. கிழக்கு பல்கலை கழகம் வழங்கிய

**பிரசாத் சொக்கலிங்கம்**

"தலைக்கோள்" விருதும் சேர்ந்து கொள்கின்றது.

"கலைமரபு நிறைநாட்டுக் கூத்துநெறி புரக்கும்
காவலரண் ணாவியயார்வாழ் ஆரையூரெம் நாடே"

என்ற அழகேச முதலியாரின் செய்யுள் போல் ஆரையம்பதிக்கு ஓர் முதுசொம் ஆகின்றார் இந்த "மூனாக்கானா". இவற்றுக்கெல்லாம் மேலாக 1940 களில் இருந்து இன்று வரை கிட்டத்தட்ட 78 வருடங்களாக எழுதிக்கொண்டிருக்கும் ஒருவர் ஈழத்தில் அதுவும் தமிழராக இருப்பது எம்மை சற்று கர்வம் கொள்ளவைக்கும் என்பதில் ஐயமில்லை.


சமூகக் கதை ஒன்றை நாட்டுக்கூத்துக்குள் புகுத்திய பெருமையும், நாட்டுக்கூத்தை சுருங்கிய நேரத்தில் ஆடவைத்த பெருமையும் இவரைச் சாரும்.

## திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம்



2000 வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை, ஆலயத்தில் ஆலயத்தலைவர் சு.சுரேஸ் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் உள்ளிட்ட 37 ,குருமார் 17 குண்டங்களை வைத்து இந்த மகாகும்பாபிசகத்தை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் நடாத்தியபோது எடுத்த படங்கள்.

(படங்கள் காரைதீவு நிருபர் சகா)



**சிறுநீரகம் தேவை**

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடார்புகளுக்கு : 0771837646

# லண்டன் ஈழபதீஸ்வரர் தேர்



லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா கடந்த 24ஆம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. அந்த ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவர் ஆர். ஜெயதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

ஆலயத்தை சுற்றவரவுள்ள வீதிகள்



வழியாக தேர் பவனி வந்தபோது அப்பகுதி மக்கள் மற்றும் அடியார்களின் ஒத்துழைப்புடன் விழா சிறப்பாக, அதேவேளை அமைதியாக நடைபெற்றதாக ஜெயதேவன் தெரிவித்துள்ளார்.

லண்டன் சிவன் ஆலயங்களின் தேர்களில் பெரியவற்றில் ஒன்றான இந்த ஈழபதீஸ்வரர் ஆலய தேர் இழுத்து வரப்பட்டபோது, அங்கு 2500 முதல் 3000 பேர் வரையிலான அடியார்கள் சமூகமளித்திருந்ததாகவும், அவர்களில் இளைஞர்கள் அதிகம் என்றும் கோயில் நிர்வாகிகளில் ஒருவரான விவேகானந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஈழபதீஸ்வரர் ஆலயத்தினால் மேற்கொள்ளப்படும் புலையவெளி மற்றும் தம்பனம்வெளி ஆகிய கிராமங்களின் அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும் அங்கு நடைபெற்றன. ஆலய திருவிழாக் காலத்தின் போது கிழக்கு கிராமங்களின் அபிவிருத்திக்கென சுமார் 26 லட்சம் ரூபாய்கள் சேகரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முத்துமாரியம்மன் ஆலயத்தில் கௌரவிப்பு நிகழ்வு



மட்டக்களப்பு கல்லடி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்காரச் சடங்கின், தீமிதிப்பு தினத்தன்று, ஆலயத்தில் நடந்த கௌரவிப்பு நிகழ்வில், அமரர் தம்பியப்பா தம்பிஜயா(பழைய விதானையார்) அவர்களது நினைவாக அவரது குடும்பத்தினர் ஆலயத்தின் காளி அம்மன் ஆலயம் நிர்மாணித்துக் கொடுத்ததற்காகவும், அமரர் நல்லையா உடையார் தங்கையா அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் ஆலயத்தின் வைரவர் ஆலயம் அமைத்துக்கொடுத்தற்காகவும் ஆலய நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். அதன்போது பிடிக்கப்பட்ட படம்.




## ஜோன் கீல்ஸின் கிழக்குமாகாண ஆங்கில தின விழா



ஜோன் கீல்ஸ் அறக்கட்டனை நிறுவனம் 2004 ஆண்டில் இருந்து நாடளாவிய ரீதியில் மக்களுக்கான சுகாதாரம், கல்வி, சூழல், சமூகம், கலை கலாசார வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.


இந்த நிலையில், அதனுடன் இணைந்ததாக பாடசாலை மாணவர்களுக்கு உயர் தர ஆங்கில கல்வியையும் இளைஞர்கள் மற்றும் வேலைவாய்ப்பை எதிர்பாத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான தொழிலுக்கான ஆங்கில கல்வியினையும் வழங்கி அதற்கான தேசியதர சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றது


கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான ஆங்கில பாடநெறிகள் நடாத்தப்பட்டு அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.


ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை நிறுவக சமூக சேவை அதிகாரி குமுது முனுசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும், மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடகிழக்கு ஆளணி இணைப்பு முகாமையாளர் எ. நிரோசன், மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் பிரதீப் வசந்த் மற்றும் மாணவர்கள் , பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.








மலைகளைப் பேசவிடுங்கள்

# இலங்கையில் தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டங்கள்

இலங்கையில் தமிழர்கள் கட்டுரை வெளிவந்த மலையகமும் மறுவாழ்வும் 2018 தமிழ்நாடு திருநெல்வேலி, பாளையம்கோட்டை, பாலபாக்யா மண்டபத்தில் நடைபெற்றது. இந்திய சமூக விஞ்ஞான கழகத்தினரின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பேராசிரியர் கே. சேவியர் அமல்ராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளை நூலின் தொகுப்பாசிரியர்





வழக்கறிஞர் தமிழகன் நெறிப்படுத்தினார். வரவேற்புரையை தமிழ்நாட்டு முற்போக்கு எழுத்தாளர் கலை இலக்கிய சங்கத்தின் உறுப்பினர் ஆறுமுகம் நிகழ்த்த நூலறிமுகத்தை அதே அமைப்பைச் சேர்ந்த தோழர் ஜெய்சிங் வழங்கியிருந்தார். இவர் இலங்கையிலிருந்து ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பியவராக தமிழகம் சென்றவர். இந்திய அரச வங்கியின் உயர் அதிகாரியாக பணியாற்றி, ஓய்வு பெற்றுள்ள ஜெய்சிங் இலங்கையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைத்துறைப் பட்டம் பெற்றதோடு சிலகாலம் அங்கு விரிவுரையாளராகவும் 70 களிலேயே கடமையாற்றியவர். தனது பட்டப்படிப்பின் பகுதி தேவையாக மேற்கொண்ட ஆய்வுக் கட்டுரையை "இலங்கைவாழ் இந்தியர்களின் குடியகல்வு " (1976) எனும் தலைப்பில் நூலாக வெளியீடு செய்துள்ளார்.

நூலின் கட்டுரை ஆசிரியர்களில் ஒருவரான மல்லியப்புசந்தி திலகர் பற்றிய அறிமுகத்தை கவிஞர் ஈழம் மலர் மன்னன் வழங்கியிருந்தார். இலங்கை கேகாலை மாவட்டத்தில் இருந்து தாயகம் திரும்பியவராக தமிழகத்தில் வாழ்பவர். திருச்சி செவ்வந்தி நினைவுப் பரிசு வழங்கிவைத்தார். நூலின் பதிப்பாசிரியர் அங்குசம் பதிப்பக உரிமையாளர் டார்வின் தாசன் நூல் பதிப்பின் நோக்கம் குறித்து உரையாற்றினார்.

நூலின் சிறப்பு பிரதிகளை தாமிரபரணி பாதுகாப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் பொருநை மைந்தன், கவிஞர் சிற்பி பாமா, பன்னூலாசிரியர் திவான், தேசிய நல்லாசிரியர் செல்லப்பா, பேராசிரியர் பொன்ராஜ், கோமதிநாயகம் ஆகியோருடன் இந்திய கமியுனிஸ்ட் கட்சி ( மார்க்ஸிஸ்ட்) திருநெல்வேலி மாவட்ட செயலாளர் கே.ஜி. பாஸ்கரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். கழுகுமலை, கரடிமலை இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியோர் கல்வி மேம்பாட்டு அமைப்பினர் குழுவாக வருகை தந்து நூலை தமது அறக்கட்டளைக்காக பெற்றுக் கொண்டனர்.

இலங்கை(யில்) தமிழர்கள் கட்டுரையாசிரியரும், இலங்கை, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா ( மல்லியப்புசந்தி திலகர் - கட்டுரையாளர்), " இலங்கை மலையகத் தமிழர்களின் இன்னல்கள்" எனும் தலைப்பில் உரையாற்றுமாறு அழைக்கப்பட்டிருந்தாலும், "இலங்கை மலையகத் தமிழர்கள் - நேற்று இன்று நாளை" எனும் தலைப்பில் உரையாற்றுமாறு கேட்கப்பட்டார். தமிழ்நாட்டு சூழலில் மலையகத் தமிழர் பற்றிய புரிதலை வேண்டி இவ்வாறு தலைப்பு மாற்றப்பட்டது. எனினும் அந்தப் புரிதலை இலகுபடுத்த உரையாளர் பின்வருமாறு தலைப்பினைத் தனது தெரிவாகக் கொண்டார். " இலங்கையில் தமிழர்களின் நாட்டுரிமைக்கான




போராட்டங்கள்". இந்த தலைப்பில் அமைந்த ஒன்றரை மணிநேர உரையின் கட்டுரை வடிவம் இனி.....

இலங்கையில் தமிழர்களின் நாட்டுரிமைக்கான போராட்டங்கள்

ஈழப்பிரச்சினையும் இனப்பிரச்சினையும்
--------------------------------------------------

இலங்கை என்றவுடன் "ஈழத்தமிழர் பிரச்சினை" என்ற புரிதலுக்குள் இலகுவாக வந்துவிடும் தமிழகத்தின் பெரும் பகுதியினர் "மலையகத் தமிழர்கள்" என்றவுடன், இந்திய நிலைப்பட்ட "மலைவாழ் மக்கள்" எனும் சாதிய அடையாளத்துடன் அறிந்து கொள்ள முனைகின்றனர். இது தவறானதாகும். "மலையகத் தமிழர்" என்பது சாதிய நிலைப்பட்டது அல்ல. அது இனத்துவ நிலைப்பட்டது.

இந்தியாவில் எவ்வாறு சாதிய கட்டமைப்பு 'அரசியல் அமைப்பாக்க மயமாக்கப்பட்டுள்ளதோ' அதுபோலவே இலங்கையில் இனக்கட்டமைப்பு அரசியல் அமைப்பாக்க மயப்பட்டுள்ளது (Constitutionalized). அதேபோல இந்தியாவில் "சாதி" நிறுவனமயப்பட்டும் இலங்கையில் "இனம்" நிறுவனமயப்பட்டும் (institutionalized) நிற்கின்றன. இதனால், இந்தியாவில் சாதியும் ( Caste),இலங்கையில் இனமும் (Race) அரசியல் மயப்பட்டுள்ளன (politicized).

அரசியல்மயப்பட்ட நிலையில் இரண்டுமே இரண்டு நாட்டிலும் " பிரச்சினையாகி" நிற்கின்றன. இதுவே "இலங்கையின் இனப்பிரச்சினை". இந்தியாவின் சாதிப்பிரச்சினை பற்றி இங்கு பேசவேண்டிய தேவை எழவில்லை. இலங்கையில் சாதி இல்லாமலும் இல்லை. சாதிப்பிரச்சினை இல்லையென்றும் இல்லை. ஊரில் ஓர் இந்து கோவில் இருந்துவிட்டாலே அங்கு சாதியும் இருக்கிறது, சாதிப் பிரச்சினையும் இருக்கிறது என்று இலகுவான புரிதலுக்கு வந்துவிட முடியும். எனினும், இந்தியாவைப் போன்று இலங்கையில், சாதி "அரசியல் அமைப்பாக்கம் செய்யப்படவில்லை (Constitutionalized)". இந்திய அரசியலமைப்பில் சாதிய அடிப்படையில் "ஒதுக்கீட்டு" ஏற்பாடுகள் ஏதுமில்லை. அத்தகைய ஏற்பாட்டைச் செய்த அண்ணல் அம்பேத்கர் நெறியான, இந்துத்துவ சாதியத்துக்கு மாற்றானதாக பௌத்தத்தை தழுவுவது இலங்கை நிலையில் எவ்வாறு பொருந்திப் போகும் என்பது கேள்விக்குறி. ஏனெனில், இலங்கையில் "பௌத்தமும்" சாதியமயப்பட்டிருக்கிறது. கூடவே இனத்துவமயப்பட்டும் இருக்கிறது. அது "சிங்கள பௌத்தமாகவே" நிலைகொண்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் இலங்கையில் எவ்வாறு இனக்கட்டமைப்பு அரசியலமைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி பார்த்தால், அது சிங்களவர்கள் (1), இலங்கைத்தமிழர்கள்(2), சோனகர்கள் (3), இந்தியத்தமிழர்கள்(4), ஏனையோர் (5) என ஐந்து பிரதான இனங்களாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளனர். ஏனையோர் வகுதிக்குள் இந்தியாவின் 'ஆங்கிலோ இன்டியர்களைப்' போன்ற 'பேர்கர்கள்' முதல் 'ஆபிரிக்க கலப்பினத்தவர்' வரையான இருபது இனங்கள் உண்டு என அண்மைய ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. இலங்கையின் ஆதிவாசிகளான பழங்குடியினரான ( வெத்தா) மக்கள் கூட ஏனைய இனக்குழுமத்துக்குள்ளேயே அடங்குகின்றனர்.

மலையக மக்களும் மலைவாழ் மக்களும்
--------------------------------------------------

இந்தியாவில் பழங்குடியினரை ( ST - Schedule Tribes ) என்ற சாதி அடையாளத்தின் ( அடித்தட்டில்) கீழ் வைத்து இருப்பதுபோல் இலங்கையில் பழங்குடியினரான ஆதிவாசிகள் இன அடிப்படையில் அடித்தட்டிலேயே வைக்கப்பட்டுள்ளனர் எனலாம். இந்தியாவில் பழங்குடியினரை (ST - Schedule Tribes) மலைவாழ் மக்கள் எனும் அழைக்கும் உள்ளபடியால், இலங்கையில் வாழும் 'மலையக(தமிழரை) மக்களை' 'மலைவாழ் மக்கள்' என புரிந்து கொள்ளும் நிலை உண்டு. இது தவறானது. இலங்கையில் ஒரு 'தேசிய இனமாக' அடையாளப்படுத்தப்பட்ட, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய 'இந்தித் தமிழர்கள்' என குறிப்பிடப்படுபவர்களே மலையகத் தமிழர்கள். ஈழத் தமிழர்கள் என இந்தியா (தமிழகம்) புரிந்து வைத்துக்கொண்டு உள்ளோர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய 'இலங்கைத்தமிழர்' என்றே பதிவு பெற்றுள்ளனர். ஆக, இலங்கையில் ஈழத்தமிழர் எனும் சொல்லாடலும், மலையகத் தமிழர் எனும் சொல்லாடலும் இருவேறு தேசிய இனங்களைக்குறித்து நிற்கின்ற மக்கள் பயன்பாட்டுப் பதங்களே.

இந்தியாவில் ஈழத்தமிழர்கள் எனச் சொல்லிக்கொண்டாலும் அவர்கள் இலங்கையில் இலங்கைத்தமிழர்களே. இந்தியாவில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அங்கு 'இந்தியத் தமிழர்கள்' இல்லை. ஆனால், இலங்கையில் உள்ளனர். அவர்களே மலையகத் தமிழர்கள்.

( தொடரும்

மல்லியப்புசந்தி திலகர்

## கல்மடு ஆற்றிற்குக் குறுக்கே சிறிய பாலம் அமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல்...

தொடர்ச்சி...


பாலமானது மிகவும் பயன்மிக்கதாக அமையும். ஏனெனில் இவ்வாற்றினைக் கடந்து ஈரளக்குளம், இலுக்குப்பொத்தானை, பெருமாவெளி, பெரியவெட்டவான் போன்ற பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. இக்கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதியாக இவ்வீதி காணப்படுகின்றது. அத்துடன் நான்கு பாடசாலைகளும் இருக்கின்றன. அமைக்கப்பட வேண்டிய இப்பாலமானது அமையப்பெற்றால் பிரதேச மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பல்வேறு தரப்பினர் இதன் மூலம் நன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இவ்விடத்தினைச் சென்று பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் மாகாணசபை அமைச்சர் இதன் சராசரி அளிவீடுகளை மேற்கொண்டனர். பின்னர் இப்பாலம் அமைப்பது தொடர்பில் உரிய அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு சென்று இதனை அமைப்பதற்குரிய சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்வதாகப் பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்துள்ளார்.



# அரச மானியம் பெற்ற பள்ளிவாசல்! விகாரை ஊழியம் செய்த தமிழர்!

இலங்கையின் பெரும்பாலான பகுதிகள், "பற்று" என்ற பெயரில் சிறுசிறு ஆட்சிப்பிரிவுகளாக நிலவி வந்தமை, உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும். இன்றும், அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, பாணமைப்பற்று ஆகிய பெயர்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவிற்பற்று, போரதீவுப்பற்று, மண்முனைப்பற்று முதலான பெயர்களையும் நம்மால் காணக்கூடியதாக இருக்கிறது. இப்படி முன்பொருகாலத்தில் கிழக்கிலங்கையில் வழக்கிலிருந்து மறைந்து போன பற்றுப்பிரிவு தான், நாடுகாடுப்பற்று.


நக்கை விகாரம் - தீகவாவி

நாடுகாடுப்பற்று இன்றைய அம்பாறை, இறக்காமம், தமணை பிரதேச செயலகப் பிரிவுகளையும், சம்மாந்துறை – அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுகளின் சில பகுதிகளையும் அடக்கியதாக இருந்தது. நாடுகாடுப்பற்று என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கான சான்று கிடைக்கவில்லை. அந்தப் பற்று, குடியிருப்புகள் உருவாகி நாடாக விளங்கி, அதே வேகத்திலேயே பாழடைந்து காடாக மாறியதால் அதற்கு நாடுகாடுப்பற்று என்ற பெயர் வந்ததாக ஒருசாரார் கூறுவார். ஆனால் இலங்கை வரலாற்றில், குறிப்பாக கிழக்கிலங்கை வரலாற்றில் அந்தப்பற்று குறிப்பிடத்தக்க இடத்தை வகித்திருக்கிறது என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

நாடுகாடுப்பற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்த்துவதாக நமக்குக் கிடைத்துள்ள முக்கியமான ஆவணம், நாடுகாடு பரவணிக் கல்வெட்டு. "பரவணிக் கல்வெட்டுகள்" கிழக்கிலங்கையின் தனித்துவமான இலக்கிய வடிவங்களில் முக்கியமானவை. பரவணி என்றால் தமிழில் பரம்பரை, சந்ததி என்று பொருள். அதே தமிழ் அர்த்தத்திலேயே இச்சொல் சிங்களத்தில் "பரவேனி" என்று வழக்கில் இருக்கிறது. கண்டிச்சட்டத்தில் பரம்பரைச் சொத்தான "பரவேனிப்பங்குவ" பற்றிய விவரணங்களைக் காணலாம்.

பரவணி இலக்கியங்கள், ஏனைய கல்வெட்டு இலக்கியங்கள் போலவே, கல்லில் பதிக்கப்படாமல், ஓலைச்சுவடியிலேயே எழுதிப்பேணப்பட்டன. திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் "பண்டு பரவணிக் கல்வெட்டு" இருந்ததாக அறியமுடிகின்றது. திருக்கோவிலின் வண்ணக்கர், நிலமைப்போடி (இன்று தலைவர்) முதலான பதவிகள், அந்தப் பதவிகளுக்கான தகைமைகள் முதலான மரபுகளைக் கூறிய அந்தப் பரவணிக் கல்வெட்டு, இன்று காணாமல் போயிற்று. இன்னொரு பரவணிக் கல்வெட்டான "குலம் கோத்திரப் பரவணிக் கல்வெட்டை" மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் காணலாம்.

நாடுகாடு பரவணிக்கல்வெட்டானது, முதன்முதலாக, 1887இல் "தப்ரபேனியன்" எனும் ஆங்கில இதழில் வெளியானது. இதை வெளியிட்ட "ஹியூஜ் நெவில்" எனும் பிரித்தானிய அதிகாரி, அதைத் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வண்ணக்கர் தன்னிடம் தந்ததாகவும், அது ஆரம்பத்தில் சிங்களத்தில் இருந்து சில ஆண்டுகளுக்கு முன் தமிழில் மொழிமாற்றப்பட்டு அவர்களால் பேணப்பட்டு வந்ததாகவும் சொல்லியிருக்கிறார்.

இந்தத் தமிழ் வடிவத்தின் பிரதியொன்றை, பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள், 1967இல் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் கண்டெடுத்தார். அது அவரது குறிப்புகளுடன், பின்னாளில் அச்சுப்பதிப்பிலும் வந்தது. என்றாலும் இன்றுவரை, அது வரலாற்றுரீதியாக விரிவான விவாதத்துக்கு உள்ளாக்கப்படவில்லை.

தமிழ்ப்பிரதியானது பெருமளவு பேச்சுவழக்கிலேயே எழுதப்பட்டிருக்கிறது. அது மொழிமாற்றத்தின் போது இடம்பெற்றிருப்பது இயல்பே. எனினும், பல இடங்களில் நூற்றாண்டுகள் பழைமையான பேச்சுவழக்கைப் புரிந்துகொள்வதில் நாம்




சிக்கல்களை எதிர்நோக்குகிறோம். நம் முப்பாட்டன் பேசிய மொழி எத்தனை விரைவாக நமக்கு அந்நியமாகி விடுகிறது?

நெவில் இதன் மூலப்பிரதி பதினான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்கிறார். சி.பத்மநாதன் அது பதினாறு, அல்லது பதினேழாம் நூற்றாண்டினது என்கிறார். புளியந்தீவில் உலுவிசி எனும் பறங்கி வாழ்வது பற்றிய குறிப்பு இக்கல்வெட்டில் காணப்படுவதால், பத்மநாதனின் ஐயம் வலிதாகின்றது. பரவணிக் கல்வெட்டின் மொழிநடை, அமைப்பு, அதில் சொல்லப்படும் செய்திகள், இவையனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது, அது மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்துக்கு முந்தையது போல் தென்படுகின்றது. பரவணிக்கல்வெட்டில் அரச மையங்களாக "அக்கரைப்பற்று ஏழு வனம்", "சிங்காரவத்தை" ஆகிய சொற்களே குறிப்பிடப்பட்டுள்ளன. சிங்காரவத்தை என்பது இன்றைய அட்டப்பள்ளம் ஆகும்.

பரவணிக்கல்வெட்டில் சொல்லப்படுகின்ற இடங்களெல்லாம் இன்றைய இறக்காமத்தை மையமாக வைத்தவை. வரிப்பத்தன்சேனை, கொக்குநாரை (கொக்நகர), பொன்னம்வெளி, கல்மடு, சுங்கத்துறை, திவிளானை (திவுலான), கொன்றைவட்டான் (கொண்டவெட்டுவான்), மாயக்காலிமலை (மாயக்கல்லி) என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவை. சில இடங்களை இன்று இன்னதென அடையாளங்காண முடியவில்லை.

இராஜபக்ஷ முதலியார், அவரது பெற்றோரான நிலைமையிறாளை - கிரியெத்தனா, சகோதரிகள், ஏனைய குடிமக்கள் ஆகியோர் சீதாவாக்கையிலிருந்து தளவில்லுக்கு வந்து குடியேறுவதுடன் பரவணிக்கல்வெட்டு ஆரம்பமாகின்றது. சிங்கள மூலப்பிரதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது என்பது தெரியாவிட்டாலும், "ஈசுரவருஷம் தை மாதம் 10ஆம் திகதி" என்றே தமிழ் மொழிபெயர்ப்பு ஆரம்பிக்கின்றது. அறுபது

**வரிப்பத்தான்சேனைப் பள்ளிவாசலுக்கு கண்டி மன்னன் ஒருவன் வந்ததையும் சைவ – பௌத்த வழிபாட்டிடங்கள் போலவே, அதற்கும் மன்னன் மானியம் வழங்கியமையையும் கல்வெட்டு விவரிக்கின்றது**

ஆண்டு வட்டத்தில் இது மீளமீள வரும் என்பதால், இது எந்த ஈசுவர ஆண்டு என்று தெரியவில்லை. சீதாவாக்கை இராச்சியம் நிலவிய காலம், கி.பி 1521 முதல் 1594 வரை ஆகும். இதற்கு முன்பின்னான அல்லது அந்த இடைவேளைக்குள் வந்த ஒரு ஈசுவர ஆண்டு என்று இப்போதைக்கு சமாதானம் சொல்லிக்கொள்ளலாம்.

பரவணிக் கல்வெட்டில் சொல்லப்படுகின்ற விடயங்கள் பல வரலாற்று ரீதியில் முக்கியமானவை. இராஜபக்ஷ முதலியாரும் அவர் சார்ந்த ஊழியச் சமூகங்களும் நாடுகாட்டில் இறக்காமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வரும் போது அங்கு ஏழு சோனகக்குடியினர் குடியேறுகிறார்கள். பொன்னாச்சி, வரிசைநாச்சி, முகாந்திரநாச்சி, மாலைகட்டி, கிணிக்கருதன், பணியவீடு என்று இந்த ஏழு குடிகளும் சொல்லப்படுகின்றன.

இவர்கள் நாடுகாட்டுக்கு எங்கிருந்து வந்தார்கள் என்ற விவரம் சொல்லப்படவில்லை. இந்தக் குடிப்பெயர்கள் நாடுகாட்டுக்கு வெளியே உள்ள அம்பாறை மாவட்ட முஸ்லீம்களிடம் இன்றும் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் பொன்னாச்சிகுடிக்கே முன்னீடு (முதன்மை) என்கின்றது கல்வெட்டு. பொன்னாச்சி என்ற பெயர், கிழக்கிலங்கைத் தமிழ்ச்சமூகப்பிரிவொன்றின் பெயராகவும் இருப்பதை, இந்த இடத்தில் ஆராயலாம். தமிழ்க் குடிகள் போலவே குறிப்பிட்ட சில இஸ்லாமியக் குடிகளே, சமீப காலம் வரை பள்ளிவாசல்களில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தமையையும் நாம் இந்தத் தரவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இக்கல்வெட்டில் வருகின்ற "நக்கை விகாரை" இன்றைய தீகவாவி விகாரை ஆகும். இறக்காமத்துக்கு மிக அருகேயுள்ள

**இலங்கையின் பாரம்பரியநெறியான பௌத்தத்துக்கு தமிழரும் சொந்தக்காரர்கள் தான் என்பதை நிலைநாட்டும் பரவணிக்கல்வெட்டு**

பழைமைவாய்ந்த விகாரை அது. திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, மண்டூர் போன்ற திருப்படைக்கோவில்கள் போல, 'நாக்கை விசாரைக்கென' குடிகள் ஊழியம் வகுக்கப்பட்டதை பரவணி விவரிக்கின்றது. நாடுகாட்டின் தலைமைக்காறப்போடிமார், இறைகாறப்போடிமார் ஆகியோர் நாக்கை ஊழியர்கள். மொண்டிறாமவில் (மொறாவில்?) சனங்கள் அங்குள்ள வயல்

மைங்கணான் மகிழறிவன்

வெளியை விதைத்து நாக்கைக்குக் கொடுக்கவேண்டும். வட்டிவிட்டி (வட்டிபுட்டி?) ஊருக்கு ஊழியம் அரிசி குத்திக்கொடுத்தல், கள்ளியம்பத்தையார் நெல் விதைத்துக்கொடுத்து ஊதியமாக அதையே உண்ணவேண்டும். நக்கை விகாரை பற்றி விவரிக்கும் வரிகளில் பல நபர்களின் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகக் காணப்படுகின்றன. அவ்வரிகள் அவர்கள் பௌத்தத் தமிழர்கள் என்பதற்கு கட்டியம் கூறுகின்றன. இலங்கையின் பாரம்பரியநெறியான பௌத்தத்துக்கு தமிழரும் சொந்தக்காரர்கள் தான் என்பதை நிலைநாட்டும் பரவணிக்கல்வெட்டின் இந்த வரிகள், வரலாற்று ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

நக்கைக்கு மாத்திரமன்றி, வரிப்பத்தான்சேனைப்பள்ளிக்கு பெயர் குறிப்பிடப்படாத கண்டி மன்னன் ஒருவன் வருகை தந்தமையையும் சைவ – பௌத்த வழிபாட்டிடங்கள் போலவே, அதற்கும் மன்னன் மானியம் வழங்கியமையையும் கல்வெட்டு விவரிக்கின்றது. நக்கையையும் பள்ளிவாசலையும் மையமாக வைத்து நாடுகாட்டின் சமூகங்கள் நிலப்பிரபுத்துவ பொருளாதாரத்துக்குள் கட்டமைக்கப்பட்டிருந்ததை பரவணிக்கல்வெட்டு நாசுக்காக சுட்டிக்காட்டுவதைக் காணலாம்.

நாடுகாடுப்பரவணிக் கல்வெட்டில் இன்னும் பல அரிய வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றை அடுத்த வாரம் பார்க்கலாம்.



# சவுதியில் ஆண் அனுமதியின்றி பெண்களால் செய்ய முடியாத சில விடயங்கள்

சவுதி அரேபியாவில் பெண்கள் வாகனம் ஓட்ட விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த 24ம் திகதி முதல் முடிவுக்கு வந்தது. ஆனாலும், பாலின சமத்துவத்துக்கான போராட்டம் அங்கு இன்னும் முடிவுக்கு வரவில்லை.

பெண்கள் எங்கு சென்றாலும் கட்டாயம் ஆண் பாதுகாவலர்களின் துணை இருக்க வேண்டும் எனும் சட்டம் சௌதி பெண்களின் அன்றாட வாழ்வில் பெரும் தாக்கம் செலுத்துகிறது.

சமீபத்திய கொள்கை மாற்றங்களால் சௌதி பெண்கள் முதல் முறையாக கால்பந்து விளையாட்டை மைதானத்தில் காண அனுமதிக்கப்பட்டனர். இராணுவ மற்றும் உளவு வேலைகளில் இனிமேல் பெண்களும் சேர முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

பெண்களுக்கான முதல் மிதிவண்டிப் பந்தயமும் சௌதியில் நடந்துள்ளது.

32 வயதாகும் முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மான் சில சீர்திருத்தங்களைச் செய்ய முயலும்போதிலும், பழமைவாத சமூகமான சௌதி இன்னும் பெண்களுக்கான உரிமையை முழுமையாக வழங்கவில்லை.

சவுதி பெண்களால் தாங்களாகவே இன்னும் செய்ய முடியாத ஐந்து செயல்கள் இதோ.

1. வங்கி கணக்கு திறப்பது
ஆண் பாதுகாவலரின் அனுமதி இல்லாமல் சவுதி பெண்களால் வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்க முடியாது.



சவுதி பின்பற்றும் வஹாபிய இஸ்லாம் பெண்களுக்கு கட்டாயமாக ஆண் பாதுகாவலர்கள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

அந்த ஆண் பாதுகாவலர் பெண்களின் தந்தை, சகோதரர், வேறு ஆண் உறவினர் போன்ற யாராகவும் இருக்கலாம். சில நேரங்களில், கணவரை இழந்த பெண்களின் பாதுகாவலராக அவர்களது மகன்களே இருப்பார்கள்.

இந்த முறை மனித உரிமை அமைப்புகளால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

2. கடவுச்சீட்டு வாங்குதல் / வெளிநாடுகளுக்கு பயணித்தல்
தங்கள் பெயரில் கடவுச்சீட்டு வாங்கவும், வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவும் சவுதி பெண்களுக்கு ஆண் பாதுகாவலர்கள் அனுமதி தேவை.

வேலை செய்யவும், படிக்கவும், சில வகையான மருத்துவ சிகிச்சைகளைப் பெறவும்கூட ஆண் பாதுகாவலர்களின் ஒப்புதல் வேண்டும்.

3. திருமணம் மற்றும் மணமுறிவு செய்தல்
திருமணம் செய்யவும், திருமண உறவில் இருந்து விலகவும் சவுதி பெண்களுக்கு ஆண் பாதுகாவலரின் ஒப்புதல் தேவை.

மணமுறிவுக்கு பிறகு ஏழு வயதுக்கும் அதிகமான ஆண் குழந்தைகள் மற்றும் ஒன்பது வயதுக்கும் அதிகமான பெண் குழந்தைகளை வளர்க்கும் உரிமையைப் பெறுவது பெண்களுக்கு மிகவும் கடினமானது. வேலைக்குச் செல்லும் தங்கள் ஊதியம் பிடுங்கப்படுவதாகவும், விருப்பமற்ற திருமணம் உறவில் கட்டாயமாகத் தள்ளப்படுபவதாகவும் சௌதி பெண்கள் கூறுகின்றனர்.

4. ஆண் நண்பர்களுடன் கா∴பி குடித்தல்
சவுதி அரேபிய பெண்களால் உணவு விடுதி ஒன்றுக்குச் சென்று ஆண் நண்பர்களுடன் ஒன்றாக அமர்ந்து ஒரு கா∴பி குடிப்பது கூட முடியாது.

உணவகங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனி இடங்கள் இருக்கும்.

குடும்பங்கள் மற்றும் பெண்கள் ஓர் இடத்திலும், தனியாகச் செல்லும் ஆண்கள் ஓர் இடத்திலும் சென்று உணவு உட்கொள்ள வேண்டும்.

5. விரும்புவதை அணிவது
பொது இடங்களில் பெண்கள் உச்சி முதல் பாதம் வரை முழு உடலையும் மறைக்கும் "அபயா" எனும் ஆடையைத்தான் அணிய வேண்டும்.

இதைப் பின்பற்றாத பெண்கள் மதக் காவலர்களால் உண்டாகும் பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு முக்கிய மதகுரு, "பெண்கள் அபயா அணிவது கட்டாயமல்ல" என்று கூறியுள்ளார்.

இது வருங்காலத்தில் உண்டாகவுள்ள மாற்றங்களுக்கு ஒரு முன்னோட்டமாக இருக்கலாம்.

நன்றி : பிபிசி

## சிறப்பாக நடைபெற்ற திருக்கோவில் இறுவட்டு வெளியீடு!



கிழக்கிலங்கையின் முதலாவது திருப்படைக் கோவிலான திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் மீது பாடப்பெற்ற கந்தன் காவியப்பாடல்கள் அடங்கிய இரு இறுவட்டுகள் (24) ஞாயிறுகாலை விபுலமணி. சிவஸ்ரீ.சண்முகமகேஸ்வரக்குருக்கள் ஆசியுடன் ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

ஆலய வளாக முன்றலில் இவ் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு சிறப்பித்தார். பிரதியை இலங்கைத் திறைசேரியின் முகாமைத்துவப்பிரிவின் மேலதிக பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் உள்ளிட்ட அதிதிகள் பெற்றுக்கொண்டனர்.

ஆலயபிரதமகுரு சிவாகம வித்தியாபூசணம் விபுலமணி.சிவஸ்ரீ. சண்முகமகேஸ்வரக் குருக்கள் குத்துவிளக்கேற்றி ஆசிவழங்கினார். ஆலயகுரு. சிவஸ்ரீ.நீதிநாதக்குருக்கள் அங்குசநாதக்குருக்களும் கலந்துகொண்டார். புலம்பெயர்ந்து வாழும் திருக்கோவிலைச்சேர்ந்த கோவிலூர் செல்வராஜன், எஸ்.பி.கனகசபாபதி, இரா.தெய்வராஜன் ஆகிய எழுத்தாளர்கள் எழுதி தயாரித்த பாடல்களை இந்தியாவின் பிரபல பாடகர்களான அனுராதாஸ்ரீராம் தேனிசைத்தென்றல் தேவா உள்ளிட்ட பாடகர்கள் பாடியுள்ளனர்.
(காரைதீவு நிருபர் சகா)

## மட்டக்களப்பு கொத்துக்குளத்து மாரியம்மன் தேரோட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் கொத்துக்குளம் முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேரோட்டம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
கடந்த 18ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வு அடியார்கள் புடை சூழ கோலாகலமாக நடைபெற்றது.
விநாயர் வழிபாடுகளுடன் கிரியைகள் ஆரம்பமாகி, விசேட யாக, ஹோமம், பூசைகள் நடைபெற்று, தொடர்ந்து விசேட அபிசேகம் பூஜைகளுடன் பிரதான கும்பங்கள் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு அம்மன் தேரில் வலம் வந்தார்.
தேரோட்டம், அடியார்கள் புடை சூழ வேத, நாத, மேளங்களுடன் அடியார்களின் ஆரோகரா கோசங்களுடன் கோலாகலமாக நடைபெற்றது .

வவுணதீவு, பெரிய ஊறணி, வலையிறவு, சின்னஊறணி, கல்லடித்தெரு, பிள்ளையாரடி, செங்கலடி உள்ளிட்ட ஏழு ஊர் மக்களினாலும் நடத்தப்படுகின்ற இவ் ஆலயத்தின் மகோற்சவம் வருடா வருடம் மிக மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# மூதாதையரின் காலடிகள்

## கங்கை வேலி கொண்ட கங்குவேலி

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்

""கங்கையது வேலியதால்
காராளர் வாழ் நிலமாம்
பொங்கு தமிழ் பூமியதாம்
கங்குவேலிப் பேரதுவாம்

சுற்றிவர மாவலியும்
சோலையுறு கா வெளியும்
நெற்கதிர்கள் கோலமிடும்
நெடும் தொன்மைத் திருவூராம்""

ஈழத்தில் உள்ள தமிழ் கிராமங்களில் தனித்துவ அழகு காட்டி நிற்கின்ற வரலாற்று முதுசொங்களையும் தமிழ் மக்களின் வாழ்வியல் தடயங்களையும் கொண்ட நீர் வளமும் நெல் வளமும் கொண்ட தனித் தமிழ் கிராமம்.

சோலை போல் மருத மரங்களும் மற்றும் நீண்டுயர்ந்து வான் வரை நீளும் நெடிதுயர்ந்து காணுமிடமெங்கும் தண்ணீரும் வண்டல் மண்ணும் வளத்தின் தளத்தை சொல்லி நிற்கும்.

மாவலியாறு இந்த அழகு தமிழ் ஊரை

**ராஜேந்திர சோழனின் நிர்மாண எச்சங்கள் இன்றும் ஆதாரமாக இருக்கின்றன**

சுற்றிச் சுற்றி கோலமிட்டு வற்றாத செல்வத்தை வாரி வழங்கும் திருத் தலமாய் செல்லுமிடமெங்கும் சிறப்புறு அழகைக் காட்டி நிற்கும். கங்கை சூழ்ந்து வேலிபோல் எல்லைகளை கூறி நிற்பதால் கங்கை வேலி என்பது கங்குவேலி ஆனதாக இக் கிராமத்தவர்களது மரபுக் கதைகள் சொல்கின்றன.

கங்குவேலி என்பதற்கு மற்றுமொரு காரணமும் சொல்லப்படுகிறது. மாவலி ஆறு எப்போதும் நொங்கும் நுரையுமாய் கங்கு கரையற்று ஓடி, ஊரை வலம் வருவதால் கங்குவேலியானதாக பேசப்படுகிறது.

சுதந்திரத்துக்கு முன்னரான காலகட்டத்தில் கங்குவேலி கிராமம் அதையடுத்து மேன்காமம், அதைத் தாண்டிச் செல்ல கிளிவெட்டி என கலப்பற்ற தனித்தமிழ் ஊர்களே இருந்தன. ஆனால் அறுபதுகளில் உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டம் புதிய சிங்கள கிராமங்கள் பலவற்றை உருவாக்கின. சோமபுரம், தெகிவத்த அவற்றையடுத்து கந்தளாய் பாதையில் கல்லாறு முதலான கிராமங்களில் சிங்கள மக்கள் தென்னிலங்கையிலிருந்து கொணர்ந்து குடியேற்றப்பட்டனர். ஆனால் அனைத்துக்கும் தன் தனித்துவத்தை இழக்காமல் கங்குவேலி கிராமம் தமிழர் நிலமாய் தன்னை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இப்பிரதேசம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பெரும் கோயிலும் அதனைச் சூழ பெருநகரமுமாய் இருந்ததற்கான சான்றுகள் சூழ உள்ள பெருங்காடுகளில் பரவலாக காணப்படுகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தை அமைத்த ராஜேந்திர சோழன் இங்கு மாவலி கொண்ட சோழபுரத்தை அமைத்ததற்கான ஆதாரங்கள் நிறைந்து கிடக்கின்றன. கல் வெட்டுக்களாகவும் கற் தூண்களாகவும் கலை சிற்பங்களாகவும் சாட்சி சொல்லி நிற்கின்றன.

பழந்தமிழர் நாகரிகம் செழித்து நிலைத்திருந்த இந்தப் பிரதேசம் பின்னைய நாட்களில் அழித்தொழிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது புதையுண்டு போயிருக்க வேண்டும் .



இது 14ஆம் நூற்றாண்டுக்கு உரியது என ஆய்வு முடிவுகள் சொல்கின்றன.

கங்குவேலியின் சூழ உள்ள திருக்கரசையும் அகத்தியஸ்தாபனமும், வவுணாவில் தீர்த்தக்கரையும் நீண்ட பண்பாட்டின் கலாசார அடையாளமாக இன்று வரை தொடர்வது நம் கவனத்துக்கு உரியதே.

புதைந்து போன ஒரு தமிழர் நாகரிகத்தின் தொன்மையை சொல்லும் இடமாகவும் கங்குவேலி, ஈழத்தமிழர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.



இங்கு உள்ள ஆதி சிவன் ஆலயமும் அங்குள்ள சோழர்காலத்து மணியும் இன்னறய கோயிலில் வைத்துக் கட்டியுள்ள கலை வெளிப்பாட்டு தூண்களும் நீர் வெளியேறும் அழகிய யாழி முகமும் வாசல் படியும் அழிந்த நாகரிகத்தின் சாட்சியாய் நம் முன் உள்ளன.

திருகோணமலை மாவட்டம் வன்னிபங்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த போது கொட்டியாரத்து வன்னிபத்தின் முக்கிய இடமாக கங்குவேலி இருந்ததற்கான ஆதாரங்கள் மரபு வழியாக வரும் கதைகளின் மூலம் அறிய முடிகிறது.

கங்குவேலிக் கல்வெட்டு என வரலாற்று ஆய்வாளர்களால் பேசப்படும் கல்வெட்டு இன்றும் ஆதிசிவன் கோயிலில் உள்ளது.

இந்தக் கல்வெட்டு "மலையில் வன்னியனார் தலைமையில் ஏழூர் அடப்பன் மார்களும் கூடி தம்பிரானார் கோணை நாதருக்கு" நிவந்தமாக நிலம் அளித்த கதையை சொல்கிறது.

**திருகோணமலை மற்றும் கொட்டியார வன்னிபங்களுடன் தொடர்புபட்ட ஊர்**

இந்தக் கல்வெட்டில் சொல்லப்படும் முக்கிய செய்தி ஏழூர் அடப்பன் என்பதாகும். கங்குவேலியை சூழ ஏழு பெரும் ஊர்கள் இருந்தமை நிருபணமாகிறது. திருகோணமலை வன்னிபத்தின் நேரடி தொடர்புகளும் இருந்திருப்பது போலவும் அறிய முடிகிறது.

இயற்கை வளமும் வரலாற்று தொன்மையும் கொண்ட கங்குவேலி ஈழ நிலத்தின் செழுமை மிகு நிலங்களில் ஒன்று.

## சம்மாந்துறை கோரக்கோயில் அகோர மாரியம்மன் ஆலய தீமிதிப்புச்சடங்கு!



வரலாற்றுப்பிரசித்திபெற்ற சம்மாந்துறை கோரக்கோயில் அகோரமாரியம்மன் ஆலய வருடாந்த் தீமிதிப்புச்சடங்கு 27ஆம் திகதி புதன்கிழமை தலைமைப்பூசகர் மு.ஜெகநாதன் ஐயா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோஹரா கோசம் முழங்க சுமார் 500 பக்தர்கள் தீமிதிப்பிலீடுபடுவதையும் பக்தர்கள் சூழவிருப்பதையும் காணலாம்.

படங்கள் : காரைதீவு நிருபர் சகா)

## தமிழ் நாட்டில் குடியேறும் வட இந்தியரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

தொடர்ச்சி...

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இது உறுதிப்படுகிறது. ஒவ்வாரு பத்தாண்டில் கணிசமானோர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக வட இந்திய மாநிலங்களில் குடியேறியுள்ளனர். தமிழர்கள், கேரள மக்களை தொடர்ந்து கர்நாடகா, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் குறிப்பிடத்தக்க அளவில் வட மாநிலங்களில் குடியேறி வந்தனர்.
ஆனால் 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் தலைகீழான நிலை ஏற்பட்டுள்ளது. வட இந்திய நகரங்களில் குடியேறும் தமிழர்கள், கேரள மக்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது.

ஆனால் அதற்கு நேர் மாறாக உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற வட மாநிலங்களில் இருந்தும், அசாம் போன்ற வட கிழக்கு மாநிலங்களிலும் இருந்து ஏராளமானோர் தமிழகம், கேரளாவில் குடியேறியுள்ளனர். நேபாளிகளும் கணிசமான அளவில் தென் மாநிலங்களில் குடியேறியுள்ளனர்.

தென் மாநிலங்களில் நிலவும் அமைதியான சூழல், வேலைவாய்ப்பு, பொருளாதார வசதி போன்ற காரணங்களுக்காக இவர்கள் தமிழகத்தில் குடியேறியுள்ளதாக தெரிகிறது. தமிழகம் மற்றும் கேரளாவில் உள்ளூர் வேலைகளுக்கு ஆட்கள் கிடைக்காத நிலையில் வர்த்தக நிறுவனங்களும் வட இந்திய தொழிலாளர்களை பெரிய அளவில் பணிக்கு அமர்த்தி வருகின்றன. இதன் காரணமாகவும், அவர்கள் தமிழகம், கேரளாவில் குடியேறுவது அதிகரித்துள்ளது. இதுமட்டுமின்றி உயர் கல்விக்காகவும், சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு ஹிந்தி, வங்காளம், ஒரியா மொழி பேசுபவர்கள் கணிசமான அளவில் வருகை தருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# ஆரையூர் கண்ணகை வரலாறும் வழிபாடும்: தேடலில் இறங்கியிருக்கும் பிரசாத் சொக்கலிங்கம்


ஆரையம்பதி கண்ணகை

மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் என்பன ஐதீகங்களாக போற்றப்பட்டாலும், இவற்றில் வரும் பெண்பாத்திரங்களுக்கு கோயில்கள் அமைத்து வழிபடும் மரபும் தொன்றுதொட்டு நீடிக்கிறது. இந்தக்காவியங்களில் வரும் ஆண் பாத்திரங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள்தான். மகாபாரதத்தில் குந்தி முதல் பாஞ்சாலி வரையிலும், இராமாயணத்தில் சீதையும், சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள்தான். குந்தியைத்தவிர ஏனைய மூவரும் வழிபாட்டுக்குரியவர்களாகிவிட்டனர்.


இலங்கையில் திரௌபதை அம்மன், கண்ணகி அம்மன், சீதை அம்மன் கோயில்கள் அமைத்து சைவத்தமிழர்களும் பௌத்த சிங்களவர்களும் வழிபடும் மரபும் தொடர்ந்து பண்பாட்டுக் கோலமாகவே மாறிவிட்டது. சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் மகள் மணிமேகலையும் மக்களிடத்தில் காவியமாகியிருக்கிறாள். மணிமேகலை தமிழ்க்காப்பியம் மட்டுமல்ல, அது பௌவுத்த காப்பியமும்தான் என்று நிறுவுகிறார் தமிழக எழுத்தாளர் பேராசிரியர் அ. மார்க்ஸ். ( ஆதாரம்: தீராநதி 2017 ஜூன்).

கண்ணகி வழிபாடு, திரௌபதை அம்மன் வழிபாடு என்பன கிழக்கிலங்கையில் மிகவும் முக்கியத்துவமாகி இருக்கின்றன. இராவணன் சீதையை கவர்ந்து வந்து அசோகவனத்தில் சிறைவைத்தமையால் அங்கு சிங்கள மக்களால் சீதாஎலிய என்னுமிடத்தில் சீதை அம்மனும், வடமேற்கு இலங்கையில் உடப்பு மற்றும் கிழக்கிலங்கை பாண்டிருப்பில் தமிழர்களினால் திரௌபதை அம்மனும், கன்னன் குடாவில் ஸ்ரீகண்ணகி அம்மனும் குடியிருக்கிறார்கள். பாரத நாட்டில் தோன்றிய காவிய மாந்தர்களில் குறிப்பாக பெண்களுக்காக இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் வழிபாட்டு மரபை தோற்றுவித்திருப்பதின் பின்னணி விரிவான ஆய்வுக்குரியது.

திரௌபதை அம்மன் கோயில் முன்றல்களில் தீமிதிப்பு; உடப்பு பிரதேசத்தில் அதனை பூமிதிப்பு என்பார்கள். இரண்டு நேர்த்திக்கடன்களுமே தம்மை வருத்திக்கொள்ளும் செயல்கள்தான். பெண்தெய்வங்கள் இப்படியும் ஆண்களை பழிவாங்குகின்றனவா...? சீதையை இராமன் தீக்குளிக்கவைத்தான். பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரிந்தான். கண்ணகியின் கணவனை பாண்டியன் சிரச்சேதம் செய்வித்தான். பெண்களின் சோகங்களும் சாபங்களும் நிரம்பிய ஐதீகக்கதைகளை காவியங்களாக எழுதிவிட்டுச் சென்றிருப்பவர்களும் ஆண்கள்தான்.

நல்லை நகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்ன செய்தார்...? என்ற சுவாரஸ்யமான செய்தியை ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை ஒரு தடவை எழுதியிருந்தார். நாவலர் காலத்தில் வடபகுதியில் கண்ணகி வழிபாடு தீவிரமாக இருந்திருக்கிறது. சைவமரபில் வந்திருக்கும் அவர், தமிழகத்தின் வாணிபச்செட்டிச்சிக்கு இங்கு வழிபாடா...? என்று படிப்படியாக அந்த மரபை மாற்றியிருக்கிறார். அதனால் வடபகுதி கண்ணகி அம்மன்கள் வேறு அம்மன்களாக உருமாறிவிட்டனர் என்ற கருத்தும் நிலவுகிறது என்றார் பொன்னுத்துரை. ஆனால், கிழக்கிலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு கண்ணகி தெய்வமாகியிருப்பதுடன், சிங்கள மக்கள் மத்தியிலும் பத்தினி தெய்யோவாக மாறிவிட்டாள்.

கிழக்கிலங்கையில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களின் பட்டியலை




பாருங்கள்:

பட்டிநகர் ஸ்ரீ கண்ணகி அம்மன் கோயில், பனங்காடு, அக்கரைப்பற்று கண்ணகி அம்மன் கோயில் சம்மாந்துறை, கண்ணகி அம்மன் கோயில் , வீரமுனை, சம்மாந்துறை, கண்ணகி அம்பாள் கோயில் களுவாஞ்சிக்குடி. கடற்கரை கண்ணகி அம்பாள் கோயில், கல்முனை. கண்ணகி அம்மன் கோயில், துறைநீலாவணை கண்ணகி அம்மன்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

கோயில். விடத்தல்முனை , புளியந்தீவு, கண்ணகி அம்மன் கோயில் தாளங்குடா, காத்தான்குடி, கண்ணகி அம்மன் கோயில் புன்னைச்சோலை, அமிர்தகழி, கண்ணகி அம்மன் கோயில், சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் கோயில், கல்குடா, வாழைச்சேனை, கண்ணகி அம்மன் கோயில், கல்குடா , சித்தாண்டி, கண்ணகி அம்மன் கோயில், கல்குடா, கிரான், கண்ணகி அம்மன் கோயில், கல்குடா, முறக்கொட்டாஞ்சேனை.


பிரசாத் சொக்கலிங்கம்

இது இவ்விதமிருக்க திரு. பிரசாத் சொக்கலிங்கம் அவர்களும் (அமரர்) க. சபாரெத்தினமும் இணைந்து எழுதியிருக்கும் ஆரையூர் கண்ணகை - வரலாறும் வழிபாடும் என்ற நூல் மேலும் பல புதிய தகவல்களைத் தந்திருப்பதுடன் பல பார்வைகளுக்கும் யன்னல் திறக்கின்றது. இந்த நூலை எனக்கு தபாலில் அனுப்பியிருக்கும் திரு. பிரசாத் சொக்கலிங்கம் அவர்கள், இந்த நூலை வெளிக்கொணர்ந்தமைக்கான காரணத்தை இவ்வாறு சொல்கிறார்:

"உண்மையில் ஆரையம்பதியில் அமைந்துள்ள கண்ணகி கோயில் வரலாற்றில் புனைவுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதால், அதன் உண்மைத்தன்மையை தேடி அறிவதற்கு செய்யப்பட்ட முயற்சி இந் நூலை வெளிக்கொண்டுவர அடிப்படையானது.

கிழக்கில் காணப்படும் கண்ணகி வழிபாட்டில் முக்கியத்துவம் பெறும் ஆரையம்பதி கண்ணகியை பல ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அல்லது கண்ணகி பற்றிய சேதிகளை பதிவு செய்கூடியவர்கள் போன்றோர், மிகக்கவனமாக ஆரையம்பதி கண்ணகியை தவிர்த்து வந்திருந்தார்கள். இப்போதும் இது தொடர்கின்றாதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்."

இந்த நூலின் இறுதியில் பிரசாத் சொக்கலிங்கம், " தேடலில்..." என்னும்



தலைப்பில் இவ்வாறு சொல்கிறார்:

ஈழத்தில் கிழக்கிலே தமிழர்களின் பெரிய ஊர் என வரையறுக்கத்தக்கவாறு 13 கிராம பிரிவுகளை தன்னுள் உள்ளடக்கிய கிராமம் - ஆரையம்பதி. இதன் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பல தனித்துவம் வாய்ந்தவையாக அடையாளப்படும் போக்கில் இவ்வூரின் போற்றுதலுக்குரிய தெய்வமான கண்ணகையம்பாள் அமர்ந்திருக்கும் ஆலயமும் கிழக்கில் தனிச்சிறப்பு வாய்ந்தது. இறை நம்பிக்கைகளை பகுத்தறிவுடன் அணுகும் இன்றைய தலைமுறையினர் கூட, சித்திரை வருடப்பிறப்பு முடிந்தகையோடு பேசத்தொடங்கும் விடயம்," எப்ப சடங்கு தொடங்குது...." என்பதாகும். அந்த அளவு வைகாசியில் இடம்பெறும் சடங்கு என்ற இந்த ஆலயத்தின் பெருவிழா ஒவ்வொருவரினதும் மனங்களில் வேரூன்றி இருப்பதை காணலாம்.

மட்டக்களப்பின் கண்ணகை வழிபாடு மற்றும் இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளவென தங்களை நிலை நிறுத்திய அமைப்புக்களும் ஆர்வலர்களும் ஆரையம்பதி என்ற பேரூரையும் அதற்கு ஓர் கலாச்சார குறியீடாக அமைந்திருக்கும் கண்ணகை அம்மன் கோயிலையும் தவிர்த்து பயணிப்பதில் உள்ள சூட்சுமத்தை இன்னமும் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதும் இங்கு கவலை தரும் செய்தியாகிறது."

பிரசாத் சொக்கலிங்கம் அவர்கள் முன்வைத்திருக்கும் இந்த எதிர்வினைக் கருத்துக்கு கிழக்கிலங்கையில் கண்ணகை பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுவரும் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள்தான் விளக்கம் தரல் வேண்டும்.

தமது தரப்பு நியாயங்களை ஆரையூர் கண்ணகை - வரலாறும் வழிபாடும் என்ற நூலின் ஊடாக திரு. பிரசாத் சொக்கலிங்கமும் (அமரர்) க. சபாரெத்தினமும் முன்வைத்துள்ளனர்.

கிழக்கு மாகாண சபையில் தகவல் தொடர்பாடல், தொழில் நுட்ப உதவியாளராக பணியாற்றி வரும் பிரசாத் சொக்கலிங்கம் இலக்கிய ஆர்வலர். எழுத்தாளர். தேடலில் தீவிரம் காண்பிக்கும் புதிய தலைமுறைப்படைப்பாளி. தாம் வாழும் ஆரையம்பதியைச் சார்ந்தும் இணைய இதழ் நடத்திவருகிறார்.

www.arayampathy.lk இந்த இணையத்தில் அவரது பிரதேசம் மற்றும் இலக்கிய புதினங்களையும் அறிந்துகொள்ள முடியும்.

பிரசாத் சொக்கலிங்கம் அவர்கள் தமது தேடல்களின் ஊடாக மேலும் கிழக்கிலங்கைக்கு பெருமை சேர்ப்பிக்கவேண்டும் என வாழ்த்துகின்றோம். (தொடரும்)



கன்னன்குடா பாடசாலையில் நடைபெற்றது. தமிழ்மொழித்தினப் போட்டியா? அல்லது விழாவா? என வேலாப்போடி, குறிஞ்சாமுனை சந்தியில் நின்று கொண்டிருந்த அமரசிங்கத்துடன் வினாவிக் கொண்டிருந்தான்.

"கிழக்கு மாகாணத்திற்கான தமிழ்மொழித்தினப் போட்டிகள்தான், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கன்னன்குடா, குறிஞ்சாமுனைப் பாடசாலைகளில் நடைபெற்றன" என அமரசிங்கமும் பதிலளித்தார். அத்தோடு வேலாப்போடியும் விழாவில் கலந்து கொள்வோம் என்ற மனப்பாங்கிலாவது எத்தனை தமிழ்பேசுகின்ற ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் இருக்கின்றனர்? பலர் கடமைமுடிந்தால் சரியென்று நினைக்கின்றனர். இவ்வாறான விடயங்கள் தொடர்பில் ஒவ்வொருவரினதும் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஏற்படாதவரை யாருமே மாற்றமுடியாது. கடமை நேரம் நிறைவுபெற்றுவிட்டது, தேவையில்லாதவேலை, சம்பளம் தருவார்களா? என்று பேசிவிட்டு தலைமறைவாகின்ற சிந்தனையாளர்கள் மத்தியில், ஒரு சமுகமே நின்று கிழக்கு மாகாண தமிழ்மொழித்தின போட்டியை அமைக்கப்பட்டிருந்த பதாதைகளும் பனையோலை, தென்னோலை, வாழை, பனைமட்டைகளை கொண்டு அமைக்கப்பட்டிருந்தமை இயற்கைக்கு கொடுத்திருந்த முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டியது.

ஒரு கிலோமீற்றர் வரை நகர்ந்த ஊர்வலத்தில், இயற்கையால் அலங்கரிக்கப்பட்டிருந்த மாட்டு வண்டிகள் முன்செல்ல, அலங்கரிக்கப்பட்டிருந்த உழவு இயந்திரங்களும் தொடர்ந்தன. அதன் பின்னால், இன்னிய நடனம், கோலாட்டம்,

பாடசாலையின் மற்றுமொரு புறத்தில், மண்முனை தென்மேற்கு கோட்ட அதிபர்களினால் பப்பாசிபழ பந்தலும், ஏறாவூர்பற்று கோட்ட அதிபர்களினால் பலாப்பழ பந்தலும், மண்முனை மேற்கு கோட்ட அதிபர்களினால் தயிர்பந்தலும் அமைக்கப்பட்டு போட்டிக்காக, நிகழ்வினை பார்வையிடுவதற்காக வருகைதந்திருந்த அனைவருக்கும் இலவசமாக குறித்த பானங்கள் வழங்கப்பட்டன. அதேவேளை மோதகம், பணிகாரம் போன்றனவும் சிற்றூண்டிகளாக வழங்கப்பட்டன.

# கன்னன்குடாவில் நடந்தேறியது போட்டியா? விழாவா?





நிறுத்தவில்லை. போட்டியென்றால், வீதியெல்லாம் சோடணை செய்வதில்லையே? போட்டியென்று அழைப்பார்கள், போட்டிகள் நடைபெறும் இடங்கள் மட்டும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும், போட்டியாளர்களும் போட்டியில் கலந்துகொண்டு தமது பெறுபேறுகளை பார்த்துவிட்டு சென்றுவிடுவர். இதுதான் வழமை. ஆனால் அண்மையில் கன்னன்குடா, குறிஞ்சாமுனை கொண்டிருந்த வண்ணக்கோலத்தைப் பார்த்தால், அது, போட்டியாக தெரியவில்லை, விழாவாகவேதான் தெரிந்தது. என தனக்கு தென்பட்டதை வேலாப்போடியும் குறிப்பிட்டார்.

தமிழ்மொழித்தினத்தினை விழாவாக கட்டாயம் கொண்டாட வேண்டும்.

**படுவான் பாலகன்**

அதனைச் சிறப்பித்து போட்டிகள் நடாத்தி, வெற்றி பெறுபவர்களுக்கு தமிழ்மொழித்தின விழாவில் பரிசில்கள் வழங்கவேண்டும். ஆனால் இப்பெல்லாம் போட்டி மாத்திரம்தான் விழாவெல்லாம் இல்லை. தமிழ்மொழியும் அழிகின்ற மொழியில் ஒன்றாக இருப்பதாக எல்லோரும் பேசிக்கொள்கின்றார். இவ்வாறான சூழலில் பாடசாலை ரீதியாகவும் தமிழ்மொழித்தின விழா கொண்டாட வேண்டிய அவசியம் உள்ளதாக உணருகின்றேன். பாடசாலை ரீதியாக தமிழ்மொழித்தின விழாவை எத்தனை அதிபர்கள் கொண்டாடுவதற்கு முன்வருவார்கள் என்பதும் சந்தேகம்தான்? அவ்வாறு விழா எடுத்தால் தம்மீது சுமையேற்பட்டுவிடுமென்ற எண்ணப்பாட்டில் பேசாமலே இருந்துவிடுவர். விழா நடாத்தாவிட்டாலும் பறவாயில்லை. நடக்கின்ற விழாவாக மாற்றியமைத்திருந்தமை வரலாறு. இதனை எண்ணுகையில் அகம் மகிழ்கின்றதென அமரசிங்கம் கூறிக்கொண்டிருந்தான்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் முன்பாகவிருந்து ஆரம்பித்திருந்த சோடணைகள் கன்னன்குடா பாடசாலைவரை அலங்கரிக்கப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணத் தமிழ்மொழித்தினமென இடையிடையே பதாதைகளும், ஒரு கிலோமீற்றருக்கு மேல் கொடிகளாலும், குருத்துக்களினாலும் அலங்கரிப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

வீதியின் இருபுறமும் நடப்பட்டிருந்த கம்பிகளில், தமிழுக்கு பணிசெய்த பெரியார்களின் படங்களுடனான பதாதைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.



செம்பாட்டம், மயிலாட்டம், குதிரையாட்டம் போன்ற ஆட்டக்கோலங்களும் 100மீற்றர் தூரம் வரை நீண்டிருந்தன. பாடசாலையின் வாயிலை அடைந்ததும் ஊர்வலத்தினை பின் தொடர்ந்து வருகைதந்திருந்த அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு பாடசாலைக்குள் அழைக்கப்பட்டனர். ஆரம்ப நிகழ்வு நடைபெறுவதற்காக ஒழுங்செய்யப்பட்டிருந்த மண்டபத்தின் முன்பாக தமிழுக்கு தொண்டாற்றிய கிழக்கு மண்ணைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தரின் திருவுருவத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டதனை தொடர்ந்து திருநீறு, சந்தணம் சாத்தப்பட்டு, பன்னீர் தெளிக்கப்பட்டு அனைவரும் மண்டபத்திற்குள் அமரச்செய்யப்பட்டனர். மண்டபத்தினுள்ளே மங்கல விளக்கேற்றல், மும்மத பிரார்த்தனை, தமிழ்தாய் வாழ்த்து, தமிழ்மொழி வாழ்த்து, தமிழ்மொழித்தின வாழ்த்து போன்றன மாணவர்களினால் பாடப்பட்டன.

மேலும் தமிழ்மொழியை பெருமைப்படுத்தும் பாடலொன்றிற்கான அபிநயமும் மாணவர்களினால் நிகழ்த்தப்பட்டது. மேடையிலே வண்டிச்சில், மண்முட்டி, கரும்பு, முக்காலி, மரைக்காலில் நெல்லும் வைக்கப்பட்டு மேடை இயற்கையுடன் காட்சிகொடுத்தது. மண்டபத்தின் இருபுறங்களிலும் ஒவ்வொரு பாடசாலைகளின் அன்பளிப்பு பெயர்களுடன் பெரியோர்களின் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பாடசாலையின் மைதானத்தில் படுவான்கரை மக்களிடையே புழக்கத்தில் இருந்து, இன்று புழக்கமில்லாமல் சென்றிருக்கின்ற விவசாயப் பொருட்கள், வெண்கலப்பொருட்கள், கூத்து கலைக்கான பொருட்கள், நாணயங்கள் என பல பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதனை வருகை தந்திருந்தவர்கள் பார்வையிட்டதுடன், இவ்வாறான பொருட்கள் புழக்கத்தில் இருந்ததா? என்று வினவி பெருமூச்சுவிட்டுச் சென்றதனையும் காணமுடிந்தது.

வந்திருந்தவர்களின் வயிற்றுப்பசிக்கு மதிய உணவும், நேரப்பசிக்கு வடமோடி, தென்மோடி கூத்துக்களும் ஆற்றுகை செய்யப்பட்டன. இதனை வருகைதந்திருந்த பலர் பார்வையிட்டதுடன், இன்னும் சிறிதுநேரம் ஆற்றுகை செய்திருக்கலாமே? என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டனர். இதன்மூலம் கூத்து அவ்விடத்தில் பார்வையிட்டவர்களின் மனங்களை கொள்ளையிட்டதென்றே கூறமுடியும்.

ஒருசமூகமே ஒன்று சேர்ந்திருந்து, கடந்த 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கன்னன்குடா, குறிஞ்சாமுனை பாடசாலையில் நடத்தப்பட்டது, போட்டிமட்டுமல்ல, விழாவும்தான்.

இதற்காக இரவுபகலா, இளைஞர்கள், சமூகத்தினர், கல்விமட்ட ஊழியர்கள் அனைவரும் உழைத்திருந்தார்கள். அனைவரின் கூட்டுப்பொறுப்பினால், போட்டி, விழாவாக நடந்தேறி முடிந்தது. என அமரசிங்கமும், தான் அறிந்த, அவதானித்த விடயங்களை வேலாப்போடியுடன் கூறி முடிக்க, இவ்வளவு அன்று நடந்ததோ? நானும் பார்க்கவில்லையே என்ற கவலையுடன் அவ்விடத்தினை விட்டு அகன்றார்.

படுவான்கரையென்றாலே, வந்தாரை வாவென்று அழைத்து வயிறாற உணவளித்து அனுப்புகின்ற மண். இந்தமண்ணிலே உள்ள பல இடங்கள் விழாக்கோலம் பூண்ட இடங்கள்தான்.

# என்னை அலாக்காகத் தூக்கிச் சுழற்றி தன் அன்பை வெளிப்படுத்திய ஊழியர்!



அண்மைய யாழ்ப்பாண அனுபவங்கள் முருகண்டிக் கடையொன்றில் பிளேன் ரீ குடிப்பதும் கச்சான் சாப்பிடுவதும் ஓர் தனி அனுபவம். ஏற்கனவே பயிற்சிபெற்ற முதிர் கலைஞர்கள் என்னுடன் வர முடியாத சூழல். அடிக்கடி இச்சூழலை இங்கு நான் எதிர்கொள்கிறேன். அது இன்னும் சுவையான அனுபவங்கள். அதனால் திறமை வாய்ந்த சில மாணவர்களை அழைத்துக்கொண்டு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டிருந்தேன்.

விதுஸா, பானு, மேனன் ஆகியோர் ஆற்றுகைக் கலைஞர்கள். பஜனைக்குத் தபேலா வாசிக்கும் கிசோகுமார் என்னும் ஓர் பையன். இது வரை யாழ்ப்பாணம் காணாத 18 வயதுப்பையன். வயலின் வித்துவாட்டி சரஸ்வதிதான் ஒரேயொரு சீனியர். நிகழ்ச்சியையும் காட்சிகளையும் விளக்கி முதல் நாள் சில பயிற்சிகளும் அளித்திருந்தேன். முறிகண்டியிலிருந்து வேன் புறப்பட்டதும்,

‘சேர் பாடிப்பயிற்சி செய்வோமே” என்றார்கள் மாணவர்கள். மாணவர்களின் உற்சாகம் என்னையும் தொற்றிக்கொண்டது, முருகண்டிப் பிள்ளையாரடித் தேநீர் தந்த உற்சாகம் வேறு. அனைத்து பாடல்களையும் பாடிப்பயிற்சி செய்த வண்ணம் மீதிப் பிரயாணம் நடந்தது, “வேனுக்குள் வெளிச்சம் போட்டால் பொலீஸ் பிடிக்கும்”என்றார் ட்றைவர். செல்போன் ஒளியில் பிரதியை வாசித்துப் பாடிக்கொண்டு சென்றோம். இடையில் பொலீஸ் மறித்து விட்டது. முன்னால் இருந்த கலாநிதி ஸ்ரீ கணேசன் “பேராசிரியர் பின்னால் இருக்கிறார் இது பல்கலைக்கழகக் குழு”என்றார். பொலீஸ் மரியாதையாக வழிவிட்டது.

காலை 5,00 மணிக்கு எம்மை திருநெல்வேலியுலுள்ள ஹோட்டல் ஒன்றில் ட்றைவர் கொண்டு விட்டார். ஹோட்டலை அடையும் வரை பாட்டுத்தான் நல்ல வசதியான குளிர்சாதனம் பொருத்தப்பட்ட ஹோட்டல்,

வசதியான அறைகள். எனக்கோர் தனி அறை, சரஸ்வதிக்கு ஓர் தனி அறை, மாணவிகள் மூவருக்கும் ஒரு தனி அறை. மாணவர்கள் இருவருக்கும் ஓர் தனி அறை. எல்லோரையும் “படுத்து ஓய்வெடுங்கள் காலை 7,00 மணிக்கு ரீ வரும் 9,00 மணிக்கிடையில் சாப்பிட்டுவிட்டு எங்காவது பயிற்சி எடுப்போம்” என்று கூறிவிட்டு நானும் படுக்கச் சென்று விட்டேன். காலையில் ரீயுடன் கதவைத் தட்டினான் ஓர் பையன். காலைச்சாப்பாடு முடிந்ததும் அஜுரனுக்குப்போன் பண்ணி “தபேலவும்,. டோல்கியும் தயாரா”எனக்கேட்டேன், ‘தயார் சேர்” என்றான் அஜுரன். சங்கீத வித்துவான் றொபேட் தவமைந்தனுக்கு போன் பண்ணினேன். அவர் அன்று காலை இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நேர்முகப்பரீட்சை ஒன்றின் தேர்வாளர். எனினும் போகுமுன் என்னை வந்து சந்திப்பதாகக் கூறினார். நாடகத்துறை



விரிவுரையாளர் நவரஞ்சனிக்குப் போன் பண்ணி ‘சிதம்பரநாதனின் கலைக்கூடத்தில் பயிற்சிபண்ண எண்ணுகிறேன் அல்லது உங்கள் நாடகதுறையில் பயிற்சிக்கு இடமுண்டா”என்று கேட்டேன். ‘சேர் கைலாசபதி அரங்கில் எத்தனை பயிற்சிகள் முன்னர் நடந்தன. இப்போது அதை பயிற்சிக்கு எடுப்பது சிரமாக இருக்கிறது. நீங்கள் கேளுங்கள் தருவார்கள் பின்னர் நாங்கள் அம்மரபை மீண்டும் தொடர்வோம்” என்றாள்.

உதவிப் பதிவாளருக்குப் போன் பண்ணி பயிற்சிக்குக் கைலாசபதி அரங்கு வேண்டும்” என்றேன். ஒழுங்கு பண்ணுவதாகக் கூறியதுடன் ஒன்பது மணிக்கு வேன் அனுப்புவதாகவும் பயிற்சி வேளைகளில் சிற்றுண்டி குளிர்பானம் வழங்க ஒழுங்கு செய்வதாகவும் கூறினார். சிறிது நேரத்தில் என்னைத் தேடியபடி அங்கு வந்து விட்டார் றொபேர்ட். அவரிடம் நிகழ்ச்சி பற்றிக்கூறி 33 பாடல்களையும் பாடிக்காட்டினேன். அவர் அதனைச் செம்மைப்படுத்த மேலும் சில ஆலோசனைகள் கூறினார்.

பாடப்போகின்றவர்கள் வித்துவான்கள் அல்ல கத்துக்குட்டி வித்துவான்கள் றொபேர்ட் என்றேன். அவர் சிரித்தபடி “நான் ஹார்மோனியப் பெட்டியுடன் நேரத்துக்கு வருவேன் சேர்” என்றார் 9.00 மணிக்கு வேன் வந்தது. கைலாசபதி கலை அரங்கு சென்றோம் அங்கு அஜுரன் வாத்தியங்களுடன் ஆயத்தமாக நின்றான். கலாநிதி கணேசனும் நின்றார்.

அங்கு என்னைக்கண்ட முன்னைய கைலாசபதி கலை அரங்க காப்பு ஊழியர் ஓடி வந்து என்னைக் கட்டிபிடித்துத் தூக்கி சுழற்றி தன் மகிழ்வைக் கொண்டாடினார். சேரை எறிந்து விளையாடுகிறாரே ஓர் ஊழியர் என்ற ஆச்சரியம் என்னுடன் வந்திருந்த மாணவர்களுக்கு. எனக்கோ அந்த ஊழியரின் அன்பைக்கண்ட ஆனந்தம்.

நாங்கள் அந்த அரங்கில் எத்தனை ஒத்திகை நடத்தியிருப்போம். எத்தனை நாடகங்கள் போட்டிருப்போம் அத்தனையையும் அருகிலிருந்து அவதானித்தவர்களல்லவா. அவர்கள் என்னுடைய நாடகங்களான தப்பி வந்த தாடிஆடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், சரிபாதி, ஓர் உண்மை மனிதனின் கதை, சக்தி பிறக்குது, அபசுரம், புதியதொரு வீடு, இராவணேசன், காண்டவதகனம் முதலான நாடகங்களை அந்த மேடையில் கண்டவர்கள் அவர்கள். அவை அற்புதமான காலங்கள்.எனக்கு அவர்கள் என்னமாய் உதவினார்கள். அவரின் இறுகிய அணைப்பில் எனக்கு இவை ஞாபகம் வந்தன. அவருக்கும் அவை ஞாபகம் வந்திருக்கும். 9.30 இலிருந்து 11,30 மணிவரை பயிற்சி செய்தோம். 11.00 மணிக்கு அங்கு விரிவுரைகள். சரியாகப் பயிற்சி எடுக்காத மனோ நிலை, எனினும் எனக்கு மாணவர்கள் திறமையில் நம்பிக்கை இருந்தது. பயப்பிடாமல் செய்யுங்கள் நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்று கூறி விட்டு ஹாலை விட்டு ஹோட்டலுக்குத் திரும்பினோம். இடையில் நவதர்சினி என்னை மாணவர்களுடனான ஓர் கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்துவிட்டார்.

என் அரங்கு என்ன அரங்கு என்ற தலைப்பில் என் நாடகங்கள் சிலவற்றை வீடியோவில் போட்டுக்காட்டி உரையாடவேண்டும் என்பது அவளது வேண்டுகோள்

மாணவர்களை சந்தித்ததும் உரையாடியதும் ஒரு தனிக்கதை அதனை நேரமிருப்பின் விரிவாகப்பதிவேன்




# கொக்கிளாயிலிருந்து தென்னமரவாடி ஆலயத்திற்கு படகுகளில் செல்லும் கதிர்காமப் பாதயாத்திரைக்குழு!



யாழ். சந்நிதி ஆலயத்திலிருந்து 98 ஆலயங்களைத்தரிசித்து 56 தினங்களில் 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கதிர்காமத்திற்குச் சென்று கொண்டிருக்கும் வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரைக்குழுவினர் வரும்வழியில் தென்னமரவாடி பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லவேண்டியிருந்தது.

அவர்களுக்கு பாதுகாப்பாக கடலில் பயணிப்பதற்கு



15 இயந்திரப்படகுகளை கடற்படையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

முல்லைத்தீவு திருமலை பிரதானவழியில் செம்மலைக்கும் புல்மோட்டைக்கும் இடையில் கொக்கிளாயிலிருந்து தென்னமரவாடிக்கு செல்லவேண்டுமானால் கடலில் மட்டுமே செல்லமுடியும். வேல்சாமி தலைமையிலான குழுவில் அங்கம் வகிக்கும் 90 ஆண், பெண் அடியார்களையும் 15 படகுகள் ஏற்றிக்கொண்டு 20நிமிடங்களில் தென்னமரவாடியை அடைந்தன.

பின்னர் அவர்களை மீண்டும் அதே படகுகள் கொக்கிளாய்க்கு கொண்டுவந்துவிட்டன. பின்னர் அவர்கள் தரைவழியூடான பயணத்தைத் தொடர்ந்தனர்.

இந்த அனுபவம் புதுமையாகவும் புதினமாகவும் இருந்ததாக யாத்திரீகர்கள் கூறினர்.

(காரைதீவு நிருபர் சகா)



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 18

மட்டக்களப்பு போராளியளுக்கு ஒவ்வொரு தடவையும் மட்டக்களப்புக்கும் வன்னிக்குமான பயணமே ஒரு போர்க்களமாகவே இருக்கும், மக்கள் நடமாட்டத்தையே காணாமல் காடுகளில் உறைவதும் அவர்களது உணவுக்காக நாட்டுக்குள் சென்று அடைப்பம் சேகரித்து அதை காவுதடிகளில் கொண்டு வருவதும் முக்கிய நிகழ்ச்சியாக இருக்கும்.

பலநாட்களுக்கு கஞ்சியே உணவாக

## தீயாறு கடந்து வடக்கில் போராட வந்த கிழக்கின் மைந்தர்கள்

இருக்கும். இதனால் அடைப்பங் கொண்டுவா பணிக்கப்படும் குழுவினர்



உயிராபத்தை பொருட்படுத்தாது சகல ஆயுதங்களுடன். யுத்த சன்னத்தராக புறப்பட்டுப்போவார்கள்.

இவர்களுக்கான உணவை நாட்டுக்குள் ஒரு தேசபக்தர் தன் உதவியாட்களுடன் சேகரித்து வைத்திருப்பார். அங்கு பெரும் பசியுடனேயே போய்ச்சேரும் போராளிகளுக்கு பெரிய வாழையிலையை முழுதாகப் போட்டு சாப்பாடு பரிமாறுதல் இல்லை சாப்பாட்டை அதில் கொட்டுவினமாம். போறவை அந்த இலையை சுத்தியிருந்து வயிறார உணவை உண்டபிறகு உள்ளே இருக்கிறவைக்காக உணவுப் பொருளுகளை கட்டிக்கொண்டு பயணிப்பினம்.

அப்படி அவயள் தாம் வந்த இடத்தை திரும்ப அடைய எப்படியும் பிரதான வீதிகளைக் கடந்தும் வயல் நிலங்களைக் கடந்தும் போகவேணும். அந்த இடங்களில முன்னரே ஆமி வந்து நிலையெடுத்துக் கிடப்பான். இப்பிடி ஒருதடவை ஏழுபேர் அடைப்பங் கொண்டுவரப் போச்சினம்; அப்ப ஆரோ ஒரு ஊரவர் அவயளைக்கண்டார். இதை அவதானித்த குழுஉறுப்பினனான மாயன், தலைவனான அரவிந்தனிடம் சொன்னான். வரேக்க வேற தடங்களை பயன்படுத்துவம் என்ற அவன்ர ஆலோசனையை ஏற்கேல்லை. “பார்க்கலாம் வாங்க என்றபடி முன்னேறிச்சினமாம், பிரதான வீதிக்கு ஒரு மைல் தொலைவிலேயே திடீரென அவயளபாத்திட்டு ஆமி தாக்குதல் நடாத்தினாங்கள்.

எல்லாரும் நாலாபக்கமும் சிதறியோடிச்சினம்; அதில அஞ்சு பேர் கொல்லப்பட்டுவிட்டினம். தப்பியவயில ஒருவர் பொருட்களை மெள்ள இழுத்துவந்து ஆற்றங்கரையில் போட்டார்; பிறகு முகாமிலிருந்து வேறு சிலரை அழைத்துவந்து பொருட்களை புதைத்த இடத்திலிருந்து எடுத்தினமாம்; ஆனால் அரிசியைக்காணயில்லை அதை கொண்டு வந்தவன் அரவிந்தன் எனவே சம்பவம் நடந்த இடத்தை தேடினா அங்கே அரிசியில ரத்தம் தோய்ந்திருந்துது. அதை மெல்ல ஒதுக்கிவிட்டு ரத்தம் படாத அரிசியை அள்ளிக் கொண்டேய் சமைச்சதுதான்.

அதேவேளை அரவிந்தன் பலத்த காயமடைந்த நிலையில் சுமார் ஐநூறு மீட்டர் தொலைவுவரை நகர்ந்து சென்று ஒரு மரத்துடன் சாஞ்சிருந்தான். தோழர்கள் ஓடிப்பார்த்தபோது அவன் உயிருடன்தான் இருந்தான்; காயங்களில் புழுக்கள் நெளிந்தன. அவனை மீட்டுவந்து காயங்களை வெட்டிவெட்டி புழுக்களை அகற்றினார்கள் அப்பிடியே முள்ளியவளைக்கு கொண்டு வந்து குணமாக்கினர் மேலும் பல தாக்குதல்களில் அவர் பங்கேற்றார்.

திடீரென அவர்களது முகாம் தாக்குதலுக்கு உள்ளானால் உணவுப் பொருட்களை அடையாளம் வைத்துப் புதைத்து விடுவார்கள். பின்னர் அந்த முகாமிலிருந்து வெளியே புதிதாக அமைத்த முகாமில் இருந்து கொண்டு பழைய முகாமுக்கு டார்ஸான் பாணியில் மரங்களின் மீது கடந்து சென்று பொருட்களை எடுத்து வந்த தீரர்களும் நிறையவே இருந்தார்கள். பசி அவர்களை உயிரை மதிக்காத அளவுக்கு வருத்தியது. ஒருதடவை அம்மாறையிலிருந்து வன்னிக்கென புறப்படும் குழு குறைந்த பட்சம் பதினேழு முதல் ஒரு மாதம் வரை வனங்களில் உணவில்லாமல் நடந்து களைத்து காரைக்காய்களையும் காரை இலைகளையும் பச்சையாக சாப்பிட்டு பசிபோக்கின வரலாறிருக்கிது.

பின்ன அம்பாறையிலயிருந்து மட்டக்களப்புவந்து வாற வழியில மூதூருக்கிஞ்சால ஒரு ஆறு முதலைக்கூட்டம் ஆவாவெண்டு வாயத்திறந்து கொண்டு பின்னாலயே வர புதுசா போராட வந்த பொடிபொட்டையள வன்னிப்பக்கம் கொண்டருக்கினம். மேல ஒரு கயறு கயில பிடிக்க கீழ ஒருகயறு நடக்க, மரத்துக்கு மேலால இவை கடக்க கீழ ஒரு எட்டுப்பத்தடிக்குகீழ முதலையள் ஆராவது ஒருத்தர திங்கமாட்டமா எண்டு அலைய கரைசேருறதை நினைச்சுப்பாருங்க. இதில எந்தப்பயிற்சியுமில்லாத அப்பதான் வீட்டால ஓடிவந்த பிள்ளையள். இவைக்குமட்டும் மூண்டு வேளை சாப்பாடா என்ன அந்த தினசரி ஊத்துற கஞ்சிதான். இப்பிடியெல்லாம் துயரப்பட்டு வன்னிக்காகவும் யாழ்ப்பாணத்துக்காகவும் உயிரவிட்ட பிள்ளையள் எண்ணிப்பாத்தா... திக்கெண்டிருக்கு.

தமிழ்க்கவி

# தொற்றாநோய்கள் மனிதர்கள் உருவாக்கிக் கொண்டதே!



‘கிட்டிபுள் அடிக்க ஆரம்பித்தால் 10கிலோ மீற்றர் வரை அடித்துக்கொண்டே செல்வோம். திரும்ப அங்கிருந்து ஆரம்பித்தால் தொடங்கிய தூரம் வரை ஓடி வருவோம் இதனால் உடம்பு சுறுசுறுப்பாக இருந்தது. இப்போது போன்று பிறசறும் இல்லை. சீனிவருத்தமும் இல்லை’ என பேரின்பமும் அவருடைய நண்பர்கள் நால்வரும் மணலில் இருந்து, தாம் முன்னர் விளையாடிய பொல் இழுத்தல் (பலப்பரீட்சை) விளையாட்டை சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் விளையாடி காட்டிக்கொண்டே கூறிக்கொண்டிருந்தனர்.

வட்டக்காவடி, பொல் இழுத்தல், உடம்புப்பிடி, கிட்டிப்புள், கொத்து இழுத்தல், கிளித்தட்டு, வார்போர் என பல விளையாட்டுக்களை விளையாடுவோம். மனதில் மகிழ்ச்சியும், உடம்பில் சுறுசுறுப்பும் இருக்கும். வேலையும் களைப்பில்லாமல் செய்வோம். வருத்தமும் குறைவு. எங்கட காலத்தில் இருந்தவர்கள் எல்லோரும் நாட்டுக்கோழி மாதிரி நல்லாப் பலம் பொருந்தியவர்கள், எதையும் எதிர்கொள்ளக் கூடியவர்கள். இப்போது இருக்கின்றவர்கள் எல்லோரும் பிறைலர் கோழி போல இருக்கின்றனர். வயிறு வைக்கிறதும், வருத்தம் ஏற்படுவதும், வைத்தியசாலையில் அணி அணியாக நிற்பதுதான் நடைபெறுகின்றது.

தலை, கால் வருவதற்கு முன்னேமே இப்பெல்லாம் வயிறுதான் முன்னுக்கு வருகின்றது. 100மீற்றர் தூரம் நடக்க முடியாதவர்களாகவும், வேலைசெய்வதற்கு இயலாதவர்களாகவே இப்போதைய மக்கள் வளர்ந்து கொண்டு வருகின்றனர். இதற்கு அன்றையப் போன்று விளையாட்டுக்களில் மக்கள் ஈடுபடாமையே காரணமென பேரின்பம் கூறுகின்றார். காலையில் எழுந்தால் பின்னேரம் வரை வாகனங்களில் ஓட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றனர். எல்லோரும் ஒன்றுசேர்ந்து விளையாடுவது மிகக்குறைவு. இதனால் மகிழ்ச்சிகரமான வாழ்கையில்லை. இப்போது அடிக்கடி அரசாங்கத்தினாலும் உடலாரோக்கியத்திற்கு உடற்பயிற்சி அவசியமென்று கூறிவருவதுடன், அவ்வாறான வாரங்களையும் அனுஸ்டித்து, உடற்பயிற்சிகளில் ஈடுபடுகின்ற நிலைமையும் உருவாகியிருக்கின்றது. ஆனால் அப்போதெல்லாம் பொழுபோக்கென்றால் விளையாட்டுத்தான் செல்வாக்கு பெற்றது.

இப்பெல்லாம் பொழுதினைக் கழிக்கும் இடங்களாக சமூவலைத்தளங்களும், தொலைக்காட்சிகளும் அமைந்துள்ளன.

சிரிப்பதும், கோபப்படுவதும், சத்தமிடுவதும், கதைபேசுவதும் மனிதர்களிடையே அப்போது நடைபெற்றது. இப்போது தொலைபேசியை பார்த்தே எல்லா வெளிப்பாடும் நடைபெறுகின்றன. காலையில் எழுந்து வீதிகளில் நடக்கின்ற நிலையும் உருவாகியிருக்கின்றது. எல்லாவற்றிற்கும் காரணம் விளையாடாமையே. நவீன உலகிற்கு ஈடுகொடுக்க மூளை தொடர்தேர்ச்சியாக ஓடவேண்டுமென்ற எண்ணத்தினில் செயற்படுவதனாலேயேயாகும். வாழ்க்கையென்பது மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்கே என்பதனை மறந்து, இயந்திரங்களைப் போன்று செயற்பட ஆரம்பித்துள்ளமையின் விளைவுகளே. நோய்களுக்கும், அழுத்தங்களுக்கும் காரணமாகின்றன. அலுவலகத்திற்கு சென்றால் அலுவலகத்தில் பல அழுத்தங்கள், வீடுகளிலும் வேலையும், அலுவலகத்தைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதனாலும் இன்னமும் அழுத்தங்கள் அதிகரிக்கின்றன. அதைவிடுத்து அலுவலகம் விட்டு வீடு வந்ததும் சிறிது நேரமாவது, விளையாட்டுக்காக செலவு செய்தால் மன அழுத்தங்களையும், தொற்றா நோய்களையும் இல்லாமல் செய்ய முடியும்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் நோயாக, வீதியில் பலரை தள்ளிவிடுகின்றதொன்றாக தொற்றா நோய்கள் மாறியுள்ள நிலையில், இதனை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு பிள்ளைகளையும் கற்பிக்க வேண்டுமென்ற ஆசையால் காலையிலிருந்து, இரவுவரை கல்விச்சிறையில் அடைத்துவிடாமல் விளையாடுவதற்கும், கதைத்துப்பேசி மகிழ்வதற்கும் நேரங்களை ஒதுக்கி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளின் நேர அட்டவணையில் விளையாட்டுக்கென முக்கியமான நேரத்தினை வழங்க வேண்டும். இல்லையெனின் பிள்ளைகளுக்கு, பெற்றோர் கொள்ளி வைப்பதனை தடுக்க முடியாது.

படுவான் பாலகன்

கட்டிளமைப்பருவ வேலை வாய்ப்புகள்

---

இலவசக் கல்வி என்பது, மாணவர்களிற்கு மிகப்பெரிய வரப்பிரசாதம். இருந்த போதும் பாடசாலைக் கல்வியினூடாக அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகம் புகுவது முடியாத விடயம். பாடசாலை இடைவிலகல், பரீட்சைகளில் ஏற்படும் தோல்விகளால் மாணவர்கள் தொடர்ந்தும் இலவச கல்வியூடாக பட்டதாரியாக வெளியேறுவது என்பது சாத்தியப்படக்கூடிய விடயமல்ல. கட்டிளமைப் பருவ வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் பெரும்பாலும் கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பவற்றில் ஏற்படுகின்ற

படிப்பதற்கு தகுதியற்ற பரீட்சைகளில் தோல்வியடைந்தவர்களாக சமூகத்திற்குள் விடப்படுகிறார்கள். அவ்வாறு அல்லாமல் ஒவ்வொரு மாணவனுடனும் தனியாக கலந்துரையாடி, அவர்களின் திறன்களை இனங்கண்டு அவற்றை விருத்திசெய்து, அதற்கு ஏற்றாற்போல் தொழில் வழிகாட்டல்கள் கொடுத்து அதற்கான கல்விமுறைக்கு உள்வாங்கப்படும் போது கட்டிளமைப்பருத்தினர்களின் காலங்கள் வினைத்திறனாக பயன்படும். அவர்கள் குறிப்பிட்ட வயதிலேயே தொழில் ஒன்றை நிரந்தரமாக பெற்றுக்கொள்ளவும், அவற்றை தக்க வைக்கவும் கற்றுக்கொள்வார்கள்.

தொழில் ஒன்றை நிரந்தரமாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. வணிகத் துறையில் கல்வி கற்றவர்களிடம் அரச, அரசுசாரா, தனியார் வங்கிகளில் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடிகிறது. இதில் பரிதாபப்படக்கூடிய பட்டதாரிகளாக கலைத்துறையினர் உள்ளனர். பல்கலைக்கழகங்கள் வழங்கும் கலைப்பீட பட்டங்கள் இன்றைய தொழிற்சந்தைக்கும், வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்றாற்போல் இல்லை என்பது கவலைக்குரியது. இவ்வாறாக கலைப்பீடங்களில் பட்டங்களிற்கு பதிலாகவும் இன்றைய வேலை வாய்ப்புகளிற்கு ஏற்றாற்போலும் பட்டதாரிகளை உருவாக்குவது, அநாவசியமாக இளைஞர்கள் வருடக் கணக்கில் தொழில் ஒன்றை

பராமரிப்பாளர்கள், உடல் தொடுகை சிகிச்சையாளர் போன்றவற்றிற்கு நிறைய ஆளனியினர் தேவைப்படுகின்றனர். இருந்தபோதும் எமது இளைஞர்களை விட தென்பகுதி இளைஞர்களே இத்துறையில்

**டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
**உளநல மருத்துவர்**
**வாழைச்சேனை மருத்துவமனை**

வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்கின்றார்கள்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

---

மத்திய கிழக்கு நாடுகள், தென் கோரியா, ஜப்பான், தாய்லாந்து, மலேசியா, சிங்கபூர் போன்ற நாடுகளிற்கு வேலை வாய்ப்பிற்காக ஆண், பெண் இருபாலாரும் சென்று வருகின்றனர். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், எல்லா மாவட்டங்களிலும் தற்போது பல்வேறு தொழில் பயிற்சி, வழிகாட்டல், ஆலோசனைகள், சேமிப்பு முறைகள், தொடர்பாடல், தொழில் பாதுகாப்பு போன்ற பயிற்சிகளை கொடுத்து வருகின்றது. சாதாரண தொழிலாளர்களாக செல்வதை விட தொழில் தகமையை ஒன்றை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட தொழில் ஒன்றிற்காக செல்பவர்கள் நல்ல வருமானத்துடன் சந்தோசமாக தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

# கட்டிளமைப் பருவ உளநலம்

# கட்டிளமைப்பருவ வேலை வாய்ப்புகள்

பின்னடைவுகளை தொடர்ந்து தமது வாழ்வாதார முயற்சியிலிருந்த யாதேனும் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாரம்பரிய தொழில்கள்
விவசாயம், மீன்பிடி, மிருக வளர்ப்பு, மட்பாண்ட தொழில், தச்சுத்தொழில், சிகையலங்கார தொழில், வீட்டு வேலை, கூலித்தொழில், குடிசைக் கைத்தொழில் போன்ற பல வாழ்வாதார முயற்சிகளில் எமது பெற்றோர் உறவினர்கள் ஈடுபட்டார்கள். அக்காலப்பகுதியில் கல்விக்கான முக்கியத்துவம் பெரிய அளவில் இருக்கவில்லை. சாதாரணமாக குடும்ப தலைவனும், தலைவியுமாக பல்வேறு வழிமுறைகள் ஊடாக தமதுவருமானத்தை பெற்றுக்கொண்டனர்.
தற்போதைய சந்ததி பாரம்பரிய தொழில் முறைகளில் பெரிய அளவில் ஈடுபாடு கொள்ளவில்லை. மாறாக அவர்களது தொழில் முயற்சி என்பது அன்றாடம் கையில் காசை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளாகவே அமைகின்றன. தொழில்வாண்மை கல்வியூடாக பல்வேறு திறன்களை பெற்று நிரந்தர வருமானம் ஈட்டக்கூடிய அதிக வருமானத்தை தருகின்ற தொழில் முயற்சிகளை தெரிவு செய்வதில் இளையவர்களில் அக்கறையின்மை காணப்படுகின்றது. உள்ளூரில் நிறைந்த வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கான தொழிற்பயிற்சிகள் அத்துடன் இணைந்த தொழில் வாய்ப்புகளை அரச, அரசுசாரா அமைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இவற்றில் பெரும்பாலான தொழிற்பயிற்சிகள் இலவசமாக கிடைப்பதுடன் தொழிற்பயிற்சியின் இறுதியில் தொழில் ஒன்றை ஆரம்பிபதற்கான உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

தொழில்வழிகாட்டல்கள்

---

ஒரு பாடசாலையின் வெவ்வேறு வகுப்பிலும் கல்வி கற்கும் மாணவர்கள், பல்வேறு திறன்களை, ஆர்வங்களை, ஈடுபாடுகளை காட்டுவார்கள். அவர்களில் இசை, நடனம், விளையாட்டு, பாடுதல், கைவினை பொருட்கள் செய்தல், தலைமைத்துவம், கண்டு பிடிப்பாளர்கள் என அவர்களின் திறன்கள் பல்வேறு வகையில் விரிவடைந்து காணப்படும். எமது பாடசாலைக் கல்வியில் பல்வேறு அனுகூலங்கள் இருந்தபோதும், பரீட்சைகளும், மதிப்பெண்களையும், பெறுபேறுகளையும் மையப்படுத்திய கல்வியால் மாணவர்களின் விருப்பு, வெறுப்புத்திறமைகள்; இனங்காணப்படாமல்

ஆண்டு 10 இல் இருந்தே மாணவர்களை பரீட்சைக்கு தயார்படுத்துவது போல், பரீட்சையில் வெற்றி கிட்டாத போது எவ்வாறு தொழில் முயற்சிகளிற்கு பயன்படுத்தலாம் என்பதை



ஆசிரியர்களும் பெற்றோரும் தீவிரமாக கலந்துரையாடி அதன் வழி மாணவர்களை வழிப்படுத் துவது இன்றைய காலத்திற்கு பொருத்தமானது.

ஆசிரிய வழிகாட்டிகள்
மாணவர்களை தொழில்வாண்மை தேர்வுகளை சரியாக மேற்கொள்வதற்கான ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது பாடசாலையில் நியமிக்கப்படுகின்றனர். (Career Guidance Teacher) இவ்வாசிரியர்களின் பணிகள், மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களிற்கு பொருத்தமான தொழில்நுட்ப கல்வி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களை கொடுப்பதோடு மாணவர்களின் திறன்களையும் நன்கறிந்து அதனை விருத்திசெய்வதாகும். இங்கு ஒரு மாணவன் க.பொ.த. உயர்தரம் வரை கல்வியை பூர்த்தி செய்து, நல்ல ஆங்கில அறிவையும் பெற்றுக்கொள்ள அவனது எதிர்காலம் வளமாக அமையும்.

தொழில்வாய்ப்புகள்

---

பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழக கல்வி அதன் பின்னாக பட்டதாரிகள் அரச சேவைக்கு உள்வாங்கப்படுகிறார்கள். விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக கல்வியை முடித்த பட்டதாரிகள் விரைவாக அரச, தனியார் துறைகளில் நல்ல மாத வருமானத்துடன்

பெற்றுக்கொள்வதற்காக வீதிகளில் விடப்படும் நிலை எதிர்காலத்தில் தவிர்க்கப்படும்.

இலங்கையில் தொழில் வாய்ப்புக்கள்
யுத்தம் விடைபெற்றதன் பின்னாக உலக சந்தை திறந்துவிடப்பட, உலகில் எந்தவொரு நாட்டிலும், உற்பத்தி செய்யப்படும் மின்சாதனங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் என அனைத்தும் தற்போது வீடுகளிற்கே கொண்டு சென்று விற்கக்கூடிய அளவில் உள்ளது. இறக்குமதி செய்யப்படும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார்கள், பாரவூர்திகள், அரிவி வெட்டும் இயந்திரங்கள், விவசாய இயந்திரங்கள் போன்றன பழைய தொழிநுட்பம் போன்றதல்ல. பாரம்பரிய வாகன தொழிநுட்பம் இங்கு பயன்படுவது மிக அரிது. எனவே இவற்றிற்கு விசேட தொழில் தகைமை, பயிற்சிகள் தேவை. அத்துடன் இவற்றை கையாள்வதற்கும், விற்பதற்கும் இளைஞர்கள் தேவைப்படுகின்றனர்.

வாகன ஓட்டுனர்கள்
பாரவூர்திகள், விவசாய இயந்திரங்கள், அரிவி வெட்டும் உபகரணங்கள கட்டுமான உபகரணங்கள் போன்றவற்றை இயக்குவதற்கு, பழுது பார்பதற்கு இன்றைக்கு ஐந்து வருடங்ளுக்கு முன்னர் அனுபவமுள்ள வாகன ஓட்டுனர்கள், இயக்குனர்கள், திருத்துனர்கள் இந்தியாவில் இருந்தே அழைத்து வரப்பட்டார்கள். தற்போது ஓரளவிற்கு எமது இளைஞர்கள் இதில் ஆர்வம் செலுத்துகிறார்கள். வீதி அபிவிருத்திகளில் பயன்படும் வாகனங்களில் பெரும்பாலான தென்பகுதியை சேர்ந்த சிங்கள இளைஞர்களே பணியாற்றுகிறார்கள். பாரவூர்தி பயிற்சி, பயிற்சி நிறுவனங்கள் போதியளவில் இன்றும் தமிழ் பகுதியில் இல்லாதது ஒரு குறைபாடு. இதற்கான பயிற்சிகளிற்கு அனுராதபுரத்திற்க செல்ல வேண்டும். இங்கு மொழிப்பிரச்சினையும் தடையாக உள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உல்லாசப் பயணத்துறையும் வேலை வாய்ப்புக்களும்

---

படிப்படியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உல்லாச பயணத்துறை நல்ல முன்னேற்றம் கண்டு வருகின்றது. கிழக்கிலங்கையில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் உல்லாச பயணத்துறையுடன் நிறைந்த விடுதிகள், இங்குள்ள சமையலறை, வெளிப்பராமரிப்பு, பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக உத்தியோகத்தர்கள், விடுதி

## மட்டக்களப்பு உயர் தேசிய தொழில் நுட்ப நிறுவக கூடைப்பந்தாட்டப் போட்டி

மட்டக்களப்பு உயர் தேசிய தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விப் பிரிவு மாணவர்களின் கூடைப்பந்தாட்டப் போட்டி

மட்டக்களப்பு ஆரையம்பதி உயர் தேசிய தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விப் பிரிவு மாணவ அணிகளுக்கிடையே நடைபெற்றது. கூடைப்பந்தாட்டப் போட்டி தொழில்நுட்ப நிறுவக விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை (23.6.2018) பிற்பகல் நடைபெற்றது.

தொழில்நுட்ப நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் எச்.என்.டி.ஏ அணி, எச்.என்.டி.ஐ.ரி அணி, எச்.என்.டி.ரி.எச்.எம் அணி மற்றும் எச்.என்.டி.ஈ ஆகிய நான்கு அணிகள் பங்கு பற்றி விளையாடியது.

இப்போட்டியில் இறுதிச் சுற்றில் எச்.என்.டி.ஏ அணி கூடிய புள்ளிகளைப் பெற்று 1ஆம் நிலைக்குச் சென்று சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

2ஆம் இடத்தினை எச்.என்.டி.ரி.எச்.எம் அணியினரும், 3ஆம் இடத்தினை எச்.என்.டி.ஐ.ரி அணியும் பெற்றுக்கொண்டது. இப் போட்டியில் சிறந்த ஆட்ட நாயகநாக யோராசா மிதுர்சன் தெரிவுசெய்யப்பட்டதுடன், சிறந்த தடுப்பாட்ட நாயகநாக விஜயகுமார் நிதுசன் தெரிவானார்.

இந் நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு 306சீ புதிய நூற்றாண்டு லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன். என்.புஸ்பாகரன் - எம்.ஜே.எப், உயர் தேசிய தொழில்நுட்ப நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஜெயபாலன், தொழில்நுட்ப நிறுவகத்தின் விரிவுரையாளர்கள், லயன்ஸ் கழக நிருவாக உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



## ‘மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கு 44 கோடி ரூபா ஒதுக்கீடு’

தொடர்ச்சி...



மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் உள்ளூர் அரச திணைக்களங்களின் தலைவர்கள், உள்ளூர் ஆட்சி மன்றங்களின் தலைவர்கள் பெருமளவில் பங்கு கொண்டனர்.

இந்த இணைப்புக்குழு கூட்டத்தில் சீன அரசாங்கத்தின் உதவியில் இம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள சுமார் 70 கோடி ரூபா செலவிலான 6000 வீடுகள் அமைக்கும் திட்டம், சுமார் 1088 மில்லியன் ரூபா செலவில் அமுல்படுத்தப்படவுள்ள கிராம சக்தி திட்டங்கள், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் 6 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய வீதி அமைப்பு பாடசாலை, பொது நல அமைப்புகளின் உபகரணக் கொள்வனவு அடங்கலான திட்டங்களுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டதாக மாவட்ட செயலக ஊடகப்பிரிவு தகவல் தெரிவிக்கின்றது.

இது தவிர இம் மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள சுமார் 473 மில்லியன் ரூபா செலவிலான விவசாய அமைச்சின் நவீன முறையிலான விவசாய அபிவிருத்தித்திட்டங்கள், மகிழவெட்டுவான் ஆயித்தியமலை குடிநீர் திட்டம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் புதிய 155 கிலோமீற்றர் வீதி அமைப்பு, தேசிய விசேட திட்டங்களான உணவு உற்பத்தி, போசாக்கு நலன்புரி, சூழல் பாதுகாப்பு, சிறுநீரக மற்றும் தொற்றா நோய் தடுப்பு, போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களை தடங்கலின்றி அமுல்படுத்துவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்துடன், மாவட்ட அரசாங்க அதிபரின் நேரடி நிதி ஒதுக்கீடாக 777 மில்லியன் ரூபாவும், மத்திய அரசாங்க நிதி ஒதுக்கீடாக 848 மில்லியன் ரூபாவும்.

கிழக்கு மாகாண நிதி ஒதுக்கீடாக 1053 மில்லியன் ரூபாவும், விசேட திட்டங்களுக்கென 1377மில்லியன் ரூபாவும், சர்வதேச மற்றும் தொண்டர் நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடாக 521 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிப்பதாகவும் இந்த ஒதுக்கீட்டுக்கான அபிவிருத்திப் பணிகளும் இன்றைய மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகப்பிரிவுத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரட்டைக் குடியுரிமை என்றால் என்ன?

தொடர்ச்சி...

ஆகவேண்டும்.
7) இதில் மிகவும் பாரதூரமான விடயம் எதுவென்றால், ஒருவர் பாராளுமன்றத்தில், மாகாணசபையில் அல்லது உள்ளூராட்சிச் சபையில் உறுப்பினராவதற்கு அவர் இலங்கைப்பிரசையாக இருக்கவேண்டும் என்பது முதன்மையான அடிப்படைத் தேவைப்பாடாக இருந்தும், இலங்கைப்பிரசையாக இல்லாதவர்களும் அத்தகைய பதவிகளில் இருக்கக்கூடிய நிலைமையும் சாத்தியமாகவுள்ளமைதான்.

இது எப்படியென்றால், வெளிநாட்டுக் குடியுரிமை பெற்ற ஒருவர், இலங்கைக்கு வந்து தனது ஊரில் தனது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, வாக்காளர் இடாப்பிலும் பெயரைப் பதிவு செய்து கொள்வார். தனது வெளிநாட்டுக் குடியுரிமையைக் கிடப்பில் போட்டுவிட்டு அவர் இலங்கைப் பிரசையாக வலம்வருவார். ஏதாவதொரு தேர்தலில் வெற்றிபெற்றுப் பதவியிலும் அமர்ந்துகொள்வார். அவர் இரட்டைக் குடியுரிமையை எடுக்கவுமில்லை, அதற்கு விண்ணப்பிக்கவும் இல்லை. எனவே அவர் இரட்டைக்குடியுரிமை உள்ளவரா என்று பரிசீலிக்கப்படும்போது, ”இரட்டைக் குடியுரிமை இல்லாதவர்” என்ற பதிலே கிடைக்கும். ஆனால் அவர் இலங்கைக் குடியுரிமை உள்ளவரா என்றால் இல்லை.

எனவே, இலங்கையின் இன்றைய அரசியல்



அமைப்புச் சட்டத்தின்படி, இரட்டைக் குடியுரிமை விடயம் பலரின் நித்திரையைக் கெடுக்கும் ஒன்றாக இருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பாதிக்கப்படுபவர்கள் அரசியல் பலம் வாய்ந்தவர்களாக இருந்தால் பரிகாரம் தேடுவதில் வெற்றியடையலாம்.

பரிகாரம் என்னவென்றால், 19 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள இரட்டைக் குடியுரிமையை என்னும் தகைமையீனம் தொடர்பான வரியினை, புதிய அரசால் தேர்தல் முறை தொடர்பாக விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்படும் 20 ஆவது திருத்தச் சட்டத்தில் ஒரு சரத்தினைச் சேர்ப்பதன்மூலம், பின்னோக்கிச் செயற்படக்கூடிய வகையில்(Retrospective) நீக்கிவிட்டால் அது இந்த இக்கட்டுக்குள்ளானவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

எதுவும் நடக்கும் நமது இலங்கைத்திருநாட்டில் அதுவும் நடக்கலாம். யாருக்குத் தெரியும்?

## சிந்துவெளி நாகரிகம் சுனாமியால் அழிந்ததா?

### பாலையிலும் பசுமை கண்ட சிந்துவெளி மக்கள்



குஜராத்தின் கட்ச் மாவட்டத்தின் தலைநகரான புஜ் நகரில் இருந்து 200 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் தோலா விரா கிராமம் அசாதாரணமான வரலாற்றைக் கொண்டுள்ளது.

காதிர் பேட் தீவில் இந்த கிராமம் அமைந்துள்ளது. உள்ள□ர் மக்களால் “கோட்டா திம்பா“ என்று அழைக்கப்படும் இந்த அகழ்வாராய்ச்சிப் பகுதியில், சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிந்து சமவெளி நாகரிக நகரம் இருந்தது.

இந்தியத் தொல்லியல் ஆய்வகமும், காந்திநகரில் உள்ள ஐ.ஐ.டி குழுவினரும் நடத்திய ஆய்வில், தோலா விராவில் மிகப்பெரிய நீர் சேமிப்பு கட்டமைப்பு இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

நிலத்துக்கு கீழே உள்ளவற்றை ரேடார் மூலம் அக்குழுவினர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

நவீனத்துவம் மிக்க நகரமைப்பு, கால்வாய் திட்டம், கட்டடங்கள் ஆகியவற்றுக்கு சிந்து சமவெளி நாகரிகம் புகழ் பெற்றது.

நில அளவை, கலை மற்றும் பிற திறன்களில் சிந்து சமவெளி நாகரிகத்தினர் நிபுணத்துவதுடன் விளங்கியுள்ளனர். தோலா விரா கிராமம் பாலைவனத்தில் அமைந்திருந்தாலும், அது வளம் மிக்க மற்றும் கலாசார பன்முகத்தன்மை மிகுந்த நகரமாக இருந்துள்ளது.

”சிந்து சமவெளி நாகரிக மக்கள் பாலைவனத்துக்குள் ஒரு நவீன நகரத்தையே உருவாக்கியுள்ளனர். தோலா விரா ஒரு சர்வதேச வர்த்தக நகராகவும் இருந்துள்ளது,” என்று டெக்கான் தொல்லியல் கல்லூரியின் துணை வேந்தர், பேராசிரியர் வசந்த் ஷிண்டே பிபிசியிடம் கூறினார்.

”தோலா விரா நகரம் நிறுவப்படும் முன்பே அங்கு ஒரு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதன் புவி அமைப்பு அங்கு ஒரு வர்த்தக நோக்கிலான துறைமுகத்தை நிறுவுவதற்கு ஏதுவாக இருந்துள்ளது.”

”பாலைவனத்தால் அந்த நகரம் சூழப்பட்டிருந்தாலும், அங்கு வாழ்ந்தவர்கள் அதற்கு ஒரு தீர்வைக் கண்டறிந்தனர்.”

”தோலா விரா நகரின் இரு பக்கங்களிலிலும் மான்சர் மற்றும் மான்கர் ஆகிய இரு நதிகள் பாய்ந்துள்ளன. மழைக்காலங்களில் மட்டுமே அந்த நதிகளில் நீரோட்டம் இருந்துள்ளது. எனவே அவற்றின் நீரை தங்கள் நகருக்குத் திருப்ப அவர்கள் ஒரு திட்டம் வகுத்தனர்.”

”நதியின் குறுக்கே தடுப்பணை கட்டி, எப்போதெல்லாம் நீர் பாய்ந்துள்ளதோ அப்போதெல்லாம் நீரை தங்கள் நகருக்கு திசை திரும்பியுள்ளனர். கால்வாய், நிலத்தடி நீர்த் தொட்டி ஆகியவற்றை அவர்கள் கட்டமைத்து நீர்த்த தேவைகளை சமாளித்தனர். இதன்மூலமே அவர்கள் பாலைவனத்துக்குள் பசுமையைக் கொண்டுவந்தனர்,” என்கிறார் வசந்த் ஷிண்டே.

ஹரப்பா நாகரிக காலத்தில் பின்பற்றப்பட்ட அதே முறை இன்று கட்ச் பகுதியில் பின்பற்றப்பட்டால், இப்போதும் இங்கு பசுமையைக் கொண்டுவரலாம் என்று அவர் நம்புகிறார்.

கட்ச் பகுதியில் உள்ள தோலா விரா மற்றும் அகமதாபாத் அருகே உள்ள லோத்தல் ஆகிய நகரங்கள் ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படும் சிந்து சமவெளி நாகரிகத்தின், இன்றைய குஜராத்தில் அமைந்துள்ள, முக்கிய இடங்களாகும்.

சிந்து சமவெளி நாகரிகம் கி.மு 3000 முதல் கி.மு 1500 வரை விளங்கியதாக இந்திய தொல்லியல் ஆய்வகம் கூறினாலும், இது சுமார் 6,000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாக முனைவர் சமர் கண்டு தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் ஷிண்டேவும் சிந்து சமவெளி நாகரிகம் 5,000 ஆண்டுகளுக்கும் மேலான தொன்மையை உடையது என்கிறார்.

”ராக்கிகார்ஹி மற்றும் பிற பகுதிகளில் சமீபத்தில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தகவல் சிந்து சமவெளி நாகரிகம் குறைந்தது 5,500 ஆண்டுகள் பழமையானது என்பதை உணர்த்துகிறது,” என்கிறார் ஷிண்டே.

மத்திய ஆசியாவில் இருந்து வந்த ஆரியர்கள் படையெடுப்பே சிந்து சமவெளி நாகரிகம் அழியக் காரணம் என்று பிரிட்டன் இராணுவ அதிகாரியும், தொல்லியல் ஆய்வாளருமான சர் எரிக் மார்டிமர் வீலர் கூறுவதை மறுக்கும் ஷிண்டே, இயற்கைச் சீற்றமே அந்த நாகரிகம் அழியக் காரணம் என்கிறார்.

சுனாமி ஆழிப்பேரலை தோலா விரா நகரம் அழியக் காரணமாக இருந்திருக்கலாம் என்று அங்கு ஆய்வு செய்தவர்கள் கருதுகின்றனர்.

--- ஜெய் மக்வானா, பிபிசி குஜராத்தி

# அன்னை ஸ்ரீபேச்சியம்மன் ஆலயம்

புலயவெளி பதுளை வீதி மட்டக்களப்பு

## விஷேட பூசைகள்

01/07/2018 சங்கடகர சதுர்த்தி விரதம் - ஞாயிறு
16/07/2018 சதுர்த்தி விரதம் - திங்கள்.
25/07/2018 பிரதோச விரதம் - புதன்.
27/07/2018 பூரணை விரதம் - வெள்ளி.
31/07/2018 சங்கடகர சதுர்த்தி விரதம் - செவ்வாய்.



தினந்தோறும் எமது ஆலயத்தில் மூன்று வேளைப் பூசைகள் நடைபெறும்.

காலைப் பூசை – 7.00 மணி
மதியப் பூசை – 12.00 மணி
மாலைப் பூசை – 6.00 மணி

ஆலய பூசைகள் அனைத்தும் சிவ ஸ்ரீ ஜெயக்குமார் அவர்களினால் நடத்தப்படும்
தொடர்புகளுக்கு - 0771516203





# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு





Rs. 700/-

15 வித்தியாசமான வினாத்தாள்கள் மாணவர்களின் வெற்றிக்கு வழிகாட்டும்

"மாணவர்களின் உன்னதமான வெற்றியை எதிர்பார்க்கும் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஒரு முதல்தர வெளியீடு"

15 எதிர்பார்க்கை வினாக்களுடன் இலங்கையின் பலபகுதிகளைச் சேர்ந்த உள்ளடக்கிய 15 ஆசிரிய வளவாளர்களால் தயாரிக்கப்பட்டு வெளிவந்துள்ளது

"The Leading Tamil Publication in Sri Lanka"

வெளியீடு :- யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்

எல்லா புத்தக சாலையிலும் கிடைக்கும்

10-1/5, ஜிந்துப்பிட்டி வீதி கொழும்பு-13. (Trust Complex - 342 Sea Street) தொ.பே.: 077 6258778

# பூமாலை

வினாத்தாள் தொகுதி விடை, விஷேட கையேடு.

இலங்கையில் மூன்றாவது தடவையாக வெளியாகியுள்ளது.